[illegible]

[illegible]

D
V2'', 31' P06
P06. 2-2
227071

வெளியீடு 2-08-2006

Issued 2-08-2006

# தமிழ்நாடு

# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, மே 26, 2006—தொகுதி 2—எண் 2**

**Friday the 26th May, 2006 —Volume 2—No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

[Price Rs. 3.00

651
13/11/2006

26–5–2006

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. அறிவிப்புகள்—** | |
| (அ) வினாக்கள்–விடைகள் –துறைகள் விரைந்து பதில் அனுப்ப வலியுறுத்தல் | 23-24 |
| (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 24 |
| (இ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேரவையில் நடந்துகொண்டவிதம் குறித்து முடிவெடுக்க அலுவல் ஆய்வுக் குழு கூடுதல் | 123, 137-138 |
| **2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்** | 24-25, 27-108, 123, 124-137 |
| திரு. மு. அப்பாவு | 25-66 |
| திரு. எஸ்.வி. சண்முகம் | 67-90 |
| திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 91-106, 123-132 |
| திரு. துரை சந்திரசேகரன் | 132-137 |
| **3. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு | 25, 26-27 |

பக்கங்கள்

**4. அரசினர் தீர்மானம்—**

அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைத்தல் — 109-123

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 110

திரு. சி. ஞானசேகரன் — 110-112

திரு. கி. ஆறுமுகம் — 113-114

திரு. மு. கண்ணப்பன் — 114

திரு. சி. கோவிந்தசாமி — 115

திரு. கு. செல்வம் — 116

திரு. வை. சிவபுண்ணியம் — 116-118

திரு. போளூர் வரதன் — 118-120

*மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி — 120-123

**5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 138

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227071
சென்னை-600 008
நூலகம்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வைகாசி 12, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037**

**2006 மே 26, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்."

வகைப்படுத்தியும், சுவையாகவும் கருத்துகளைச் சொல்லும் வல்லமையுடையோர் சுட்டிக்காட்டும் பணியை, உலகத்தார் உடனடியாக நிறைவேற்ற முனைவார்கள்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. அறிவிப்புகள்

### (அ) வினாக்கள்–விடைகள் – துறைகள் விரைந்து பதில் அனுப்ப வலியுறுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. உறுப்பினர்களிடமிருந்து பேரவைச் செயலகத்திற்குத் தற்போது வினாக்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவ்விதம் வரப்பெற்ற வினாக்கள் அனுமதிக்கப்பட்டு, விடைகள் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. வினாக்களுக்கான பதில்களைப் பெறுவதற்குச் சிறிது காலம் ஆகும் என்பதால், அதுவரையில் "ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு

விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும்" என்னும் பேரவை விதி 32-ஐப் பேரவையின் அனுமதியுடன் தளர்த்தி, சில நாட்களுக்கு வினாக்கள்-விடைகள் நேரம் இடம் பெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவை விதி 45-ன்படி வினாக்களுக்கான விடைகள், அவை அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து 42 நாட்களுக்குள் அளிக்கப்பட வேண்டும். இக்கால அளவிற்குள் விடைகள் அனுப்ப இயலாத நேர்வில், அதற்குரிய காரணங்களைத் தெரிவித்து, பேரவைத் தலைவரின் இசைவுடன் மேலும் இரண்டு வார கால அவகாசத்தில் விடைகள் கொடுக்கப்படலாம். வினாக்களுக்கான விடைகளை விரைந்து அனுப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளும்பொருட்டு, துறைச் செயலாளர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்குமாறு மாண்புமிகு அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

## (ஆ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் முதல் கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

1. திரு. ப. ரங்கநாதன்
2. திரு. துரை சந்திரசேகரன்
3. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
4. திரு. தி. வேல் முருகன்
5. செல்வி க. பாலபாரதி
6. திரு. வை. சிவபுண்ணியம்

...க் காப்பகம்
சென்னை-600 008
நூலகம்

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்கள்.



**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாளன்று சட்டமன்றப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு " தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்."

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல், திரு. ம.அ. கலிலூர் ரஹமான் அவர்கள்.

**திரு. ம.அ. கலிலூர் ரஹமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்கள் முன்மொழிந்த, மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன். (குறுக்கீடு)

## 3. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

**திரு. எஸ்.வி. சேகர்:** தலைவர் அவர்களே, Point of order. பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம் தீ விபத்து குறித்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் consideration-லே இருக்கிறது. (குறுக்கீடு) ஆய்விலே இருக்கிறது. (குறுக்கீடு) ஆய்விலே இருக்கிறது. உட்காருங்கள். ஆய்விலே இருக்கிறது.

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம், திரு. மு. அப்பாவு அவர்கள். (குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-வது சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை முன்மொழிந்து பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும்... (குறுக்கீடு)

@ 139 முதல் 161 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு—தொடர்ச்சி

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கவன ஈர்ப்பை எப்போது எடுத்துக்கொள்வீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என் ஆய்விலே இருக்கிறது. ஆய்வு பண்ணியதற்குப் பிறகுதான் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியும். (குறுக்கீடுகள்) துறைகளுக்கு அனுப்பப்பட்டு... (குறுக்கீடுகள்)

*முற்பகல் 9–35*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் இருப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். எப்பொழுது அதை எடுத்துக்கொள்வீர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். ஆகவே, அதை ஒரு குறிப்பிட்ட நாட்களுக்குள் எடுத்துக்கொள்வதாக நீங்கள் சொல்ல வேண்டும் என்பதுதான் எங்களுடைய வாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆய்வில் இருக்கிறது. ஆய்வு செய்து, துறைகளுக்கு அனுப்பப்பட்டு, அதற்கு பதில் கிடைத்தவுடன் அது உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

**திரு. மு. அப்பாவு:** கடந்த 5 ஆண்டு காலமாக ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள், என்மீது பல பொய் வழக்குகளைப் போட்டு, சிறை தந்து, எனக்கு வாழ்வே இல்லை, அரசியலே முடிந்து விட்டது என்று சொன்னபோது...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன விஷயம் என்று சொல்லுங்கள். உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார் அல்லவா? உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். அவர் பேசிக் கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** எனக்குப் புகலிடம் கொடுத்து, மீண்டும் ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்து, எனக்குத் தாயாகவும், தந்தையாகவும்... (குறுக்கீடுகள்)





**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியது ஒரு sensitive issue. பட்டினப்பாக்கத்தில், சீனிவாசபுரத்தில் அடிக்கடி தீ விபத்து ஏற்பட்டு, மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்ற அந்தக் கருத்தை உடனடியாக எடுத்து விவாதிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். எனவே, இதன் அவசியத்தைக் கருதி இரண்டு, மூன்று நாட்கள் என்று சொன்னால், அவர்களும் அதுகுறித்து நிறைவு பெற்றிருப்பார்; ஆனால், இது எப்போது ஆய்வுக்கு வந்து, இதை எப்போது எடுத்துக்கொள்வீர்கள் என்பதுதான் எங்கள் கேள்வி.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுக்கு எப்போது எடுத்துக்கொள்ளப்படும் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கிறார். அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, ஒரு சபாநாயகர் இருந்தார். இப்படித்தான் நாங்கள் கேட்போம். நீங்களாவது ஆய்வில் இருக்கிறது என்கிறீர்கள். அவர்கள் அறையில் வந்து கேளுங்கள் என்பார்கள். ஆக, இங்கேயாவது பதில் சொல்லியிருக்கிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினாலே, பொதுவாக, கவர்னர் உரையின்போது, ஒத்திவைப்புத் தீர்மானங்களோ, கவன ஈர்ப்புகளோ எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. ஏனென்று கேட்டால், எந்த விஷயத்தைப் பற்றியும் பேசலாம். ஆக, அவ்வளவு அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தால், அந்த உறுப்பினரையே இந்த கவர்னர் உரைமீது பேசச் சொல்லியிருந்தால், சீனிவாசபுரத்தைப் பற்றியும் பேசலாம்; ராமாபுரத்தைப் பற்றியும் பேசலாம்; ஆகவே, அனுமதி அதற்குத் தேவையில்லை.

**திரு. கே. பாண்டுரங்கன்:** அறையில் வந்து கேட்டாலாவது தேதியைக் குறிப்பிட்டுச் சொல்வீர்களா? (குறுக்கீடுகள்) அறையில் வந்து கேட்டாலாவது தேதியைக் குறிப்பிட்டுச் சொல்வீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆய்விலே அனுமதிக்கப்பட்ட பிறகுதான், தேதி குறிப்பிடப்படும்.

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**திரு. மு. அப்பாவு:** மீண்டும் ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் தி.மு. கழக வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பளித்து...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** எனக்குத் தாயாகவும் தந்தையாகவும் எங்கள் குடும்பத்தினுடைய ஒளி விளக்காகவும் இருந்து, என்னை அரவணைத்து, காத்து வழிநடத்துகின்ற, உலகத் தமிழர்களின் நெஞ்சத்தில் நீங்காத இடத்தைப் பெற்று, தமிழ்மொழிக்குச் செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுத் தந்த (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், ஐந்தாவது முறையாக தமிழக மக்கள் மட்டுமல்ல, உலக மக்களுடைய நம்பிக்கையைப் பெற்று, அரியணை ஏறியிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அவை முன்னவர் மாண்புமிகு இனமான பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக, என்னுடைய தொகுதியில் நண்பகலில் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது, ராதாபுரம் தொகுதி மக்களிடையே வாக்குகள் கேட்டு, என்னை வெற்றி பெறச் செய்து இம்மாமன்றத்திற்கு அழைத்து வந்த, மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்கு கூட்டணித் தலைவர்களுக்கும், தோழர்களுக்கும், எனக்கு வாக்களித்து இம்மாமன்றத்திற்கு மூன்றாவது முறையாகத் தேர்ந்தெடுத்து அனுப்பிய தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்த முன்னாள் முதல்வர் அவர்கள் நம்முடைய பத்திரிகையாளர்களைச் சந்தித்து அவர் சொன்ன பதில், கண்ணியமான முறையில் சட்டசபையையும் ஆட்சியையும் (குறுக்கீடுகள்) கண்ணியமான முறையில் சட்டசபையையும் ஆட்சியையும்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். அனுமதி வாங்கித்தான் பேச வேண்டும். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைதி காக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 9–40*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் உரையாற்றும்பொழுது ஒரு தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்; தவறான தகவல். வெற்றி வாய்ப்பை இழந்த முன்னாள் முதல்வர் என்று குறிப்பிட்டது தவறு.



*அவர்கள் தொகுதியில் அவர் வெற்றி வாய்ப்பை இழக்கவில்லை. வேண்டுமானால் அவர்களுடைய கட்சி, ஆளுங்கட்சியாக இருந்த அந்த வாய்ப்பை இழந்து இருக்கலாமே தவிர, அந்தத் தலைவர் அவர்கள் வெற்றி வாய்ப்பை இழக்கவில்லை என்று திருத்திக்கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்)*

**திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அவர்களுடைய கட்சி வெற்றி வாய்ப்பை இழந்து ஆட்சிப் பொறுப்பை இழந்துவிட்டது என்று சொல்கிறேன். அந்த அளவில் அவர்... (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவர் பேசிக் கொண்டிருக்கிறார் அல்லவா? (குறுக்கீடு)*

**திரு. மு. அப்பாவு:** *அவர் வெற்றிவாய்ப்பை இழந்து, பத்திரிகையாளர்களை சந்தித்தபோது... (குறுக்கீடு) அவர் ஆட்சி நடத்திய காலத்தில் சட்டசபையையும், ஆட்சியையும் கண்ணியமான முறையில்...*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேசுங்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவரைச் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் தலைவர் பேசுங்கள்.*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அய்யாவு அவர்கள் பேசுகின்றபொழுது – திரு. அப்பாவு அவர்கள் – மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு அவர்கள் பேசுகின்றபொழுது, முன்னாள் முதலமைச்சர், வெற்றி வாய்ப்பை இழந்தவர் என்று இங்கே சொன்னார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் – அங்கு இருப்பவர்கள் எல்லாம் புடம்போட்ட தங்கம் என்பதனை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்களைப்போல், ஒவ்வொரு தேர்தலுக்கும் ஒரு கட்சியாகத் தாவுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) வெளவால் அல்ல.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இப்படிப் பேசக்கூடாது. (குறுக்கீடு) அவர் பேசினார் என்று நீங்கள் பேசினால் என்ன வித்தியாசம் இருக்கிறது? (குறுக்கீடு) அவர் பேசுவதற்கும் நீங்கள் பேசுவதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? (குறுக்கீடு) இல்லை. இல்லை, உட்காருங்கள். உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) யாரையும் தாக்கிப் பேசக்கூடாது. (குறுக்கீடு)*

[2006 மே 26

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள், உட்காருங்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்படித்தான் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது, உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது என்பார்கள்; பழைய ஞாபகம் போல் இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. அமருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** அவர்கள் பத்திரிகையாளர்களைச் சந்தித்து, தான் ஐந்தாண்டு காலம் கண்ணியமான முறையில் சட்டசபையையும், ஆட்சியையும் நடத்தியதாகக் கூறியிருப்பதை நான் இந்த சட்டசபையிலே...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** இந்த சட்டசபையிலே கூறியிருக்கின்றார்கள் ...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பீட்டர் அல்போன்ஸ் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரங்கம்... (குறுக்கீடுகள்)



2006 மே 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது இடையிலே குறுக்கிடக்கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடித்தபிறகு சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிடாதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் முடித்துவிடுகிறேன் என்று சொல்கிறேன். நானும் Point of Order தான் கேட்கிறேன். I am also on a Point of Order. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு, எதிர்க்கட்சித் தலைவருக்கு வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது. (குறுக்கீடு) உட்காருங்கள். எழுந்துகொண்டே இருக்கிறீர்களே? (கூச்சல்—குழப்பம்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றம் ஆளுநருடைய உரைக்காக அதன்மீது நடைபெறுகின்ற விவாதத்திற்காகக் கூடியிருக்கின்றது. முக்கியமான... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஜெயக்குமார் முதலிலே நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே. அவர் பேசிக்கொண்டிருக்கிறார். ஓர் உறுப்பினர் பேசும்போது இடையிலே குறுக்கிடக் கூடாது, உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) அவர் பேசிவிட்டார்; எதிர்க்கட்சித் தலைவர் பேசிவிட்டார். (குறுக்கீடு)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை சில விதிகளுக்கு உட்பட்டு நடக்கிறது. விவாதத்தின்போதும், உறுப்பினர்கள் பேசுகின்றபோதும், எந்த வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும், எந்த விதிகளைப் பின்பற்றவேண்டும் என்று நம்முடைய சட்டப் பேரவை விதி தெளிவாகச் சொல்லியிருக்கின்றது. அந்த விதி பின்பற்றப்படுகிறதா; அதைப் பாதுகாப்பதற்காக நீங்கள் இந்த அவையில் தலைவராக இருக்கின்றீர்கள். எவையெல்லாம் பேசப்படக் கூடாதோ, எவையெல்லாம் முரணாக இருக்கின்றனவோ, அவற்றைப் பேச அனுமதி தரவேண்டாம். ஆனால்,

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2006 மே 26

அவை பேசப்படுவதற்கு அனுமதி இருக்கின்ற வரை எந்தக் கருத்துகளையும் இந்த அவையிலே பதிவு செய்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு மாற்றுக் கருத்து இருந்தால், அவர்கள் தரப்பிலே பேசுகின்றபோது. அதற்கான அரசியல் விளக்கமோ, அதற்கான தன்னிலை விளக்கமோ தரலாம். எனவே, நான் உங்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்வேன். இந்த அவையிலே நாங்கள் எல்லாம் விவாதம் செய்வதற்கு மூன்று நாட்கள், இரவு பகலாக விழித்து, இந்த ஆளுநர் உரையினைப் படித்து. அதற்கான தகவல்களைத் தெரிந்து, இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதற்காக வந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே வீணாக லாவணிக் கச்சேரி நடத்த வரவில்லை. எனவே, நான் உங்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்வேன். இந்த அவையினுடைய நேரத்தையும், எங்களுடைய உழைப்பையும் பாதுகாக்கவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. ஆகவே, நீங்கள் எங்களுக்கு வாய்ப்பு தந்து, உறுப்பினர்களைச் சுதந்திரத்தோடு பேச அனுமதிக்க வேண்டுகிறேன்.

முற்பகல் 9–45

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர் அடுத்துப் பேச இருக்கிறார். ஏதாவது சொல்ல வேண்டுமென்றால், உங்களுடைய கட்சி உறுப்பினர்மூலம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் அமருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர், முதலில் உட்காருங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரேயொரு second. Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முன்னாள் முதல்வர் அவர்கள்.... (குறுக்கீடுகள்)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. மு. அப்பாவு:** கண்ணியத்தைப்பற்றி பேசியிருக்கின்றார்கள். (குறுக்கீடுகள்) கண்ணியத்தைப்பற்றி பேசியிருக்கின்றார்கள். அவர்கள் கடந்த ஐந்தாண்டு காலம் – இதே சட்டமன்றத்தில்தான் நாங்கள் இருந்தோம். (குறுக்கீடுகள்) அப்போது அவருடைய கண்ணியத்தைப் பற்றி–(குறுக்கீடுகள்)



2006 மே 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சி உறுப்பினர் பேச இருக்கிறார். அவரைவிட்டுச் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிடக் கூடாது. (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் பேசிவிட்டார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** எதிர்க்கட்சித் தலைவர்களைப் பற்றி எப்படியெல்லாம் பேசினார்கள் என்பதை நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். எதிர்க்கட்சித் தலைவர்களை 'போக்கிரித்தனமான' என்றும், 'குழாய்ச் சண்டை கோமாளிகள்' என்றும், 'காலி டப்பா' என்றும், 'மரம் வெட்டி' என்றும் பேசியதை இந்தச் சபை ஒருபோதும் மறந்ததில்லை. இந்தச் சபை அவைக்குறிப்பில் இன்றும் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சித் தலைவர்களைத்தான் இப்படி இழிவாகப் பேசினார்கள் என்றால், நீதிபதிகளையாவது விட்டுவைத்தார்களா? நீதிபதிகளைப் பற்றிப் பேசியது அவைக்குறிப்பில் இருக்கின்றது. (குறுக்கீடுகள்) அவற்றை நான் பேசுவது.. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய உறுப்பினர் பேசும்போது, இதை மறுத்துப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்கள் உறுப்பினர் பேசும்போது, மறுத்துப் பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு. அப்பாவு:** அவைக்குறிப்பில் உள்ளதைத்தான் சொல்கின்றேன். 'நீதிபதிகள் வாய்க்கு வந்தபடி பேசுகிறார்கள். நீதிபதிகள் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று பேசுகின்றார்கள். அவர்களும் மனிதர்கள்தான், அவர்களுக்கும் விருப்பு, வெறுப்பு உள்ளது. (குறுக்கீடுகள்) பேசக் கூடாதவற்றையெல்லாம் பேசுகிறார்கள். அவர்கள் பேசியதை வைத்து (குறுக்கீடுகள்) இந்த அவையில் பேசுவதே அபத்தம் என்று' நீதிபதிகளையே அச்சுறுத்தியிருக்கின்றார். (குறுக்கீடுகள்) ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் ஆரோக்கியமான... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுநர் உரையில்தான் பேசுகிறார். (குறுக்கீடுகள்) ஏதாவது நீங்கள் பேச வேண்டுமென்றால், உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது சொல்லச் சொல்லுங்கள். (கூச்சல்–குழப்பம்) உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) உறுப்பினர்கள் உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) (குறுக்கீடுகள்) முதலில்

அவையிலே அவைத் தலைவர் எழுந்து நின்றால் உறுப்பினர்கள் உட்கார வேண்டும் என்பது அவை விதி. அது தெரியுமில்லையா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் போய் உட்காருங்கள். அதற்குப் பிறகு சொல்கிறேன்.

(திரு. கே. பாண்டுரங்கன் மற்றும் சில அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேரவைத் தலைவர் இருக்கைக்கு அருகில் வந்து கோஷமிட்டனர். அங்கிருந்தே திரு. கே. பாண்டுரங்கன் "கவர்னர் உரையிலா பேசுகிறார்? மாலை நேரப் பொதுக் கூட்டத்தில் பேசுகிறமாதிரி பேசுகிறார். தனிப்பட்ட முறையில் பேசக் கூடாது. விதிகளை மீறுகிறார்" என்று பேசினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதிகளை மீறவில்லை. போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) போய் உட்காருங்கள். உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) நீங்கள் போய் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், உங்கள் உறுப்பினர் பேசும்போது வாய்ப்பைத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உங்கள் உறுப்பினர் பேசும்போது அதற்குப் பதில் சொல்லச் சொல்லுங்கள்.

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களுடைய உரிமையைக் கோரி, பேச வேண்டும் என்று சொல்கின்ற நேரத்தில், நீங்கள் அவர்களுக்கு வாய்ப்புத் தரலாம். ஆனால், சபாநாயகராகிய நீங்கள் உங்களுடைய இடத்திலே உட்கார்ந்துகொண்டு, இந்தச் சபையை நடத்தும்போது, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் பாண்டுரங்கன் போன்றவர்கள், அனுபவம் மிக்கவர்கள்; அமைச்சராக இருந்தவர்கள், அவர்கள் உங்கள் பக்கத்திலே வந்து கையை நீட்டி, உங்களை அச்சுறுத்துவது போலப் பேசுவது... (குறுக்கீடுகள்) சொல்கிறேன்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தவறு. தவறான வார்த்தையைச் சொல்கிறார்கள். தவறு, தவறு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** நான் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். தலைவர் அவர்களே, நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், கடந்த முறை, மாண்புமிகு உறுப்பினர்கள் பொன்முடி அவர்களும், பரிதி இளம்வழுதி அவர்களும் தங்கள் இடத்தைவிட்டு வந்து, சபாநாயகருக்குப் பக்கத்திலே வந்து, நீதி கேட்டார்கள் என்பதற்காக, அவர்கள் எல்லாம் வெளியேற்றப்பட்டார்கள். (குறுக்கீடுகள்)



**திரு. கே. பாண்டுரங்கன்:** தவறு. தவறான வார்த்தையைச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவர்கள் எல்லாம் வெளியேற்றப்பட்டார்கள். நான் சொல்வது, இந்த அவை முறையாக நடக்க வேண்டுமென்றால் மாண்புமிகு உறுப்பினர் பாண்டுரங்கன் அவர்களோ, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களோ எதை வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், தாங்கள் இருக்கின்ற இடத்திற்கு வந்து, அங்கே வந்து பிரச்சினைகளை எழுப்புவது, இந்த அவைக்கு முரணானது, சட்டத்திற்கு முரணானது. எனவே, இந்த அவையினுடைய உரிமைகளை நீங்கள்தான் பாதுகாக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

*முற்பகல் 9–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் நீங்கள் எல்லோரும் போய் உட்காருங்கள், உட்காருங்கள். உங்கள் உறுப்பினர் பேசும்போது கருத்தைச் சொல்லுங்கள். ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது இடையிலே குறுக்கீடு செய்வது முறையல்ல. உட்காருங்கள். அவர் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிடுவது முறையில்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆரோக்கியமான விவாதத்தை நடத்துவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கலைஞர் அவர்கள், தயாராக இருக்கின்றார்கள். தி.மு. கழகத்திற்கு எதிர்காலம் இல்லையென்று கூறியிருந்தார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார் உட்காருங்கள். உங்கள் உறுப்பினர் பேசும்போது பதில் சொல்லட்டும்.

**திரு. மு. அப்பாவு:** தி.மு.கழகம் ஒரு மாநிலக் கட்சியாக இருந்தாலும், கடந்த காலங்களில் தேசிய அளவில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கக்கூடிய வல்லமையை தலைவர் கலைஞர் அவர்கள் பெற்றிருந்தார் என்பதை யாரும் மறந்து விட முடியாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் முதலில்.

**திரு. மு. அப்பாவு:** 1969 ஆம் ஆண்டு நம்முடைய மாண்புமிகு முன்னாள் பாரதப் பிரதமர் மறைந்த அன்னை இந்திரா காந்தி அவர்கள் காங்கிரஸ் பேரியக்கத்தில் ஏற்பட்ட பிளவின்போது, ஆட்சிக்கு ஆபத்து

ஏற்பட்டபோது, நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆதரவைக் கொடுத்து... (குறுக்கீடுகள்) இந்தியத் திருநாட்டில் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தியினுடைய ஆட்சியை நீடிக்கச் செய்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முதலில் மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** 1989–ல் மத்தியிலே தேசிய முன்னணி ஆட்சி அமைந்து, பிரதமராக வி.பி.சிங் பொறுப்பேற்க அடித்தளம் அமைத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் விதியை follow பண்ணுங்கள். பேரவைத் தலைவர் எழுந்தாகிவிட்டால் உறுப்பினர்கள் உட்கார வேண்டும். அதுதான் முறை. உட்காருங்கள் முதலில். உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது குறுக்கிடுவது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். அடுத்தாற்போல அவர் பேசி முடித்த பிறகு உங்கள் உறுப்பினருக்கு வாய்ப்பு இருக்கிறது. அப்போது பதில் சொல்லலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லாம் அமைச்சர்களாக இருந்தவர்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லாம் அமைச்சர்களாக இருந்தவர்கள். அவைத் தலைவர் எழுந்து நின்றால் உறுப்பினர்கள் உட்கார வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். நீங்கள் எல்லாம் அமைச்சர்களாக இருந்தவர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். பேசலாம். கொஞ்சம் பொறுங்கள். உங்கள் உறுப்பினர் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. நீங்கள்தான் யார் பேச வேண்டும் என்று பட்டியல் எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். அந்தப் பட்டியல்படி அவர் பெயரைக் கூப்பிடும்போது, அவர் வந்து என்ன குறையோ அதைச் சொல்லட்டும். (குறுக்கீடு) ஆகவே, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள். திரு. ஜெயக்குமார், உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) திரு. கருப்பசாமி, உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு நம்முடைய வி.பி. சிங் அவர்களை, பாரதப் பிரதமர் ஆக்கிய பெருமை டாக்டர் கலைஞரைச் சாரும். 1996 ஆம் ஆண்டு தேவகவுடா, ஐ.கே. குஜ்ரால், ஆக 5 பாரதப் பிரதமர்களை... (குறுக்கீடுகள்)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முதலில் உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சித் தலைவர் மட்டும் பேசுவதற்கு அனுமதிக்கிறேன்.

முற்பகல் 9–55

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக சபையில் மாண்புமிகு உறுப்பினர்கள் உரையாற்றுகின்றபோது, அவர்கள் விதிக்குப் புறம்பான கருத்துகள் பேசுகின்றபோது, அதை எதிர்க்கட்சித் தலைவரோ, மற்ற உறுப்பினர்களோ சுட்டிக்காட்டிப் பேசுவதற்கு வாய்ப்பு கேட்கும்போது, அவர்களுக்குப் பேரவைத் தலைவர் வாய்ப்பு வழங்க வேண்டும். அதுதான் சட்டமன்றத்தினுடைய மரபு. அவர் உட்காருங்கள், உட்காருங்கள், உட்காருங்கள் என்ற வார்த்தையைத்தான் சொல்லிக் கொண்டிருக்கின்றாரேயொழிய, கிட்டத்தட்ட அரை மணி நேரமாக சபை நடந்து கொண்டிருக்கின்றது; நாங்கள் அரை மணி நேரமாக வாய்ப்பு கேட்டுக் கொண்டே இருக்கின்றோம்; ஒரு தடவைகூட சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள் (குறுக்கீடு) பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பேசுவார் என்று ஒரு தடவைகூட இந்த அரை மணி நேரத்தில் அவர் எங்களுக்கு வாய்ப்பு வழங்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் நீதிபதியை பற்றி இங்கு குறிப்பிட்டதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று நான் இங்கு கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த சபைக்குறிப்பில் இருப்பதை மட்டும்தான் கூறியிருக்கின்றேனே தவிர, நான் என்னுடைய கருத்தைக் கூறவில்லை. ஏற்கெனவே இந்த சபைக்குறிப்பில் பதிவு செய்யப்பட்ட வார்த்தையை மட்டும்தான் (கூச்சல்–குழப்பம்) நான் இங்கே பதிவு செய்திருக்கின்றேன். சிலர் வாழ்க்கையை ஒரு போராட்டம் என்று வர்ணிப்பார்கள். ஆனால், டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் போராட்டமே வாழ்க்கையாகிவிட்டதை இங்கே கனத்த இதயத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். தலைவர் கலைஞர் நடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்தால் எத்தனை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்முடி.

[2006 மே 26

*மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசிய கருத்து அன்று சட்டமன்றத்திலே பேசி, பதிவாகி இருக்கிற கருத்தைத்தான் அவர் சொல்லியிருக்கிறாரே தவிர, அது புதிய கருத்து அல்ல; சட்டமன்றத்திலே பதிவான கருத்தை, சட்டமன்றத்திலே பதிவாகி இருக்கிற ஒரு கருத்தை, நீதிபதிகளைப் பற்றி அன்றைய முதலமைச்சர் இந்தச் சட்டமன்றத்திலே சொன்ன வார்த்தைகளைத்தான் இந்த உறுப்பினர் சொல்லி இருக்கிறாரேதவிர, பதிவான வார்த்தைகள் இல்லை என்று சொன்னால், பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நீக்கலாம்; பதிவாகி இருக்கும் என்று சொன்னால் அவற்றை நீங்கள் அனுமதிக்க வேண்டும். இங்கு யாராவது பதிவாகவில்லை என்று நிரூபித்தால், அதை நீங்கள் நீக்குவதற்கு எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் தவறான கருத்தை சொன்னால், அதை மாற்றுக் கட்சியினர் இப்படி தவறான கருத்தைச் சொன்னார் என்று மறுப்பதற்கு உரிமை உண்டு. இன்னும் சொல்லப்போனால், தவறான செய்தியை இந்த மன்றத்திலே தெரிவித்தால் பேசிய உறுப்பினர்மீது உரிமைப் பிரச்சினை கொண்டு வருவதற்கும் சட்டத்திலே இடம் இருக்கிறது. ஆகையினாலே, இந்த மன்றத்திலே பேசிய பேச்சை நான் பேசுகிறேன் என்று பொறுப்பேற்று, உறுப்பினர் பேசுகிறபோது, அதற்கு இடம் அளித்து, பொறுமையாக இருந்து, முடியுமானால் நீங்கள் மறுக்கலாம், இல்லாவிட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாமே தவிர, இப்படி எழுந்து பேசுவது முறையாகாது. (கூச்சல்— குழப்பம்)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நான் கூறிய கருத்து அவைக்குறிப்பில் இருந்தால் அதை வைத்துக் கொள்ளுங்கள், இல்லை என்றால், அதை நீக்கிவிடவேண்டும் என்பதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் தான் பேசிய கருத்துக்கு பொறுப்பேற்றுக் கொண்டால், அதை ஏற்றுக்கொள்வதுதான் அவையின் மரபு. அவர் பேசிய கருத்துக்கு பொறுப்பு ஏற்றிருக்கிறார். (குறுக்கீடுகள்) அது தவறு என்றால் மறுத்துப் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது தவறான தகவல் கொடுத்தால், அதுகுறித்து உரிமைப் பிரச்சினை நீங்களே எழுப்பலாம்.



2006 மே 26]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே பேசியிருக்கிற பேச்சைப் பேசுவதற்கு ஆதாரம் தேவையில்லை. வெளியிலே பேசினது வந்தால்தான், ஆதாரம் கொடுக்கவேண்டும். சட்டமன்றத்திலேயே பேசிய பேச்சு, அவைக்குறிப்பிலே இடம் பெற்றிருக்கிற அந்த வார்த்தையைச் சொன்னால், அதற்கு ஆதாரம் தேவையில்லை; பொறுப்பேற்றுக் கொள்கிறார். அதுதான் மரபு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், ஒரு நிமிஷம் கேளுங்கள். அவைக்குறிப்பில் இருந்தது என்றால் அது ஏற்றுக்கொள்ளப்படும். அவைக்குறிப்பில் இல்லையென்றால் நீக்கப்படும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

முற்பகல் 10-00

**திரு. மு. அப்பாவு:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இந்திய அரசியல் வரலாற்றில் (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) இந்திய அரசியல் வரலாற்றில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) தாங்கள் தெளிவாக ஒரு தீர்ப்பை அளித்துவிட்டீர்கள். அவைக்குறிப்பில் அது இடம்பெற்றிருந்தால், இவர் சொன்னதுபோல இருக்கும். இல்லையென்றால், எடுத்து விடுகிறேன் என்று ஒரு தீர்ப்பு வழங்கிவிட்ட பிறகும் உறுப்பினர்கள் எழுந்து நின்று தகராறு செய்வது உங்கள் உரிமையை மீறிய செயலாகக் கருதுகிறேன். (குறுக்கீடுகள்) இதுகுறித்து தெளிவான ஒரு முடிவைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..(குறுக்கீடுகள்)

[2006 மே 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்த அவையிலே, ஆளுநர் உரைமீது நடைபெறுகிற விவாதத்தில் பங்கேற்கிறபோது, உறுப்பினர்கள் தவறான கருத்துகளைச் சொன்னால், அதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மறுத்து கருத்துகளைச் சொல்வது என்பது வழக்கம். (குறுக்கீடுகள்) இல்லை, கொஞ்சம் தயவுசெய்து — (குறுக்கீடுகள்) கொஞ்சம் தயவு செய்து (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். தயவுசெய்து என்னை அனுமதியுங்கள். (குறுக்கீடு) இல்லை, நாங்கள் எல்லாம் ஒன்றாக இருந்தவர்கள்தான். எனக்குத் தெரியும், நான் சொல்கிறேன். கொஞ்சம் தயவுசெய்து என்னைச் சொல்ல அனுமதியுங்கள். (குறுக்கீடு) தெரியும், நாங்களும் ஐந்து வருடங்கள் அனுபவித்திருக்கிறோம். (குறுக்கீடு)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள் நீங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** குறிப்பாக, பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசிக் கொண்டிருக்கிறபோது, நான் பேசுவதிலே மாற்று கருத்து இருந்தால், (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் பின்னால் சொல்லலாம். அதற்கு நான் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். நான் திரும்பத் திரும்ப பணிவோடு கேட்டுக்கொள்வது.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும் போது, இப்படி எழுந்து நின்று பேசக்கூடாது. உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இந்த அவையினுடைய நடவடிக்கைகளை, இந்தச் செயல்பாடுகளை நாடே கவனித்துக் கொண்டிருக்கிறது. ஓர் அரங்கத்திற்குள்ளே நாம் பேசிக் கொண்டிருப்பதாக, தயவுசெய்து உறுப்பினர்கள், அப்படி கவனத்தில் கொள்ளக்கூடாது. நம்மைத் தமிழகம் முழுவதும் பார்த்துக் கொண்டிருக்கிறது; இந்தியாவே பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சபையினுடைய மரபுகளை எப்படியெல்லாம் பாதுகாக்க வேண்டுமென்பதை நாம் கடந்த காலங்களிலும் அனுபவித்திருக்கிறோம், அதற்கு முன்பும் எப்படி நடந்தது என்பதும் எல்லோருக்கும் தெரியும். அதனாலே, இந்த முதல் நாள் நிகழ்ச்சி என்பதிலே மாற்றுக் கருத்துகள் இருக்குமானால், அதற்கு மறுப்புச் சொல்லலாம். ஆனால், தொடக்க



2006 மே 26] [திரு. வை. சிவபுண்ணியம்]

நிகழ்ச்சியிலேயே என்ன சொல்லப் போகிறார்கள் என்று தெரிவதற்கு முன்னாலேயே மறுப்பது என்பதும், சபையிலே பேசிய பேச்சை திரும்ப ஓர் உறுப்பினர் சொல்வதற்கே மறுப்பு சொல்வது என்பதும், அதற்கு ஆதாரம் கேட்பது என்பதும், அது இந்தச் சபையிலே இல்லாத ஒரு செயலாக இருக்கிறது. நான் பொதுவான நிலையிலேயிருந்து சொல்கிறேன். இதிலே என்னுடைய தனிப்பட்ட கருத்து அல்ல. ஆகவே, இந்தச் சபையினுடைய கண்ணியம் பாதுகாக்கப்படவேண்டும், ஜனநாயகபூர்வமாகச் செயல்படவேண்டும். அதற்கு யாராக இருந்தாலும் ஒத்துழைப்பு கொடுக்கவேண்டும். அதன்மீது சட்டரீதியான நடவடிக்கை தேவைப்படும்பட்சத்தில், பேரவைத் தலைவர் அவர்கள் உரிய முறையிலே எங்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பாருங்கள். ஏற்கெனவே நான் தீர்ப்பு சொல்லியாகிவிட்டது. அதாவது, அவைக்குறிப்பிலே அது இருந்ததென்றால், அது ஏற்றுக்கொள்ளப்படும். இல்லையென்றால், அது நீக்கப்படும் என்று சொல்லியாகிவிட்டது. அதற்குப் பிறகும் உங்களுக்கு அதிலே என்ன விவாதம் இருக்கிறது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், முதலிலே உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) அதற்குப் பிறகு எதுவும் இல்லை, உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு, பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியல் வரலாற்றில் தலைவர் கலைஞர் சந்தித்த அடக்குமுறைகளைப் போல எந்த அரசியல் தலைவரும் சந்தித்திருக்க முடியாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே உறுப்பினர்கள் உட்காருங்கள். ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது மற்ற உறுப்பினர்கள் எழுந்து நிற்கக்கூடாது.

**திரு. மு. அப்பாவு:** இத்தகைய அடக்குமுறைகளை கலைஞர் எப்படிச் சந்தித்தார் என்பதைக் கூர்ந்து கவனிக்கவேண்டும். கடந்த 60 ஆண்டு காலமாக எழுத்தின்மூலமாகவும், பேச்சின்மூலமாகவும், அடக்குமுறைகளைச் சந்தித்து, இன்றைக்கு வெற்றிச் சாதனை படைத்து, 21 ரூபாய் விலையுள்ள பேனாவினால், தமிழகத்தில் 5 ஆண்டு காலம் நடைபெற்ற கொடுங்கோல் ஆட்சிக்கு முடிவுரை எழுதி வரலாறு படைத்துள்ளார் டாக்டர் கலைஞர் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே தீர்ப்புச் சொல்லிவிட்டேன், உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழக மக்களிடையே சட்டமன்றத் தேர்தலை 8 ஆம் தேதி சந்தித்தார். 11 ஆம் தேதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. 13 ஆம் தேதி நேரு உள் விளையாட்டு அரங்கத்திலே டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றார். பொறுப்பேற்ற மறுகணமே தேர்தல் வாக்குறுதிகளைக் கூறி, தேர்தலிலே கூறிய ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்குத் தருவோம் என்பதற்கு முதல் கையெழுத்தை இட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் உள்ள ஏழையெளிய மக்களுக்கு வாழ்வளித்தவர் டாக்டர் கலைஞர் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். உலக வரலாற்றில் எந்த ஒரு முதல்வரும் செய்யமுடியாத ஒரு காரியம், இதுவரை செய்ததில்லை, இனிமேலும் செய்யப்போவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிப் பொறுப்பேற்ற அடுத்த நிமிடமே (மேசையைத் தட்டும் ஒலி), இலட்சக்கணக்கான மக்கள் மத்தியில், இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள், 150 நாடுகளிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ன நடைபெறுகிறது என்பதை; நேரடியாக ஒளிபரப்பிக் கொண்டிருக்கின்றார்கள்; பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தேர்தலிலே இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தருவோம் என்று சொன்னோம். பல பேர் இது நடக்கிற காரியமா என்று சொன்னார்கள். ஆனால், டாக்டர் கலைஞர் சொன்னதைச் செய்பவர், செய்வதைச் சொல்பவர் (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியைக் கொடுத்து, தமிழக மக்களுடைய, ஏழையெளிய மக்களுடைய வாழ்விலே, வயிற்றிலே பாலை வார்த்தவர் டாக்டர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–05

அதுமட்டுமா, இரண்டு முட்டைகள் போடுவோம் என்று சொன்னார். மாணவர்களுக்கு, சத்துணவோடு இரண்டு முட்டைகள் போடுவோம் என்று சொன்னார். அடுத்த கையெழுத்தாக இரண்டு முட்டைகள்; எந்த தேதி முதல் போடுகிறேன் என்று சொன்னார்? பெருந்தலைவர் காமராஜர் இந்த நாட்டுக்காக பத்து ஆண்டுக்காலம் பணியாற்றி, 10 ஆண்டுக்காலம் சிறையிலே இருந்து, இந்த நாட்டு மக்கள் படிக்கவேண்டும் என்று கூறினார். கடந்த 5 ஆண்டுக்காலம், அவர் பிறந்த தினத்தை மாணவர் தினமாக அறிவிக்க வேண்டும் என்று பலமுறை கேட்டோம். அப்போது யாரும் அதற்கு முடிவெடுக்கவில்லை. ஆனால், தேர்தல்





அறிக்கையிலே கூறினார்; பெருந்தலைவர் காமராஜர் பிறந்த தினம், கல்வி வளர்ச்சி தினமாக அறிவிக்கப்படும் என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதைச் செய்தவர் டாக்டர் கலைஞர். பெருந்தலைவர் காமராஜருக்கு இவ்வளவு பெரிய பெருமையைச் சேர்த்தவர், வாழும் காமராஜராக நம்மிடையே ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று இருக்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் கலைஞர் என்பதை எண்ணி நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். அதுமட்டுமா? ஏழையெளிய மாணவ மாணவியர்களுக்கு மதிய உணவிலே சத்துணவோடு முட்டைகள் கொடுத்தார். அன்றைய முதல்வர் அவர்கள் ஒரே கையெழுத்திலே ஒன்றே முக்கால் இலட்சம் ஆசிரியர்கள், அரசு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பினார். ஆனால், இன்றைய முதல்வர் அவர்கள் 21 ரூபாய் விலையே உள்ள ஒரு பேனாவினால் ஒரு கையெழுத்தைப் போட்டார்; 53 இலட்சம் விவசாயிகளுக்கு, 6,866 கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) கட்டமுடியாமல் ஏங்கித் தவித்த விவசாயிகளுக்கு—ஒரே கையெழுத்தில் 53 இலட்சம் விவசாயிகளுக்குக் கடனைத் தள்ளுபடி செய்தார். சொன்னதைச் செய்தவர் டாக்டர் கலைஞர் என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்துகின்றேன்.

அதேபோன்று, 2001–லே முதல் கையெழுத்திட்டார் முன்னாள் முதல்வர் அவர்கள். எதற்காக என்று இந்த அவையிலே இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் தெரியும். 1996 முதல் 2001 வரை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மலிவு விலையில் மது கொடுக்கப்பட்டது. முதல் கையெழுத்தாக 2001–லே ஆட்சிப் பொறுப்பேற்றதும், முன்னாள் முதல்வர் அவர்கள் அந்த மலிவு விலை மது இரத்து என்று சொல்லி நாடு முழுவதும் தம்பட்டம் அடித்தார்கள். எத்தனை நாள் அந்தத் திட்டம் இருந்தது தெரியுமா? ஆட்சிப் பொறுப்பேற்றபின், 1–1–2002–ல் அது இரத்து செய்யப்பட்டு, மீண்டும் மலிவு விலை மது தொடங்கப்பட்டது. அது எத்தனை நாட்கள் தெரியுமா? இரண்டே மாதம். 50 கோடி ரூபாய் நஷ்டம். ஆகவே, நாங்கள் யாரையும் மது விற்க அனுமதிக்கமாட்டோம், நாங்களே நடத்துவோம் என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) TASMAC கடைகள்மூலம் மதுக் கடைகளை ஆரம்பித்து, தமிழகத்தில் ஐந்து மதுபான தொழிற்சாலைகளுக்கு, TASMAC கம்பெனியிலிருந்து எவ்வளவு சரக்கு வாங்கவேண்டுமென்று இலக்கு நிர்ணயம் செய்து, ஒரே ஒரு கம்பெனி, ஆறாவது கம்பெனி, Midas Golden Distilleries-க்கு மட்டும், எவ்வளவு தயாரித்தாலும், அவ்வளவையும் வாங்கிக் கொள்ளலாம் என்று ஓர் அனுமதியைக் கொடுத்து, இன்று வரை...(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது)

[2006 மே 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தை காண்பிக்கச் சொல்லுங்கள் முதலில். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டை இங்கே அள்ளி வீசிக்கொண்டிருக்கிறார். ஆதாரத்தை சபாநாயகரிடம் கொடுத்துவிட்டுப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைக் கேட்கின்றேன். Midas Golden Distilleries என்ற ஒரு கம்பெனி தமிழகத்தில் இல்லையா? அவர்கள் தொழிற்சாலையில் உற்பத்தி செய்த சரக்கை TASMAC-லிருந்து யாருமே கொள்முதல் செய்யவில்லையா? அதை நீங்கள் மறுக்கின்றீர்களா? (குறுக்கீடுகள்) அதுமட்டுமா, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒரு தொழிற்சாலை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (குறுக்கீடுகள்) தமிழகத்திலே ஆறு மதுபான தொழிற்சாலைகளில் இருந்து... (குறுக்கீடு)

முற்பகல் 10–10

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Midas Golden Distillery-யிலிருந்துதான் அதிகமாகச் சரக்கு கொள்முதல் செய்யப்பட்டது என்று உண்மைக்கு மாறான தகவலை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிக்கொண்டிருக்கின்றார்கள். இதற்கு முன்னால் பேசியதை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். அவர் ஆதாரத்தைக் கொடுத்ததற்குப் பின்னால் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்கள், அவர்களுக்கு அனுமதி தரலாம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இங்கு இரண்டு வார்த்தைகளால் ஒரு விரும்பத்தகாத அமளி ஏற்பட்டது. விரும்பத்தகாத என்பது ஆளுங்கட்சிக்கும் விரும்பத்தகாதது, எதிர்க்கட்சிக்கும் விரும்பத்தகாதது. பொதுவாக இந்த அவைக்கு விரும்பத்தகாதது என்ற பொருளிலேதான் சொல்லுகின்றேன். முதலில் நம்முடைய அப்பாவு அவர்கள் பேசும்போது, வெற்றி வாய்ப்பை இழந்த முன்னாள் முதல்வர் என்று சொன்னார். நான் உடனே எழுந்து அதைத் திருத்தி அது தவறான தகவல், அப்படிச் சொல்லி இருக்கக்கூடாது என்று நான் அதைத் திருத்தி இருக்கிறேன்.



2006 மே 26] [கலைஞர் மு. கருணாநிதி]

அடுத்து, நீதிபதிகளைப்பற்றி இந்த மாமன்றத்திலே ஏற்கெனவே பேசப்பட்ட கருத்துகளை அவர் குறிப்பிட்டார். சட்டம் பயின்ற நம்முடைய மாண்புமிகு ஜெயக்குமார் போன்றவர்களும் மற்ற உறுப்பினர்களும் அதை மறுத்தார்கள். இந்த அவையிலே ஏற்கெனவே பேசப்பட்டிருக்கிறது என்று சொல்லியும்கூட, அதை யாரும் ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லை. ஆனால், 2005 பிப்ரவரி 4 ஆம் தேதி ஆளுநர் அவர்கள் விவாதத்திலேயே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைச் செயலக வெளியீடு என்று அச்சடித்துக் கொடுக்கப்பட்ட புத்தகத்திலே உள்ளதையே நான் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன்:

"மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றமானாலும், எந்த நீதிமன்றமானாலும், நீதிபதிகளும் மனிதர்கள்தான், அவர்களுக்கும் விருப்பு வெறுப்புகள் உள்ளன. சில சமயங்களில் பேசக்கூடாதவற்றையெல்லாம் நீதிமன்றங்களில் பேசுகிறார்கள். அதையே நாங்கள் பேசினால் எங்கள்மீது Contempt of Court வழக்குப் போடுவார்கள். ஆனால் நீதிபதிகள் என்ன செய்தாலும், என்ன சொன்னாலும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அல்லது அதற்குக் கண்டனம் தெரிவித்து நாங்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தால், எங்கள்மீது Contempt of Court வழக்கு வரும்" என்று அன்றைக்கு அம்மையார் அவர்கள் முதலமைச்சராக இருந்து, இந்த அவையிலே பேசியது, பழைய அரசு அச்சடித்துக் கொடுத்த புத்தகத்திலே இருக்கிறது. அதனால் அதில் ஒன்றும் பெரிய தவறு இருப்பதாகத் தெரியவில்லை. ஏற்கெனவே இந்த மன்றத்திலே பேசப்பட்ட ஒரு கருத்தைத்தான் அப்பாவு குறிப்பிட்டார். அதுகூட குறிப்பிட்டிருக்க வேண்டிய தேவையில்லை. ஏற்கெனவே செய்யப்பட்ட ஒரு தவறை மற்றபடி நாமும் செய்ய வேண்டும் என்று அப்பாவு போன்றவர்கள் கருதக்கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்று நான் எடுத்துக்காட்டி, இந்த விளக்கத்தோடு இந்தப் பிரச்சினையை முடிப்பது நல்லது என்று கருதுகின்றேன்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்குறிப்பில் இருப்பதை, (குறுக்கீடுகள்) சொல்கிறேன், கேளுங்கள்; (குறுக்கீடுகள்) முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு அது தேவையில்லை.

**திரு. டி. ஜெயக்குமார்:** அதை நான் மறுக்கிறேன். எனக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நீங்கள் மறுக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) இதை நீங்கள் மறுக்கிறீர்களா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஆளுநர் உரையை வாசிக்கும் முன், கோஷமிட்டு வெளியே சென்றவர்கள் தற்போது ஆளுநர் உரையில் குறிப்பிட்டதில் உள்ள முக்கிய அம்சத்தை சற்று கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னதைச் செய்பவர், செய்வதைச் சொல்கின்றவர். ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்... (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், ஒரே உத்தரவிலே 7,000 கோடி ரூபாய் விவசாயிகளுக்குத் தள்ளுபடி செய்து, 53 இலட்சம் ஏழை மக்களுக்கு வாழ்வளித்தார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, அவைக் குறிப்பிலே இருப்பதைப் படித்துக் காண்பித்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அதிலே விவாதமோ, Point of Order என்பதோ கிடையாது. உட்காருங்கள். முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** 15 ஆம் தேதி முதல் பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவில் இரண்டு முட்டைகள் வழங்கும் உத்தரவு, நிலமற்ற ஏழையெளிய விவசாயிகளுக்கு இரண்டு ஏக்கர் நிலம் இலவசம், தந்தை பெரியார்.. (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் முதலில் உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்தநாள் விழாக்களையொட்டி... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நான் சொல்கிறேன், முதலில் உட்காருங்கள். உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கொஞ்சம் பொறுங்கள். அவைக் குறிப்பிலிருந்து, (குறுக்கீடுகள்) முதல்வர் அவர்களே அவைக் குறிப்பிலிருப்பதைப் படித்துக் காண்பித்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) இதைவிட வேறு என்ன வேண்டும் உங்களுக்கு?





உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அப்படியென்றால், இதை நீங்கள்... (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, நீங்கள் உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். அவைக் குறிப்பில் இருப்பதை முதல்வரே படித்துக் காண்பித்துவிட்டார்கள். அதற்குப் பின்பு விளக்கம் எதுவும் தேவையில்லை. (குறுக்கீடுகள்) அதற்குமேலே வேறு விவாதம் கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதற்கு மேலே வேறு விவாதம் கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இவ்வளவுதூரம் சொன்னதற்குப் பிறகும், மேலும் மேலும் இடையூறு செய்து கொண்டிருந்தால், சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், முதலில். மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவருக்கும் அந்த உறுப்பினர்கள் கட்டுப்பட மாட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவருக்கும் பேசத் தெரியாது. இரண்டுக்கும் இடையிலே கும்பலாக எழுந்து நிற்கிறார்கள். ஒரு கட்டுப்பாடு இல்லை. ஒரு ஒழுக்கம் இல்லை. இப்படிப்பட்ட கட்சிதான் அது. (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவின்மூலம், தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய இந்த புதிய அரசு, தமிழ்நாட்டு மக்களுக்குச் சொல்லியிருக்கிற பணிகளை நடைமுறையில் நிறைவேற்றும் என்ற பெரும் எதிர்பார்ப்போடு, தமிழ்நாட்டு மக்கள் காத்திருக்கிறார்கள். சட்டமன்ற நிகழ்வுகள் ஒவ்வொன்றையும் இன்றைக்கு தமிழ்நாட்டு மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், தங்கள் தொகுதியிலிருந்து வெற்றி பெற்று, சட்டப் பேரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள், தங்களுடைய தேவைகளை, தீர்க்கப்படாத பிரச்சினைகளை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்கிறார்களா, அரசு அதன்மூலம் என்ன நடவடிக்கை மேற்கொள்கிறது என்று ஆவலோடு காத்திருக்கிற இந்த நேரத்தில், கடந்த காலத்தைப்போலவே சட்டமன்ற ஜனநாயகத்தைச் சீர்குலைக்கக்கூடிய

வகையில், சட்டமன்ற ஜனநாயகத்தில், இன்றைக்கு மக்கள் கருத்துகளை இந்தச் சபையில் உறுப்பினர்கள் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளிக்காமல், இடையூறாக நிற்பது, எந்தவிதத்திலும் ஏற்புடையது அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்தச் சட்டமன்ற மரபு காப்பாற்றப்பட வேண்டும். சட்டமன்ற ஜனநாயகம் காக்கப்பட வேண்டும். உறுப்பினர்கள் பேசுவதற்கான உரிமை மதிக்கப்பட வேண்டும். அதற்கு நீங்கள் உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற ஏழையெளிய விவசாயிகளுக்குத் தலா இரண்டு ஏக்கர் நிலம் இலவசம்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீதியரசர்களைப் பற்றி, இங்கு எங்களுடைய இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற கூட்டத் தொடரில் பேசியதைப்பற்றி இங்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாசித்துக் காட்டினார்கள். இதில் எந்த வாசகமும் நீதிபதியைப் பற்றி அவதூறாக இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நீதிபதியைப் பற்றி முன்னாள் முதலமைச்சர் அவதூறாகப் பேசினார் என்று பேசிய வார்த்தை சபைக் குறிப்பிலிருந்து நீக்கப்படவேண்டும். (குறுக்கீடுகள்) அந்த வார்த்தை முதலில் நீக்கப்பட வேண்டும், ஒன்று. இன்னொன்று, கேளுங்கள். (குறுக்கீடு)

(முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்த எடுப்பிலேயே தவறான தகவலை இங்கே சொல்கிறார்கள். இங்கே அவைக்குறிப்பிலே பதியப்பட்டதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாகப் படித்துக் காட்டியிருக்கிறார்கள். தெளிவாக அந்தக்





குறிப்பிலே சொல்லப்பட்டிருப்பது, 'நீதியரசர்கள் அவர்கள் விருப்பப்படி எதை வேண்டுமானாலும் சொல்லுவார்கள்' என்று ஒரு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார் என்று சொல்வது சரியா? அதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா? அவைக் குறிப்பிலே பதிவு செய்யப்பட்டதை உண்மையிலேயே ஏற்றுக்கொள்ள மறுத்தால், இந்த அவையிலே ஏதோ ஓர் உள்நோக்கத்தோடு அல்லது காழ்ப்புணர்ச்சியோடு நீங்கள் செயல்படுகிறீர்கள் என்றுதான் அர்த்தம். ஆகவே, இந்தச் சபை முறையாக நடைபெறுவதற்கு ஒத்துழைக்கவேண்டும். தவறாக இருந்தால் நீங்கள் சுட்டிக்காட்டலாம்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற ஏழையெளிய விவசாயிகளுக்கு.. (மணியடிக்கப்பெற்றது)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசிக் கொண்டிருக்கும்போது இடைமறிக்கிறார். அவருக்குச் சந்தர்ப்பம் கொடுக்கிறீர்கள். என்னுடைய பேச்சை முடிப்பதற்கு விடமாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இங்கே பார்த்துப் பேசுங்கள். அதைவிட்டுவிட்டு அவரைப் பார்த்துப் பேசுகிறீர்களே?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர் இடைமறிக்கிறார். பேசுவதற்குச் சந்தர்ப்பம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே பார்த்துப் பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில், மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் சொன்ன வார்த்தையை சபைக் குறிப்பிலிருந்து உடனடியாக நீக்குவதற்கு சபாநாயகர் அவர்கள் உத்தரவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை நான் முடிவு எடுத்து சொல்லிவிட்டேன். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எப்போது எடுக்கப் போகிறீர்கள்? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள்.

[2006 மே 26

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** எப்போது எடுக்கப் போகிறீர்கள்? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. டி. ஜெயக்குமார்:** நாங்கள் யாருமே பேசக்கூடாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை எத்தனை முறை பேசச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் பேசிவிட்டார்கள். நீங்கள் பேசியாகிவிட்டது. இன்னும் என்ன வேண்டும்?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் பேசிக்கொண்டிருக்கும்போது, சிவபுண்ணியம் அவர்கள் இடைமறிக்கிறார். அவர் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார் ஏன் எழுந்திருக்கிறார்? (குறுக்கீடு) ஓஹோ, அவரால் பேசமுடியவில்லையென்று இவர் எழுந்திருக்கின்றாரா? (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களைப் பேசச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அப்பாவு அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களை, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கின்றார். எல்லோரும் அமைதியாக இருங்கள், (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவதூறாக நீதிபதியைப் பற்றி-– சட்டமன்றத்தினுடைய நடவடிக்கை குறிப்பேடு இருக்கின்றது; அதில் ஏதாவது ஒரு வார்த்தையாவது, நீதிபதிகளைப் பற்றி அவதூறான வார்த்தை வருகிறதா? அப்படியிருக்கும்பொழுது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்,



2006 மே 26] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

முன்னாள் முதலமைச்சர் அவர்கள், நீதிபதிகளைப் பற்றி அவதூறாகப் பேசினார்கள் என்கின்ற வார்த்தைகளை, நீதிபதிகளையும் விட்டுவைக்கவில்லை என்கின்ற வார்த்தைகளை அவர் வாபஸ் வாங்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன். நீதிபதி என்று சொன்னாலே, அது நீதிமன்றத்தைத்தான் குறிக்கும். நீதிமன்றம் என்று சொன்னாலும், அது நீதிபதியைத்தான் குறிக்கும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தரக்குறைவாகப் பேசினார்கள் என்பதை சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனி நபர் யாரையும் அவர் சொல்லவில்லை. பெயரைக் குறிப்பிட்டு அவர் யாரையும் சொல்லவில்லை. அதனால் நீதிபதி என்பது நீதிமன்றத்தைத்தான் குறிக்கும். நீதிமன்றம் என்பது நீதிபதியைத்தான் குறிக்கும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. அப்பாவு, நீங்கள் பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமா, நிலமற்ற ஏழையெளிய விவசாயிகளுக்கு, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலமற்ற ஏழையெளிய விவசாயிகளுக்குத் தலா 2 ஏக்கர் நிலம் இலவசமாகத் தரும் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களைப் பெருமையோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். தேர்தல் அறிக்கையிலே கூறியபடி தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகிய தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களைக் கொண்டாடும்போது, இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குவது என்று நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் கவர்னர் உரையிலே கூறியிருப்பது நமக்குப் பெருமையாக இருக்கிறது.

முற்பகல் 10–25

அதுமட்டுமா? நாங்குநேரியில் Hi-tech Park—உயர் தொழில்நுட்பப் பூங்கா—மறைந்த மரியாதைக்குரிய முரசொலி மாறன் அவர்களால் கொண்டுவரப்பட்ட அந்தத் திட்டம் கடந்த ஐந்தாண்டு காலம் நடைபெறாமல் இருந்ததை, அவருடைய அன்பு மகன் மாண்புமிகு தயாநிதி மாறன் அவர்கள் நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்காவிலே வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு, தமிழக

மக்களுக்குத் தேர்தல் அறிக்கையில் கூறியிருப்பதைப் போன்று வழங்கப்படும் என்று நேற்று அறிவித்ததை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல. 2001 ஆம் ஆண்டு கவர்னர் உரையிலே, கூட்டுறவுச் சங்கத் தேர்தல் செப்டம்பர் மாதம் நடைபெறும் என்று சொல்லி, அன்றைய முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அது அவர்களுடைய கவர்னர் உரையிலே இருந்தது. அதையும் டாக்டர் கலைஞர் அவர்கள் வந்துதான் நிறைவேற்றித் தருவதாக உறுதி அளித்திருக்கின்றார்கள். கூட்டுறவுச் சங்கத் தேர்தல் உடனடியாக நடத்தப்படும் என்று கூறிய நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

ஐந்தாண்டு காலமாக மினி பேருந்து திட்டம் தொடங்கப்படாமல் இருந்தது. மீண்டும் அந்தத் திட்டம் தொடங்கப்படும் என்ற அறிவிப்பை இந்த கவர்னர் உரையிலே நான் காண்கின்றேன்.

சென்னையிலே மெட்ரோ இரயில் திட்டம்; சென்னையிலே கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம். சிறுபான்மையினருக்குக் கல்வி, வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு சட்டம்; வரும் கல்வி ஆண்டில் தொழில்நுட்பப் படிப்பிற்கான நுழைவுத் தேர்வு முற்றிலும் இரத்து; பள்ளி, கல்லூரிகளில் கட்டணம் 1996-2001-ல் இருந்ததைப் போன்று குறைக்கப்படும்.

ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு எதிராகப் போடப்பட்ட TESMA சட்டம் முற்றிலும் நீக்கம்; மத மாற்றத் தடைச் சட்டம் வார்த்தை அளவில் இல்லாமல் சட்டப்படி அது இரத்துச் செய்யப்படுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு கடற்கரைச் சாலையிலேயே திருவுருவச் சிலை அமைக்கும் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) பெருந்தலைவர் காமராசருடைய பிறந்த தினம் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தல்.

ஏழை கன்னிப் பெண்கள் 10 ஆம் வகுப்பு வரை படித்திருந்தால் 15 ஆயிரம் ரூபாய் திருமண உதவியை அள்ளித் தருகின்றார் டாக்டர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை எளிய மக்கள், கர்ப்பிணிப் பெண்கள் பிரசவக் காலத்திற்கு 6 ஆயிரம் ரூபாய் அள்ளி வழங்குகின்றார் டாக்டர் கலைஞர்.



அனைத்துச் சமுதாயத்தினரும் ஆலயங்களிலே அர்ச்சகராகப் பணிபுரியலாம் என்று டாக்டர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம், சொன்னதைச் செய்பவர், செய்வதைச் சொல்கின்றவர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு கூறிக் கொள்கின்றேன்.

அதேபோன்று, 2001 ஆம் ஆண்டு நம்முடைய கவர்னர் உரையிலே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Midas Golden என்ற நிறுவனத்திற்குத்தான் கடந்த அரசில் அதிகமாகக் கொள்முதல் ஆணை வழங்கப்பட்டிருக்கிறது என்ற தவறான தகவலை மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னார்கள். அதற்கு ஆதாரம் கொடுக்கவேண்டுமென்று சொன்னேன். இதுவரை ஆதாரம் கொடுக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசியதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** நான் பதில் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 6 மதுபானத் தொழிற்சாலைகளுக்கு TASMAC மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்கு ஆணை வழங்கப்பட்டது தமிழக அரசால். அதில் 5 நிறுவனங்களுக்கு, எவ்வளவு கொள்முதல் செய்யவேண்டுமென்று சொல்லி TASMAC-க்கு இலக்கு நிர்ணயம் செய்து, 5 தொழிற்சாலைகளில் எவ்வளவு, எவ்வளவு வாங்கவேண்டுமென்று உத்தரவு பிறப்பித்திருந்தது. ஆனால், Midas Golden Distillery-க்கு மட்டும், அந்த இலக்கு நிர்ணயம் செய்யப்படவில்லை என்று மட்டும்தான் நான் சொன்னேனேதவிர, அதிகமாகக் கொள்முதல் செய்வதற்கு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது என்று நான் ஒருபோதும் சொல்லவில்லை. ஆகவே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம் என்பதை அன்போடு தெரிவித்து (குறுக்கீடு) என்னைப் பேச விடுங்கள். 5 வருடங்களாகத்தான் என்னைப் பேசவிடவில்லை. 5 வருடங்கள் என்னைப் பேசவிடாமல் அநியாயம் பண்ணினீர்கள். இப்போதாவது நான் பேசுகிறேன். தயவுசெய்து பேசவிடுங்கள். உங்கள் அநியாயத்திலிருந்து விடுபட்டுத்தானே இங்கே வந்திருக்கிறேன். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஒரு விளக்கம் சொல்லிவிடுகிறேன்.

[2006 மே 26

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் சொன்ன குற்றச்சாட்டை அவர் மறுத்து விட்டார். அதற்குப் பிறகு அதிலே என்ன இருக்கிறது? உட்காருங்கள். அடுத்து உங்கள் வாய்ப்பு வரும்போது பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** கடைசி 5 மாதங்களில் TASMAC மூலம் கொள்முதல் செய்ததில் Midas நிறுவனத்திலிருந்துதான் அதிகமாக வாங்கியிருக்கிறார்கள் என்பதை நிரூபித்துவிட்டால், அதற்கான பொறுப்பை மாண்புமிகு முன்னாள் அமைச்சராக இருந்தவர் ஏற்றுக்கொள்கிறாரா? (மேசையைத் தட்டும் ஒலி) நான் நிரூபிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான் நிரூபிக்கிறேன். TASMAC–க்கு வாங்கிய பொருட்களில் Midas–லிருந்துதான் அதிகமாக வாங்கியிருக்கிறார்கள் என்பதைப் புள்ளிவிவரங்களோடு, பொருளாதாரக் கணக்கோடு நான் நிரூபிக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறாரா?

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இங்கே பதிய வைத்துக்கொண்டிருக்கிறார்கள். 29–11–2003 அன்றுதான் சில்லறை விற்பனையை TASMAC நிறுவனம் ஏற்றுக்கொண்டது. 29–11–2003 முதல் ஏப்ரல் 2006 முடிய இந்த 6 Distillery நிறுவனங்களுக்கு TASMAC நிறுவனம் கொள்முதல் செய்த பட்டியலை நான் இங்கே சொல்கின்றேன். 1998–ல் மதுபானங்கள் கொள்முதல் செய்ததில் என்ன நடைமுறை பின்பற்றப்பட்டதோ, அந்த நடைமுறைதான் இன்றுவரை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது என்பதை முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். 3 மாத சராசரியை, அந்த இலக்கை அதிகபட்சமாக யார் எட்டுகின்றார்களோ, அந்தக் கம்பெனிக்கு, அந்த பிராண்டுக்குதான் automatic-ஆக கம்ப்யூட்டரில் அதனுடைய கொள்முதல் வழங்கப்படும் என்பது இன்று வரை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நடைமுறை என்பதை நான் இங்கே தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதாவது 29–11–2003 முதல் 2006 ஏப்ரல் முடிய பாலாஜி டிஸ்டில்லரி என்ற கம்பெனிக்கு 117.39 இலட்சம் பெட்டிகளையும், இரண்டாவதாக, சிவா டிஸ்டில்லரி கம்பெனிக்கு 106.23 இலட்சம் பெட்டிகளையும், மூன்றாவதாக, மிடாஸ் கோல்டன் டிஸ்டில்லரிக்கு 89.47 இலட்சம் பெட்டிகளையும், மோகன்



2006 மே 26] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ப்ருவரீஸ் 85.88 இலட்சம் பெட்டிகளையும், சதர்ன் அக்ரிஃபியூரன் நிறுவனத்திற்கு 68.20 இலட்சம் பெட்டிகளையும், எம்பீ. டிஸ்டில்லரிஸ் நிறுவனம் 44.16 இலட்சம் பெட்டிகளையும் கொள்முதல் செய்யப்பட்டிருக்கின்றது. உண்மை நிலை இவ்வாறு இருக்க, இவர்கள் வேண்டுமென்றே தனிப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு அதிகமான கொள்முதல் வழங்கப்பட்டதாகச் சொல்கிறார்கள், பேசுகிறார்கள். இதுபோன்று தவறான தகவலை திரும்பத் திரும்ப இந்த அவையில் கூற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய 2001 ஆம் ஆண்டு கவர்னர் உரையில் (குறுக்கீடுகள்) எதிர்க்கட்சி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னதற்கு பதில் வரவில்லை. மொத்தக் கொள்முதல் சரக்கைச் சொல்லியிருக்கிறார்கள். கடைசி ஆண்டில், 2005–2006–ல், மற்ற கம்பெனிகளிலிருந்து எவ்வளவு வாங்கியிருக்கிறார்கள்? 2005–2006–லே, 2004–2005–லே இந்த மிடாஸ் கம்பெனி எவ்வளவு விற்றது? 2005–2006–லே மிடாஸ் கம்பெனிக்கு திடீரென்று அந்த உயர்வு எப்படி ஏற்பட்டது என்பதுதான் எங்கள் கேள்வி. அதற்கு ஆதாரபூர்வமாக வேண்டுமானால் புள்ளிவிவரங்களைக் கொடுக்க நான் தயார். அதை நான் prove பண்ணினால், மற்ற கம்பெனிகளினுடைய கொள்முதலைக் குறைத்து, மிடாஸ் கம்பெனியிடமிருந்து கொள்முதல் அதிகரித்திருக்கிறது என்பதை நான் நிரூபித்தால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் என்ன சொல்கிறார்?

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர், அதிகமாக மிடாஸ் கம்பெனியில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டாம், சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** சரி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது அத்தனையுமே தேர்தல் அறிக்கையில்—மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின்வாயிலாக அறிவிக்கப்பட்ட தேர்தல் அறிக்கைகளைத்தான் இந்த கவர்னர் உரையிலே அதிகமாக நாம் பார்க்

[திரு. மு. அப்பாவு] [2006 மே 26

முடிந்தது. ஒருசில கோரிக்கைகள் இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்தாலும்கூட, வருகின்ற பட்ஜெட்டில் அவற்றையும் நம்முடைய மாண்புமிகு தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் செய்து தருவார்கள் என்ற உறுதியையும், உத்தரவாதத்தையும் (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டு மக்களுக்கும், உங்களுக்கும் தர நான் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த நேரத்திலே, 2001 ஆம் ஆண்டு கவர்னர் உரையிலிருந்து ஒரு வாசகத்தை நான் படிக்கின்றேன். 2001 ஆம் ஆண்டு கவர்னர் உரையிலே வாசித்தபோது, அன்றைய கவர்னர் அவர்கள் வாசித்த உரை, தொழிற்கல்வி படிப்பில் கல்லூரிகளில் படிக்கும் கிராமப்புற மாணவ, மாணவிகளுக்காக டாக்டர் கலைஞர் அவர்களால் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது; 15 சதவிகித இட ஒதுக்கீடு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், முன்னாள் முதலமைச்சர் ஆட்சிக்கு வந்தவுடன், 25 சதவிகிதமாக அது உயர்த்தப்படும் என்று கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்டது. நான் கேட்கின்றேன். 15–ம் கொடுத்தார்களா, 25–ம் கொடுத்தார்களா? ஒன்றுமே இல்லாமல் ஆக்கிவிட்டார்களே? இது எவ்வளவு பெரிய கொடுமை என்பதை இந்த நேரத்திலே நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–35

அதேபோன்று, 2001 ஆம் ஆண்டு கவர்னர் உரையிலே வகுப்புக்கு ஓர் ஆசிரியர்... (குறுக்கீடு) வகுப்புக்கு ஓர் ஆசிரியர்... (குறுக்கீடு) நீங்கள் பதில் சொல்லும்போது நான் இருந்தேன் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காரணம் இல்லாமல் தலையிடக்கூடாது. உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** உட்காருங்கள். I am not yielding. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பத் திரும்ப காரணம் இல்லாமல் குறுக்கீடு பண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** அதேபோன்று, 2001 ஆம் ஆண்டு கவர்னர் உரையிலே, வகுப்புக்கு ஓர் ஆசிரியர் வீதம், 1 முதல் 5 வகுப்புகளுக்கு– எல்லா வகுப்புகளுக்கும், வகுப்புக்கு ஓர் ஆசிரியர் நியமிக்கப்படுவார்கள் என்று கூறியிருக்கின்றார்கள். நான் கேட்கின்றேன்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அப்பாவு அவர்கள் பேசுகின்ற நேரத்தில்... (குறுக்கீடுகள்)



2006 மே 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காரணம் இல்லாமல் உறுப்பினர்கள் எதையும் பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) அனுமதியில்லாமல் யாரும் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தயவுசெய்து ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அமைதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுமையாக அப்படியே அமருங்கள். பேசிக் கொண்டிருக்கிறார் அல்லவா? உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் பேசுகின்றபோது, கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, கிராமப்புற மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளில் தனியாக 15 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்ததன்மூலம், பல்லாயிரக்கணக்கான மக்கள் பயனடைந்தார்கள். ஆனால், 2001 ஆம் ஆண்டு, முன்னாள் முதலமைச்சர் ஆட்சிக்கு வந்ததும், கவர்னர் உரையிலே அதைப் படிக்கின்ற நேரத்திலே 15 சதவிகிதத்தை 25 சதவிகிதமாக உயர்த்தினார்கள். அதை நல்ல எண்ணத்தோடுகூட உயர்த்தி இருக்கலாம், நாங்கள் அதிலே குறை காண விரும்பவில்லை. ஆனால், இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, 25 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது, அது நீதிமன்றத்திலே அடிபட்டுவிட்டது என்று குறிப்பிடுகிறார்கள். அதையும் நான் மறுக்கவில்லை. ஆனால், நான் தெரிந்துகொள்ள விரும்புவது, கடந்தகால ஆட்சியில் உயர் நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வந்தால் அதற்கு எத்தனை முறை உச்ச நீதிமன்றத்திற்குப் போய் அந்தத் தீர்ப்பை மாற்றியிருக்கிறீர்கள்? ஆனால், இந்த 25 சதவிகித இட ஒதுக்கீட்டில் நீங்கள் உச்ச நீதிமன்றத்திற்குப் போய் ஏதாவது நடவடிக்கை எடுத்தீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி எடுத்திருந்தால், உச்ச நீதிமன்றத்திலே என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? ஏன் இதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் என்றால், ஏற்கெனவே அனுபவித்து வந்த அந்த 15 சதவிகித இட ஒதுக்கீடும் இப்போது மாணவர்கள் அனுபவிக்கவில்லை. அந்த நிலைமைதான் தமிழ்நாட்டிலே இருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு குறிப்பிடுகிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம், உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது, நீங்கள் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். அடுத்து, நீங்கள்தான் பேசப் போகிறீர்கள். (குறுக்கீடுகள்)

[2006 மே 26

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, 2001 ஆம் ஆண்டு, நம்முடைய அன்றைய மாண்புமிகு கவர்னர் அவர்கள், கவர்னர் உரையிலே ஒரு விவரத்தைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அதேபோன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள். (குறுக்கீடு) சி.வி. சண்முகம், சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். பேச வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது, உட்காருங்கள்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் திருத்தி தகவலைச் சொன்னார்கள். நாங்கள் 15 சதவிகிதமாக இருந்ததை 25 சதவிகிதமாக உயர்த்தினோம். உயர் நீதிமன்றத்திலே அது செல்லாது என்று தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால், அதற்குப்பிறகு உண்மையை மறைத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அதன்மீது — உச்ச நீதிமன்றத்திலே அந்த வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு நல்ல எண்ணத்திலே 15 சதவிகிதமாக இருந்ததை கிராமப்புற மாணவர்களுக்கு 25 சதவிகிதமாகக் கிடைக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடுதான் அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்போதும், அதன்மீது மேல் முறையீடு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–40*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் கல்வி அமைச்சர் மிகச் சாமர்த்தியமாக இங்கே பதில் சொல்கின்றார். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, 2001–லே கொண்டு வரப்பட்ட ஓர் அறிவிப்பு. உயர் நீதிமன்றத்திற்குப் போய் இடைக்காலத் தடை வாங்கினார்கள். உடனே உச்ச நீதிமன்றத்திற்குப் போனதாகச் சொல்கின்றீர்கள். ஐந்தாண்டு காலமாக உச்ச நீதிமன்றத்திலேபோய் (குறுக்கீடுகள்) அதையும் நான் சொல்கின்றேன். (குறுக்கீடுகள்) அதையும் நான் சொல்கின்றேன். கடந்தகால ஆட்சி, எத்தனையோ வழக்குகளில் உடனடியாக இங்கே இரவு நேரத்திலேகூட ஓர் உத்தரவு வாங்குவார்கள், உயர் நீதிமன்றத்திற்குப்போய்.



2006 மே 26] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

பிறகு உச்ச நீதிமன்றத்திற்கு உடனே கொண்டு போவீர்கள். ஆனால், இந்த வழக்கைப் பொறுத்தவரையில், ஐந்தாண்டு காலமாக அந்த 25 சதவிகிதம் என்பதை நிறைவேற்றுவதற்கு நீங்கள் முயற்சி எடுத்திருந்தால், உச்ச நீதிமன்றம் நிச்சயமாக நமக்கு சாதகமாக நீதி வழங்கி இருக்கும். ஆனால், வழக்கை பெயரளவிற்குப் போட்டீர்களேதவிர, உண்மையிலேயே, கிராமப்புற மாணவர்கள் பயன்பெறவேண்டுமென்ற அக்கறை கடந்த கால ஆட்சிக்கு இல்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம், நீங்கள் சொல்லிவிட்டீர்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று 2001 ஆம் ஆண்டு கவர்னர் உரையிலே, வகுப்புக்கு ஓர் ஆசிரியர்.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சண்முகம், நீங்கள் விளக்கம் சொல்லிவிட்டீர்கள். அதிலே ஒன்றும் இப்போது Point of Order இல்லை. உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு கவர்னர் உரையிலே, வகுப்புக்கு ஓர் ஆசிரியர் கொண்டு வருவோம் என்று சொன்னார்கள். 2001 ஆம் ஆண்டு, வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்று கொண்டு வந்து அப்போது ஆரம்பப் பள்ளியிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, உச்ச நீதிமன்றத்திலே போட்ட வழக்கு ஐந்தாண்டு காலமாக நிலுவையில் இருக்கின்றது, நீங்கள் ஏன் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று சொல்கின்றார்கள். உங்களுக்கு வேண்டுமென்றால், நீங்கள் ஏதாவது சொல்லி, உங்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பை உடனடியாகப் பெறலாமேதவிர, உச்ச நீதிமன்றத்தில் சட்டவிதிகளுக்கு உட்பட்டுத்தான் வழக்குகள் நடக்குமேதவிர, எங்கள் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் நீதிமன்றம் இல்லை. அப்படியென்றால், அவருடைய கருத்து, அவர் சொல்வது உண்மை என்றால், நாங்கள்

கேட்கின்றோம். 1999–லே தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்று நீங்கள் போட்ட அரசாணை உயர் நீதிமன்றத்திலே அதே ஆண்டிலே தள்ளுபடி செய்யப்பட்டதே, இன்றுவரை உச்ச நீதிமன்றத்தில் இருக்கின்றதே, நீங்கள் அப்போது போட்ட அரசாணை, மக்களை ஏமாற்ற போட்ட அரசாணையா என்பதை நீங்கள் விளக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு இவர்கள், உச்ச நீதிமன்றத்திற்கு நாங்கள் வழக்குக்காக மேல்முறையீட்டுக்குச் சென்றோம் என்று சொன்னார்கள். இதுவரை அந்த வழக்கு நிலுவையில் இருப்பதாக மாண்புமிகு முன்னாள் கல்வி அமைச்சர் அவையில் அறிவிக்கின்றார். சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்து, நாங்கள் கேட்கின்றபோது, நாங்கள் வழக்கறிஞர்களை அமர்த்தியிருக்கிறோம். அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டேயிருக்கின்றது என்று ஐந்தாண்டு காலம் இதே பதிலைச் சொன்னார்கள். நான் கேட்கின்றேன், ஒரு சட்டமன்ற உறுப்பினரை, உண்மைக்கு மாறான வழக்கில் கைது செய்து, உயர் நீதிமன்றத்தினுடைய ஓர் உத்தரவுக்கு எடுத்தவுடனேயே (குறுக்கீடுகள்) சொல்கிறேன், சொல்கிறேன், கேளுங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. தி. வேல் முருகன்:** உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்த அடுத்த 24 மணி நேரத்தில் இந்த மாநிலத்தினுடைய சட்டத் துறை செயலாளரும், உள் துறைச் செயலாளரும், டி.ஜி.பி. அவர்களும், ஒரு சட்டமன்ற உறுப்பினரைப் பழிவாங்க வேண்டுமென்பதற்காக, உச்ச நீதிமன்றத்தில் உங்களுடைய மேல்முறையீட்டை பதிவு செய்து, உடனடியாக அந்த வழக்கை கொண்டு வந்து விசாரணை செய்வதற்கு அரசு எடுத்த முயற்சி, இந்த நாட்டினுடைய ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) கல்வியை பாழாக்குகின்ற, கல்வியைச் சூறையாடுகின்ற, கல்விக் கொள்கையை சின்னாபின்னமாக்குகின்ற–இன்றைக்குப் பிளஸ்–2, 12–வது வகுப்பு தேர்விலேயே இலட்சக்கணக்கான மாணவர்கள் தேர்வு எழுத முடியாத ஓர் அவலத்தை உருவாக்கிய ஒரு கல்வி அமைச்சர். (மேசையைத்



தட்டும் ஒலி) ஆனால், அதற்கு உச்ச நீதிமன்றம் சென்று அவ்வளவு விரைவாக இடைக்காலத் தீர்ப்பு வாங்குவதற்கு முயற்சித்த அரசு, அந்த மாணவர்களுடைய பிரச்சினையில் ஏன் இப்படி மெத்தனமாக இருந்தது என்பதை விளக்குவாரா? (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். அவர் பேசி முடித்ததற்கு அப்புறம் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) அப்பாவு, சீக்கிரம் முடியுங்கள். எவ்வளவு நேரம் எடுத்துக்கொள்வது?

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோன்று, (குறுக்கீடு) 2001 ஆம் ஆண்டு நம்முடைய கவர்னர் உரையிலே குறிப்பிட்டதை நான் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன். 2001 ஆம் ஆண்டு கவர்னர் உரையிலே, அன்றைய கவர்னர் அவர்கள் வாசிக்கும்போது, தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒன்று முதல் ஐந்து மற்றும் ஒன்று முதல் எட்டு வரையுள்ள பள்ளிகளில் வகுப்புக்கு ஓர் ஆசிரியர் வீதம் நிச்சயமாகப் பணியமர்த்தப்படுவார்கள் என்று சொன்னார்கள். தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 37 ஆயிரம் ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகள் உள்ளன. அவற்றில் 18 ஆயிரம் பள்ளிகளிலே ஈராசிரியர்கள் உள்ளனர். கிட்டத்தட்ட 5 ஆயிரம் பள்ளிகளிலே 3 ஆசிரியர்கள் இருக்கின்றார்கள். இன்னும் வெளியே சொன்னால் வெட்கம். 22 நடுநிலைப் பள்ளிகளில் 1 முதல் 8 வரை இருப்பதிலே 2 ஆசிரியர்கள். 42 பள்ளிக்கூடங்களிலே 1 முதல் 8 வரை இருப்பதிலே 3 ஆசிரியர்கள். இவற்றையெல்லாம் மாற்றி ஒரு நல்லெண்ணத்தோடு அந்த கவர்னர் உரையிலே வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்று 2001–லே அறிவித்துவிட்டு, 2001 முதல் 2006 வரை ஐந்தாண்டு காலத்தில் ஏற்கெனவே பணி நிறைவுபெற்று ஓய்வில் சென்றவர்கள் கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேர். ஏற்கெனவே அங்கு ஒரு இலட்சத்து எண்பதாயிரம் பேர் பணியாற்றினார்கள் என்றால், 30 ஆயிரம் பேர் ஓய்வில் சென்றுவிட்டார்கள். அந்த ஓய்வில் சென்றவர்களுக்குக்கூட—அதிகமாகப் போட வேண்டாம், ஓய்வில் சென்றவர்களுடைய அந்த இடத்தை நிரப்பாமல் இருந்த அந்த ஐந்து ஆண்டு கால ஆட்சியில், வகுப்புக்கு ஓர் ஆசிரியர் வீதம் அமர்த்தப்படுவார்கள் என்று கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், தேர்தல் அறிக்கையிலே கூறியிருக்கின்ற கருத்தை டாக்டர் கலைஞர் அவர்கள், கவர்னர் உரையிலே கூறியிருக்கின்றார். இலட்சக்கணக்கான மக்கள் மத்தியிலே சொன்னதைச்

[திரு. மு. அப்பாவு] [2006 மே 26

செய்திருக்கின்றார். சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற டாக்டர் கலைஞர் அவர்களுடைய திட்டத்தில், தமிழகத்தில் வருங்காலங்களில் அத்தனையிலும், நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னதை நிறைவேற்றித் தருவார் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோன்று, 2001–2002 ஆம் ஆண்டு கவர்னர் உரை விவாதத்திற்குப் பதிலளிக்கையில், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவோம் என்று அன்றைய முதல்வர் உறுதியளித்தார். அதை ஐந்தாவது முறையாக அரியணை ஏறியிருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள்தான் இப்போது நிறைவேற்றித் தர இருக்கின்றார்கள் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னொன்றைச் சொல்கின்றேன். 2001–லே ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டிக் கொடுப்போம் என்று சொன்னார்கள். 1996 முதல் 2001 வரை டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே கட்டப்பட்ட வீடுகள் 55,482. 2001 முதல் 2006 வரை ஆட்சியில் இருந்தவர்கள் கட்டிக் கொடுத்தது 22,892 வீடுகள். பாருங்கள், குடும்பத்திற்கு ஒரு வீடு யார் கட்டிக் கொடுத்திருக்கின்றார்கள்? மீதி இருக்கின்ற குடும்பங்களுக்கும் டாக்டர் கலைஞர் கட்டித் தருவார் என்ற உண்மையை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, பழைய மகாபலிபுரம் சாலையிலே டைடல் பார்க் கட்டுவதற்கு, படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு 200 ஏக்கர் நிலம் வாங்கி, அந்த இடத்திலே டைடல் பார்க்கை ஆரம்பித்து, படித்த இளைஞர்களுக்கு, ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு சிறுசேரியிலே வேலைவாய்ப்பைக் கொடுத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அந்த இடத்தை வாங்கும்போதே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பணியைத் தவிர, வேறு எதற்கும் இதைப் பயன்படுத்தக் கூடாது என்ற ஒரு டிமாண்டோடுதான் அந்த நிலமே கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. ஆனால், அதிலேகூட 102 ஏக்கர் நிலத்தை முன்னாலிருந்த அரசு, சிங்கப்பூர் நிறுவனத்திற்கு வீடு கட்டுவதற்காக (குறுக்கீடு) அதன் உள்ளே செல்லவில்லை, நீதிமன்றத்தை விட்டுவிடுகிறேன். உள்ளே போகவில்லை. (குறுக்கீடு) விட்டுவிட்டேன்.

அதேபோன்று, கலைஞர் ஆட்சியில் புதிய தொழில்களை — நான் கேட்கிறேன். நடந்து முடிந்த ஆட்சியில் இந்தியாவுக்கே வழிகாட்டி, தமிழகம்தான், தமிழகத்தில் பொற்கால ஆட்சி நடைபெறுகிறது. தொழில்



2006 மே 26] [திரு. மு. அப்பாவு]

துறையில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகம் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், இந்தியாவில் தமிழகம்தான் தொழில் துறையில் முதல் மாநிலமாக இருக்கிறது என்று எங்கேயாவது புள்ளிவிவரம் சேகரித்தார்களா என்றால், ஒரு இடத்திலும் புள்ளிவிவரம் சேகரிக்கவில்லை.

முற்பகல் 10–50

** 10 தடவை உண்மைக்குப் புறம்பான சொல்லை ** என்ற வார்த்தையை நீக்கிவிட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். உண்மைக்குப் புறம்பான வார்த்தையை பலமுறை சொன்னால், உண்மை ஆகிவிடுமோ என்ற நோக்கத்தில், இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் தொழில் அதிகம். தொழில்களை நாங்கள்தான் அதிகமாகக் கொண்டு வந்தோம் என்று சொன்னார்கள். அவர்களுக்கு ஒரு புள்ளிவிவரத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 1996 முதல் 2001 வரை டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட, புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் 96,094. நன்றாகக் குறித்து வைத்துக் கொள்ளுங்கள், 96,094. அதேபோன்று, 2001 முதல் 2006 வரை ஆரம்பிக்கப்பட்ட மொத்தத் தொழில்கள் 54,252. கிட்டத்தட்ட ஒரு இலட்சம் தொழில்களை உருவாக்கினார் 5 ஆண்டு காலத்தில். அதற்குப் பின்பு 5 ஆண்டு காலத்தில் 54 ஆயிரம் தொழில்களை மட்டும் உருவாக்கிவிட்டு, இந்தியாவிலேயே நாங்கள்தான் தொழில் துறையில் முன்னேற்றத்தைக் காட்டியிருக்கிறோம், நாங்கள்தான் number one என்று சொன்னார்களேதவிர, வேறு ஒன்றும் சொல்லவில்லை.

இன்னும் சொல்கிறேன். ஏழை மாணவ, மாணவிகளுக்கு எதையெல்லாமோ நாங்கள் கொடுத்தோம் என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன். ஒன்று முதல் ஐந்து வரை உள்ள மாணவர்களுக்கு நல்ல ஊட்டச்சத்து கொடுக்க வேண்டும் என்பதற்காக, மத்திய அரசு சன்ன ரக அரிசியை வழங்குகிறது. சன்ன ரக அரிசி, பாருங்கள் கொடுமையை. ஒன்று முதல் ஐந்து வரை உள்ள மாணவர்களுக்கு – கவனித்துக் கொள்ள வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். 38,820 டன் சன்ன ரக அரிசியை மத்திய அரசிடமிருந்து பெற்று அதை எங்கோ மறைத்து வைத்துவிட்டோ அல்லது அதைக் காண்பிக்காமலோ சாதாரண அரிசியை அந்த ஏழை மாணவர்களுக்குச் சத்துணவிற்கு வழங்கி இருக்கிறார்கள். சன்ன ரக அரிசி மத்திய அரசு வழங்குகிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கேட்பார்கள். அதற்கு ஆதாரம், கேளுங்கள் நான் சொல்கிறேன். இதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்பார்கள். நான் சொல்கிறேன். 31–3–2004 அன்று மத்திய தணிக்கைத் துறையினுடைய தலைவர் அதை எழுதித் தந்திருக்கிறார். (குறுக்கீடு)

நான் சொல்வது அத்தனையும் மத்தியத் தணிக்கைத் துறையிலிருந்து குறிப்பிட்டதைச் சொல்கிறேன். (குறுக்கீடு) அதேபோன்று, எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஒரு ரோட்டர் ஒன்று ரிப்பேர் ஆகிவிட்டது. அப்போது நல்ல மின் துறை அமைச்சர் இருந்தார். அந்த ரோட்டரை சரிசெய்வதற்கு 8 மாத காலம் ஏற்பட்டது. அந்த 8 மாத காலத்தில் மின் உற்பத்தியில் 378 மில்லியன் யூனிட் இழப்பு ஏற்பட்டுள்ளது. 378 மில்லியன் யூனிட் இழப்பு ஏற்பட்டு, கிட்டத்தட்ட 28 கோடியே 56 இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதேபோன்று சில உண்மைச் சம்பவங்களை நான் இங்கே கூற விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது, திருநெல்வேலியிலே சென்ட்ரல் தியேட்டர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தத் தியேட்டருக்குப் புதியதாக திறப்பு விழாவிற்கு அன்றைய முதல்வர் அவர்கள் வந்தார்கள். அப்போது அங்கே இருந்த மாவட்ட ஆட்சியர் அதற்கு சுகாதாரத் துறை அனுமதி இல்லை என்று சொன்னதும், உடனடியாக அதைத் திறக்காமலேயே விட்டுவிட்டார். ஆனால், இப்போது மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர், 1–5–2006 அன்று நெல்லை Fun Park என்ற சிறுவர் உலகம், எந்த அனுமதியும் பெறாமல் பை–பாஸ் ரோட்டில் இருந்ததைத் திறந்து வைத்திருக்கிறார். மாவட்ட ஆட்சியர்மீது சரியான நடவடிக்கை எடுக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நெல்லையிலே போக்குவரத்துத் துறையிலே எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தபோது, தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான ஒரு கட்டடத்தில் Tamil Nadu Industrial Investment Corporation அலுவலகம் இருந்தது. சதுர அடிக்கு 7 ரூபாய் 25 காசு வீதம் அவர்கள் அதற்கு வாடகை கொடுத்து வந்தார்கள். அதே இடத்தை, Tamil Nadu Industrial Investment Corporation வாடகைக்கு இருந்ததை, அவர்களிடம் 10 சதவிகிதம் அதிகமாகக் கேட்டு, அந்த இடத்தை விட்டு அப்புறப்படுத்திவிட்டு, 2 ரூபாய் 65 காசுக்கு காயத்திரி லட்சுமி ஹோட்டல் என்ற ஒரு தனியாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் அரசுக்கு, நம்முடைய தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக்



கழகத்திற்குப் பல இலட்சம் ரூபாய் இழப்பு என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன்.

அதேபோன்று, பெருந்தலைவர் காமராஜர் முதன்முதலாக கூட்டுறவு நூற்பாலையை நம்முடைய திருநெல்வேலி மாவட்டத்தில், பேட்டையிலே, (குறுக்கீடுகள்)

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவர் பேசிக் கொண்டிருக்கிறார் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** பேட்டையிலே தொழில் துறை அமைச்சராக இருந்த, மாண்புமிகு முன்னாள் பெருந்தலைவர் காமராஜருடைய ஆட்சிக் காலத்தில், முன்னாள் முதல்வருடைய ஆட்சிக் காலத்தில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர்கள் பல பேர் இந்த மன்றத்தில் (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சர்கள் பல பேர் இந்த மன்றத்திலே உறுப்பினர்களாக வந்திருக்கிறார்கள். அதற்காக இலாகாக்களைப் பற்றிப் பேசும்போதெல்லாம், ஒவ்வொரு முன்னாள் அமைச்சருக்கும் வாய்ப்பு கொடுத்துக்கொண்டிருந்தால் எதுவும் நடக்காது. (குறுக்கீடுகள்) உங்களுடைய உறுப்பினர்களுக்குச் சொல்லலாமே தவிர, எங்களுக்கு அப்படிக் கொடுக்கவில்லை. பொன்முடி ஆயிரம் முறை குடல் அறுந்தமாதிரி கேட்டிருக்கிறார், கொடுத்திருக்கிறீர்களா நீங்கள்? (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது. குற்றச்சாட்டாகச் சொன்னால் நீங்கள் பதில் சொல்லலாம். குற்றச்சாட்டு சொல்லவில்லை அவர். (குறுக்கீடுகள்)

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கையாக வைத்திருக்கிறேன். குற்றச்சாட்டு அல்ல. (குறுக்கீடுகள்) குற்றச்சாட்டு அல்ல. கோரிக்கையாக வைத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார் அல்லவா? உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

[2006 மே 26

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையிலே இல்லாத ஓர் உறுப்பினரைப் பற்றி ஒரு குற்றச்சாட்டைச் சொல்வது அவையின் மரபுக்கு உகந்ததாக இல்லை என்பது அவையின் விதிமுறைகள். ஒரு முன்னாள் அமைச்சர் இந்த அவையிலே இல்லாதபோது, அவர் ஒரு தவறான வழிமுறையைப் பின்பற்றியிருக்கிறார் என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்வது, அதுவும் முன்னாள் அமைச்சர்மீது சொல்வது அவைக்குறிப்பிலேயிருந்து அது நீக்கப்படவேண்டும் என்று எங்கள் வேண்டுகோளை வைக்கிறோம்.

**திரு. மு. அப்பாவு:** பெயரை நான் சொல்லவில்லை. யாருடைய பெயரையும் நான் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவர் அவர்களே, நான் முடித்துவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, நான் பெயரைச் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை உறுப்பினர் செங்கோட்டையன் அவர்கள் ஒரு bad precedent–ஐ create பண்ணுகிறார். இந்த அவையிலே முன்னாள் அமைச்சர் நாகேந்திரன் அவர்கள் இல்லை. ஆகையினால், அவரைப் பற்றிப் பேசக் கூடாது என்றால், இந்தச் சபையிலே எதையுமே பேச முடியாது. அதற்குப் பதில் சொல்வதற்கு நீங்கள் இருக்கிறீர்கள். ஏன், மாண்புமிகு செங்கோட்டையன் அவர்களுக்கு விவரம் தெரியாவிட்டாலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், எல்லாம் தெரிந்து உட்கார்ந்திருந்தவர், அவர் பதில் சொல்லட்டுமே? (குறுக்கீடுகள்)

**திரு. மு. அப்பாவு:** அதேபோல, பேட்டை மில்லையும் உடனடியாக திறக்க வேண்டும் என்று கூறி, இந்த வாய்ப்பைத் தந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி, எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரைப் பேரவைத் தலைவராக நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் நியமித்ததற்கு என்னுடைய சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து, இந்த கவர்னர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தை முன்மொழிந்து என்னுடைய உரையை இத்துடன் நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சண்முகம் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.



2006 மே 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். Point of Order என்ன? Point of Order என்ன? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே. பாண்டுரங்கன்:** தவறான தகவலைச் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். அவர் தவறான தகவல் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அவர் அமைச்சராக இருந்த காலத்தில், (குறுக்கீடுகள்) அவர் தவறாகச் சொல்லவில்லை, அதாவது (குறுக்கீடு) உறுப்பினர் கொஞ்சம் கேட்க வேண்டும். அவர் அமைச்சராக இருந்த காலத்திலே அப்படி நடைபெற்றிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். யாரையும் தனிப்பட்ட முறையில் சொல்லவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் எஸ்.வி. சண்முகம் அவர்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order. (குறுக்கீடுகள்) Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சண்முகம். பேசுகிறீர்களா இல்லையா?

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order. மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் பேசுகிறபோது... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. எஸ்.வி. சண்முகம், நீங்கள் பேசுகிறீர்களா அல்லது வேறு ஒருவருக்கு வாய்ப்புக் கொடுக்கவா? (குறுக்கீடுகள்) எஸ்.வி. சண்முகம். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சண்முகம், நீங்கள் பேசுகிறீர்களா அல்லது அடுத்தவருக்கு வாய்ப்புக் கொடுக்கட்டுமா, நீங்கள் பேசுங்கள் முதலில்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வரையாது வாரி வழங்குவதை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு, கருணைக் கடலாகவும், காருண்ய

[திரு. எஸ்.வி. சண்முகம்] [2006 மே 26

மூர்த்தியாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்தியாவின் ஈடு இணையற்ற தேச பக்தச் செம்மல், அச்சம் என்றால் என்ன என்பதையே அறிந்திராத வீராங்கனை, வீரத்தின் விளைநிலம் (மேசையைத் தட்டும் ஒலி) மாபெரும் மனிதாபிமானி, எங்கள் தாய், புரட்சித் தலைவி அம்மா இருக்கின்ற திசை நோக்கி வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

*முற்பகல் 11–00*

நான் மதுரை மேற்குத் தொகுதியின் சார்பிலே இரண்டாம் முறையாக இந்த மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். 1991 முதல் 1996 வரை முதல் முறையும், இப்போது 10 ஆண்டுகளுக்குப் பின்பு இரண்டாம் முறையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன். என்னைத் தேர்ந்தெடுத்த மதுரை மேற்குத் தொகுதி மக்களுக்கு இந்தப் பேரவையின் வாயிலாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சியினர் ஆவேசமாக இருக்கிறார்கள். எங்கள் நெஞ்சம் எல்லாம் நிறைந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை தரக்குறைவாகப் பேசுவதிலே ஆர்வமாக இருக்கிறார்கள். அதை நாங்கள் எங்கள் உயிரே போனாலும் அனுமதிக்கமாட்டோம். சீறுகிறார், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஏகடியம் பேசுகிறார். எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவருக்குப் பேசத் தெரியாதாம். அவர்தான் இவருக்கு குரு.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அப்படியல்ல. I have got the highest regard. அவருக்கு உடல்நலம் சரியில்லை என்றார்கள். நேற்று பத்திரிகையிலே வந்தது. அதனால் முடியவில்லையோ என்று பார்த்தேன். (கூச்சல்–குழப்பம்)

**திரு. எஸ்.வி. சண்முகம்:** அது மாத்திரமல்ல. எதிர்க்கட்சித் தலைவருக்கு நாங்கள் எல்லாம் கட்டுப்படாதவர்களாம். இவருடைய கட்டுப்பாடு எங்களுக்குத் தெரியாதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், நீங்கள் முதலில் சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள். எதற்காக மற்றதையெல்லாம் பேசுகிறீர்கள். சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள். சப்ஜெக்ட்டுக்கு வாருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள்.



2006 மே 26]

**திரு. எஸ்.வி. சண்முகம்:** நான் பேரவைத் தலைவருக்கு இதைக் கோடிட்டுக் காட்டுவதற்குக் காரணம், இந்தச் சபை அமைதியாக, சுமூகமாக நடக்கவேண்டும் என்பதற்காகத்தான். துரைமுருகன் அவர்கள் பாய்கிறார், வெப் உலகம்–வெப் உலகம் மாதிரி சீறுகிறார். அப்படியெல்லாம் சீற நினைத்தால், நீங்கள் தமிழ்நாட்டிற்கு அமைதியான ஓர் ஆட்சியைத் தரமுடியாமல் போய்விடும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு தினங்களுக்கு முன்பு நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் ** ஒரு வாசகர் நேற்றையதினம் தினமலர் பத்திரிகையிலே எழுதியிருக்கிறார். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள், அந்த அளவிற்கு நாகரீகம் தெரியாதவர் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிகளை எப்போதும் மாண்புடன் நடத்தவேண்டும் என்று நினைக்கக்கூடியவர். அவர் எங்கேயாவது அப்படிச் சொல்லியிருக்கிறார் என்று நிரூபித்தால், நாங்கள் எந்தத் தண்டனையையும் ஏற்றுக்கொள்ளத் தயார். நடக்காத ஒன்றை நடந்ததாகக் கற்பனை செய்து கொண்டு, இந்த அவையிலே பேசுவது அவ்வளவு முறையல்ல.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்று சொன்னது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். அவர்களுடைய நாகரீகத்தைப் பற்றிச் சொன்னார். 1989 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் தேதி அன்று எங்கள் புரட்சித் தலைவி ஒரு பெண் என்றும் பாராமல் தாக்கிய உங்கள் நாகரீகம் ஒரு கேடா? அதைவிட ஒரு சம்பவம் தமிழ்நாட்டின் வரலாற்றில் என்றைக்காவது நடந்தது உண்டா? ஆகவே நீங்கள் நாகரீகத்தைப் பற்றிப் பேசாதீர்கள். தமிழ்நாட்டிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) கவர்னர் உரை...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989 ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2006 மே 26

மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறார். அதுபற்றி திருநாவுக்கரசு அவர்கள் இந்த அவையிலே ஒரு மணி நேரம் பேசியிருக்கிறார். அதை எடுத்து படித்துப் பார்த்தால், எந்த அளவுக்கு 13 ஆண்டுகளுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து, பட்ஜெட் படிக்கின்ற நேரத்தில் ஒரு முதலமைச்சரை அந்த பட்ஜெட் படிக்கவிடக்கூடாது என்பதற்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டன. அவருடைய கண்ணாடி உடைக்கப்பட்டது. இந்தச் சம்பவங்கள் எல்லாம் அவைக்குறிப்பிலே இருக்கின்றன. அதையும் படித்துப் பார்த்துவிட்டுப் பேசுவது நல்லது.

*முற்பகல் 11–05*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநாவுக்கரசு அவர்கள் எப்போது அந்தக் கருத்தைச் சொன்னார், எந்தக் கட்சியிலே கூட்டணி வைத்துக் கொண்டிருக்கிறபோது சொன்னார், யாருக்காக இங்கே துதிபாடினார் என்பது இந்த நாட்டு மக்களுக்குத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஒரு விபத்து நடந்துவிட்டது. பெரும்பான்மை இல்லாத ஓர் அரசாங்கம், ஒரு மைனாரிட்டி அரசாங்கம் ஆட்சிப் பீடத்திற்கு வந்திருக்கிறது. அதுவும் நடக்கவே முடியாத வாக்குறுதிகளைச் சொல்லி, மக்களை ஏமாற்றி, ஆட்சிப் பீடத்திற்கு வந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கிராமத்திலே ஒரு கதை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கவர்னர் உரையில் உள்ளவற்றைச் சொல்வார் என்று நான் எதிர்பார்த்தேன். (குறுக்கீடு) ஆனால், நீங்கள் அந்த கவர்னர் உரையை விட்டுவிட்டு வெளியே எங்கெல்லாமோ போய்விட்டு வருகிறீர்கள். கவர்னர் உரையில் உள்ளதைப் பேசுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இந்த அளவுகோலை இரண்டு பேருக்கும் வைத்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்களுக்கு ஒரு நீதி, எனக்கு ஒரு நீதியா? (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக வரலாற்றில் இத்தகைய ஒரு மைனாரிட்டி அரசாங்கம் எப்போதும் அமைந்ததே இல்லை. கிராமத்திலே ஒரு கதை இருக்கிறது. கெட்டிக்காரன் என்று



2006 மே 26] [திரு. எஸ்.வி. சண்முகம்]

தன்னை நினைத்துக்கொண்ட ஒரு கெட்டவன் இன்னொருவனை அழைத்து, 'நீ அவள் கொண்டு வா, நான் உமி கொண்டு வருகிறேன், இரண்டு பேரும் ஊதி ஊதிச் சாப்பிடுவோம்' என்று சொல்லி, அவளைக் கொண்டுவர வைத்து ஊதி ஊதிச் சாப்பிட்டார்களாம். அப்படி அவளைக் கொண்டு வந்தவர்கள், அவலத்திலே இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறபோது, அவலைக் கொண்டு வருவது என்று சொல்வதற்குப் பதிலாக, 'அவளை கொண்டு வந்தார், அவளைக் கொண்டுவந்தார்' என்று சொல்கிறார். 'எவளை' என்று எனக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் சொல்லிவிட்டார். உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர் பேசட்டும். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் எஸ்.வி. சண்முகம், உரையைச் சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் தவறான ஒரு கருத்தை இந்த அவைக்குத் தெரிவித்திருக்கிறார். 'அவல்' என்றுதான் சொன்னாரேதவிர, 'அவள்' என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருமுறைக்கு இருமுறை காதில் விழுந்த காரணத்தால் திருத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அவையில் 'அவல்' என்று சொல்லவேண்டிய சொல் பேச்சுவாக்கில் 'அவள், அவள்' என்று இரண்டு முறை வந்தது. எனக்குத் தவறாகச் சொல்லவேண்டிய அவசியமும் இல்லை. இப்படி திருத்தியாகவேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. திரும்பத் திரும்ப காதில் விழுந்த காரணத்தால் நான் சொன்னேனேதவிர, வேறு நோக்கம் எனக்கு எதுவும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எஸ்.வி. சண்முகம் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** **

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் அமரவேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்ட, அவல் கொண்டுவந்த காங்கிரஸ் கட்சியினரை நினைத்து நான் வருந்துகிறேன். ஆளுநர் உரை என்பது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் இ. பெரியசாமி அவர்கள்.

*முற்பகல் 11–10*

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பழமொழியையே மாற்றிச் சொல்கிறார்கள். அரிசி, உமி என்பதற்குப் பதிலாக, அவல், உமி என்று சொல்கின்றார்கள் என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு அமைச்சருக்கு கிராமக் கதை தெரியவில்லை. தவறான தகவலைச் சொல்கிறார். ஆளுநர் உரை என்பது ஓர் அரசாங்கத்தின் கொள்கை அறிவிப்பு. இன்னும் சொல்லப்போனால், முதலமைச்சருடைய சிந்தனைப் போக்கு. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை இந்தச் சபை தேர்ந்தெடுத்தபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் உரையைச் சீக்கிரம் முடிக்கவேண்டும். சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 'தமிழகம் ஜனநாயகத்தின் பூந்தோட்டமாகத் திகழும்' என்றார்கள். அதையேதான் ஆளுநர் உரையிலேயும், 'தமிழகம் ஜனநாயகத்தின் பூந்தோட்டமாகத் திகழும்' என்று குறிப்பிட்டுள்ளார்கள். முதலமைச்சர் என்ன நினைக்கிறாரோ, அதுதான் ஆளுநர் உரை. தமிழகம் ஜனநாயகத்தின் பூந்தோட்டமாகத் திகழுமா? அதற்கான அறிகுறிகள் இருக்கின்றனவா? சர்வாதிகாரத்தின் சாயல்தான் தென்படுகிறது. தேர்தல் முடிவுகள் வந்துகொண்டிருந்தபோது, எங்கள் மதுரை மாநகரத்தில் வாக்குகள் எண்ணப்பட்ட இடத்திலே ஜூனியர் விகடன் பத்திரிகையினுடைய தலைமை நிருபர் தாக்கப்படுகிறார். காவல் துறையினர்போய் மறிக்கிறார்கள். அந்த இரண்டு காவல் துறையினரையும்



தூக்கி எறிந்துவிட்டு, ஒரு சுவற்றிலே சாத்தி இரண்டுபேர் கன்னத்திலே மாறி மாறி அடிக்கிறார்கள். என்ன கொடூரம்? அதுவும் உங்கள் ஆட்சி வரப் போகிறது என்று எழுதிய ஜூனியர் விகடனுக்கே இந்தக் கதி என்றால், எங்கள் கதி என்னவாகும்? சாமானியனுடைய நிலைமை என்னவாகும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** தமிழ்நாடு முழுவதும் (குறுக்கீடுகள்) தமிழ்நாடு முழுவதும் எங்கள் தொண்டர்கள் தாக்கப்படுகிறார்கள். நேற்றைக்கு முதல்நாள் திருவொற்றியூரில் வீட்டிற்குள்ளே தூங்கிக் கொண்டிருந்தபோது, அந்த வீடு தீ பிடித்து எரிந்தது. மக்களுடைய அலறல் சத்தம் கேட்டுத்தான் அந்த வீட்டிற்குள்ளேயிருந்த எங்கள் கட்சியைச் சேர்ந்தவர் குடும்பம் உயிர் பிழைத்தது. நடவடிக்கை உண்டா?

எங்கள் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை 'Z' பிரிவை அவ்வளவு அவசர அவசரமாகத் திரும்பப் பெற்று ஜனநாயகப் பூந்தோட்டமா அமைக்க நினைக்கிறீர்கள்? நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்...(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்ததைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்திருக்கிறார். டி.ஜி.பி. அவர்கள் விளக்கமும் தந்திருக்கிறார்கள். இந்த நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கக்கூடிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எவ்வளவு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதோ, அதே அளவு பாதுகாப்புதான் (மேசையைத் தட்டும் ஒலி) முன்னாள் முதலமைச்சருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, (குறுக்கீடுகள்) இருங்கள், சொல்கிறேன், அதைக் குறைக்கவில்லை. முன்னாள் முதலமைச்சர், அவர் முதலமைச்சராக இருந்தபோது, 352 பேரை அவருக்குப் பாதுகாப்புக்காக நியமித்துக்கொண்டார்கள். இப்போதைய முதலமைச்சர், 'அவ்வளவு எண்ணிக்கை எனக்கு வேண்டாம், மக்களுடைய வரிப் பணம் வீணாக்கப்பட வேண்டாம், 55 பேர் போதும்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லி, தன்னுடைய பாதுகாப்பிற்கு வருகின்ற காவலர்களுடைய எண்ணிக்கையைக் குறைத்துக்கொண்டார்கள். அதற்காக, முன்னாள் முதலமைச்சர் ஆட்சியிலே இருந்தபோது, அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் அவர்களுக்கு எவ்வளவு பாதுகாப்புக்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2006 மே 26

கொடுத்தீர்கள் என்பதையும் கொஞ்சம் கணக்குப் போட்டுப் பார்த்தால், இந்த உண்மை தெரியும். அப்போது முன்னாள் முதலமைச்சருக்குக் கொடுக்கப்பட்ட பாதுகாப்பு, மத்தியிலேயிருந்து கொடுக்கப்பட்ட கறுப்புப் பூனை தவிர, நான்கே நான்கு காவலர்கள்தான். ஆனால், இந்த ஆட்சியிலே அப்படிச் செய்யவில்லை. 55 பேரை, முதலமைச்சருக்குச் சமமாக, இன்றைய எதிர்க்கட்சித் தலைவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இன்று பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்திகளைப் படித்தால் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சருக்குக் கொடுக்கப்படுகிற பாதுகாப்பைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இன்றைய முதலமைச்சருக்கு இருக்கிற நிலை வேறு. நம்முடைய முன்னாள் முதலமைச்சருக்கு இருக்கிற நிலை வேறு என்பதை நாங்கள் சொல்லவில்லை. உள் துறை அமைச்சரே ஏற்றுக் கொண்டுதான், தீவிரவாதிகளை ஒடுக்கியதும், தமிழ்த் தீவிரவாதிகள், அதேபோல் விடுதலைப் புலிகள் இவர்களுடைய அச்சுறுத்தல் இருக்கின்ற காரணத்தினாலேதான், அவருக்குத் தேவையான பாதுகாப்புத் தர வேண்டும் என்ற நிலை இருக்கிறதே தவிர, இன்றைய முதலமைச்சருக்கு அந்தப் பாதுகாப்புத் தேவையில்லை. அவருக்கும் இவருக்கும் இருக்கிற வேறுபாடு அதுதான். தீவிரவாதத்தை ஒழித்திருக்கிறார். அதுபோல, குண்டர்களை எல்லாம் இந்த நாட்டிலே நடமாட முடியாமல், அவர்கள் இங்கே சுலபமாகச் சுற்றி வராமல் தடுத்த காரணத்தினாலே, அவருக்கு இருக்கிற பாதுகாப்பு வேறு. இவர்களுக்கு இருக்கிற பாதுகாப்பு வேறு. இவர்களையும் அவர்களையும் ஒப்பிட்டுக் காட்டுவது சரியானது அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–15

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடியுங்கள். சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** என்ன, அவருக்கு இரண்டு மணி நேரம் கொடுத்தீர்கள்.



2006 மே 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். சீக்கிரம் முடியுங்கள். Time ஆகிறது.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுதானே ஆரம்பிக்கிறேன். அவருக்கு இரண்டு மணி நேரம் கொடுத்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். சீக்கிரம் பேச்சை முடியுங்கள், முடியுங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்ப வேகப்படுகிறீர்கள். நேராக விஷயத்திற்கு வந்து விடுகிறேன். இல்லையென்றால், வெளியேற்றி விடுவீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விஷயத்திற்கு வாருங்கள், பேசுங்கள் சீக்கிரம்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** ஆளுநர் உரையில் ஒன்பது இடங்களில் "மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன், மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று வேண்டுகோள் வைத்திருக்கிறீர்கள். மத்திய அரசு என்ன எங்கேயோவா இருக்கிறது? நீங்கள்தானே மத்திய அரசு? இந்த முதலமைச்சர்தானே மத்திய அரசின் பிதாமகன்? (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு 15 பேரை வைத்துக் கொண்டு, 7 மத்திய அமைச்சர்கள் வாங்குவதற்கு, எங்கே தட்டுவது, எங்கே கொட்டுவது என்ற சாகசங்கள் எல்லாம் தெரிந்தவர்தானே உங்கள் தலைவர்? (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் பாருங்கள். தொல்காப்பியருக்கும், வள்ளுவருக்கும் சிறப்புப் பரிசு கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசை வேண்டிக் கொண்டாராம். இங்கேயிருந்து ஒரு செல்லிலே பேசினாலே வந்து விடும். அந்த அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு செல்லிலே பேசுவது என்பது எளிது. அதிலே எந்தக் கருத்து வேறுபாடும் இல்லை. ஆனால், கடந்த கால ஆட்சியிலே, மத்திய அரசாங்கத்தோடு இருந்த அணுகுமுறைக்கும், இந்த ஆட்சிக் காலத்திலே கலைஞர் அவர்கள் கடைப்பிடிக்கின்ற அணுகுமுறைக்கும் வித்தியாசம் இருக்கிறது. கலைஞர் அவர்கள், ஒவ்வொரு அமைச்சரையும் சந்தித்து, சம்பந்தப்பட்ட துறை இலாகாக்களைச் சேர்ந்தவர்கள், என்னென்ன குறைகள் இருக்கின்றனவோ, அதை அங்கே போய்க்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2006 மே 26

கேளுங்கள் என்று சொல்லியிருக்கிறார். அதைப்போல, முதலமைச்சரும் 5 ஆம் தேதிக்குப் பிறகு டெல்லிக்குப் போய் பிரதமரைப் பார்த்து, சோனியாவைப் பார்த்து, இந்த மாநிலத்திற்குத் தேவையான தேவைகளைக் கேட்க இருக்கிறார். எங்களுக்கு இருக்கின்ற வருத்தம் எல்லாம், இங்கே நம்முடைய திறமைமிக்க முன்னாள் அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் இருக்கிறார். இங்கே முன்னாள் அமைச்சர்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஒருமுறையாவது, டெல்லிக்குப் போய், அமைச்சரைச் சந்தித்து, தமிழ்நாட்டிற்கு இந்த இந்தக் குறைகள் நீக்கப்பட வேண்டும், நிதி வேண்டும் என்று கேட்ட வரலாறு உண்டா? (மேசையைத் தட்டும் ஒலி) அது இல்லாத காரணத்தினால்தான், தலைவர் அவர்கள் ஆளுநர் அறிக்கையிலே மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். அது மத்திய அமைச்சரவைக்கும் மாநில அமைச்சரவைக்கும் இருக்கக்கூடிய ஒரு நல்ல உறவைக் காட்டுவதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நாங்கள் ஒருமுறைகூட டெல்லி சென்று, தமிழ்நாட்டிற்குத் தேவையானதைக் கேட்கவில்லை என்று இங்கே சொன்னார்கள். 7 அமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் இங்கேயிருந்து அவர்கள் சார்ந்திருக்கின்ற இயக்கத்திலிருந்து சென்றிருக்கின்றார்கள். அவர்கள் என்ன திட்டத்தை தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்திருக்கின்றார்கள் என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி என்ற பேரலை, 13 கடலோர மாவட்டங்களை, மக்களை சுருட்டி அடித்தபோது, 8,100 மனித உயிர்கள் மாள வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்தது. அந்த நேரத்தில், மாண்புமிகு அம்மா அவர்கள் நேரடியாக டெல்லி சென்றார்கள். 13,650 கோடி ரூபாய் என்ற அளவிற்கு நிவாரணத் தொகுப்பு தேவை என்று கேட்டார்கள். அவர்கள் தந்தது முதலில் 500 கோடி. மற்றொருமுறை 500 கோடி என்று ஆயிரம் கோடிதான். நீங்கள் மத்திய அரசில் அங்கம் வகித்திருந்தீர்கள். அந்த நேரத்தில்கூட நீங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் கேட்ட தொகையை வாங்கிக் கொடுப்பதற்கு உங்களுக்குத் தமிழக மக்கள்மீது அக்கறை இல்லை. இன்றைக்கு நீங்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்று சொல்வது எந்தவிதத்தில் நியாயம் என்பதை நான் இங்கே கேட்க விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2006 மே 26]

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சர் கூட்டிய கூட்டத்திற்கும் வந்திருந்திருந்தார். நானும் அந்தக் கூட்டத்திலே தி.மு.க. சார்பிலே கலந்துகொண்டேன். அப்போது முதலமைச்சர் அவர்கள் சுனாமி நிதிக்காக மத்திய அரசு இவ்வளவு தொகையை கொடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். நான் ஒருவன் மட்டும்தான் எழுந்து, எந்த அடிப்படையிலே இந்தத் தொகை கேட்டிருக்கிறீர்கள், இது போதாது. இன்னும் அதிகமாக கேட்கவேண்டும். அதற்கு தி.மு.க. துணை நிற்கும் என்று சொன்னேன். இப்போதும் சொல்லுகிறேன், நீங்கள் 13 ஆயிரம் கேட்டீர்கள். ஆனால், மத்திய அரசாங்கம் 2,800 கோடி ரூபாய் கொடுத்தது. ஆனால், பரிதாபம் என்னவென்றால், அந்த 2,800 கோடி ரூபாயிலே, 1,300 கோடி ரூபாய்தான் செலவழித்திருக்கிறீர்கள். மிச்சம் 1,500 கோடி ரூபாய் இப்போது நாங்கள் வந்து செலவழிக்க இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பது திருமதி சோனியா காந்தி அவர்கள் இங்கே வருகை தருகிறபோது, கட்சி நிதியாக ஒரு கோடி ரூபாய் – தமிழக அரசுக்கு நீங்கள் தரவில்லை. மத்திய அரசில் வந்திருக்கின்ற திருமதி சோனியா காந்தியிடத்திலே கொடுக்கின்ற அவ்வளவு அக்கறை, தமிழ்நாட்டு மக்கள்மீது சுனாமி வருகிறபோது தெரிந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்களைவிட, இந்த நாட்டின்மீதும், நாட்டு மக்கள்மீதும் எங்கள் கட்சிக்கு எப்போதும் அக்கறை உண்டு. திருமதி சோனியா காந்தி அவர்கள் வந்தபோது, கட்சி நிதியைக் கொடுத்தார் எங்களுடைய தலைவர். ஆனால், இரண்டு திரைப்படங்களுக்கு வசனம் எழுதி அவர்கள் கொடுத்த பணத்தை நம்முடைய முன்னாள் மேயர் திரு. ஸ்டாலின் அவர்களைக் கொண்டு முதலமைச்சர் அவர்களிடத்திலே 21 இலட்சம் கொடுத்ததிலிருந்து நாட்டுப் பற்று யாருக்கு இருக்கிறது என்பது தெரியும்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமி பேரலையில் தாக்கப்பட்டதில் அந்தமான் தீவும் ஒன்று. அந்த அந்தமான் தீவிலே பல்வேறுபட்ட மக்கள் வாழ்கிறார்கள். ஆந்திரத்து மக்கள் வாழ்கிறார்கள். பஞ்சாப் மக்கள் வாழ்கிறார்கள். பீகார் மக்கள் வாழ்கிறார்கள். தமிழர்களும் வாழ்கிறார்கள். பாதிக்கப்பட்டபோது தமிழகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் நேரில் சென்று தேவையான நடவடிக்கைகள் எடுத்தார்கள். அதேபோல் அந்த மாநிலத்தினுடைய முதலமைச்சர்கள், பஞ்சாப் முதலமைச்சர், பீகார் முதலமைச்சர், ஆந்திரா முதலமைச்சர் இவர்கள் எல்லாம் நேரில் சென்று பார்வையிட்டார்கள். ஆனால், உங்கள் முதலமைச்சர் பார்வையிட்டாரா என்பதை உங்கள் மனசாட்சியே சொல்லும்.

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, I am...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எஸ்.வி. சண்முகம், (குறுக்கீடு) உரையை சீக்கிரம் முடியுங்கள். உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு) எஸ்.வி. சண்முகம், உரையை முடியுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள், அங்கே கொண்டுபோய் ஒரு கோடியை திருமதி சோனியா காந்தியிடம் கொடுத்தீர்கள் என்றார். சன் டி.வி. சார்பில் இங்கு ஒரு 4½ கோடி ரூபாய் கொடுக்க வேண்டும் என்றுதான் வந்தார்கள், வாங்கமாட்டோம் என்று சொல்லிவிட்டீர்கள். தொட்டால் தோஷம் என்று சொல்லிவிட்டீர்கள். அடேங்கப்பா! அப்புறம்தான் நாங்கள் அங்கே கொண்டுபோய் கொடுக்கச் சொன்னோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எஸ்.வி. சண்முகம், பேசுங்கள், சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்)





**திரு. டி. ஜெயக்குமார்:** I am on a Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அப்பாவு அவர்கள், கொஞ்சம் பொறுங்கள். உறுப்பினர் முடிக்கட்டும். (குறுக்கீடு) திரு. சண்முகம், சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி cross talk போய்க்கொண்டே இருக்கும். உறுப்பினர் பேசட்டும். உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) சீக்கிரம் முடிக்கவேண்டும். அடுத்த உறுப்பினர் பேச வேண்டும். Time ஆகிவிட்டது. முடித்துவிட்டீர்களா நீங்கள்? 2 நிமிடம் time கொடுக்கிறோம். நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நேரத்தைக் குறைக்க முயற்சிக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நீங்கள் ஒரு நேரத்தோடு விவாதங்களை நடத்துவதற்குத் திட்டமிட்டிருந்தால், திரு. அப்பாவு அவர்களை இரண்டு மணிநேரம் பேச அனுமதித்து இருக்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்பாவு அவர்கள் பேசும்போது ஏராளமான குறுக்கீடு இருந்தது; அதிகமான குறுக்கீடு இருந்தது. அதனால் அவர்கள் பேசவேண்டிய நிலைமை இருந்தது.

*முற்பகல் 11–25*

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அமைச்சர்களும் பதவியேற்பு விழாவிலே கலந்துகொண்டதைப்பற்றி, அந்த பதவியேற்பு விழா, ஏதோ ஒரு மிகப் பெரிய உலக அதிசயம் நடந்ததுபோல, இந்த ஆளுநர் அறிக்கையிலே ஒரு எட்டு வரி எழுதியிருக்கிறார். மேடையிலே, பதவியேற்றபோதே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மூன்று கையெழுத்திடுகிறார். கூட்டுறவு வங்கியிலே பெற்ற கடன் ஏழாயிரம் கோடி ரூபாய் இரத்து செய்யப்படும், விவசாயக் கடன் இரத்து செய்யப்படும் என்று அறிவித்தார்கள். காவிரி டெல்டா பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளைவிட, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலேதான் அதிகமாகக் கடன் வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் என்ன, பாவம் செய்தவர்களா? எல்லாவற்றையும் சேர்த்தால் இது ஏழு

ஆயிரம் கோடி என்றால், அது 13 ஆயிரம் கோடி. ஆகவே, எல்லா விவசாயிகளையும் ஒன்றாக நினையுங்கள் எனக் கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுக் கடன் இரத்து என்று முதலமைச்சர் அறிவித்ததாவது நடக்குமா? ஏனெனில், மூன்று தினங்களுக்குப் பின்பு நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர், முதலமைச்சர் அறிவித்ததற்குப்பின்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உரையைச் சீக்கிரம் முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** பேரவைத் தலைவர், ரொம்ப அவசரப்படுகிறீர்கள். முதலமைச்சர் கையெழுத்திட்டு, ஒரு நான்கு நாட்களுக்குப் பின்பு, கும்பகோணத்தில் என்று நினைக்கிறேன். நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர், மாண்புமிகு திரு. கோ.சி. மணி அவர்கள் பத்திரிகையாளர்கள் சந்திப்பின்போது, இதிலே சட்டச் சிக்கல் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அப்படி அவர் சொன்னது பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. தொலைக்காட்சியிலும் காட்டப்பட்டது. இந்தச் சட்டச் சிக்கலையெல்லாம் யோசிக்காமலா நம்முடைய முதலமைச்சர் கையெழுத்திட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) அது என்ன சட்டச் சிக்கலாக இருக்கமுடியும்? கூட்டுறவு வங்கி, கடனை இரத்து செய்வது என்றால், நபார்டு வங்கியிடம் அனுமதி கேட்க வேண்டும். நபார்டு, 'ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா'-விடம் கேட்க வேண்டும். இவையெல்லாம் எளிதில் முடிந்துவிடும் என்று கருதித்தான் கையெழுத்திட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். முதலமைச்சர் சொன்னதில், சட்டச் சிக்கல்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேர்தல் அறிக்கையிலேயே தெரிவித்திருந்தார்கள். முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டவுடனே, அந்த விழாவிலே, மேடைக்கே கோப்பினைக் கொண்டு வரச்சொல்லிக் கையெழுத்துப் போட்டார்கள். அவர் அந்தக் கையெழுத்துப் போடுவதற்கு முன்னால், மத்திய நிதியமைச்சரோடும் பேசியிருக்கிறார்கள். நபார்டோடும் பேசியிருக்கிறார்கள். ரிசர்வ் வங்கி, என்ன விதிமுறைகளைப் பின்பற்றும் என்றும் எங்களுக்குத் தெரியும். இவையெல்லாம் தெரியாமல் முதலமைச்சர் கையெழுத்துப் போடவில்லை. எனவே, முதலமைச்சர் கையெழுத்துப் போட்டிருக்கிறார் என்றால், சொன்னதைச் செய்யக்கூடியவர். இப்போது ஆட்சிக்கு வந்து இன்னும் 10 நாட்கள் ஆகவில்லை. நீங்கள் ஆட்சிக்கு வந்து 5 ஆண்டு காலமும் தேர்தல் அறிக்கையிலே சொன்னதைச் செய்யவில்லை. ஆனால், கலைஞர் அவர்கள் கூட்டுறவுத் துறையிலே கடன் வாங்கியவர்களுக்கு



ஏழாயிரம் கோடி ரூபாய் கடனை இரத்து செய்வோம் என்று சொன்னது நிச்சயமாக நடக்கும். அதிலே மாண்புமிகு உறுப்பினருக்கு எந்தச் சந்தேகமும் வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, மாண்புமிகு உறுப்பினர், திரு. எஸ்.வி. சண்முகம், சீக்கிரம் பேச்சை முடியுங்கள். உங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்து, 28 நிமிடங்கள் ஆகின்றது. 28 நிமிடம், அரை மணி நேரம் நீங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன Point of Order? என்ன அது?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு, தேர்தல் நடைபெறுகிறபோது, நாங்கள் இதைச் செய்கிறோம், அதைச் செய்கிறோம் என்று ** வாக்குறுதிகளைத் தரவில்லை. இப்போது நீங்கள் கொடுத்திருக்கின்ற வாக்குறுதிகளைப் போல ** வாக்குறுதிகளைத் தந்து, இந்த ஆட்சிக்கு வரவில்லை. எதைச் சொல்லியிருக்கிறோம். (குறுக்கீடு) நாங்கள் எதையும் சொல்லவில்லை. தேர்தல் வாக்குறுதியைப் பொறுத்தவரை, ஒரு ** வாக்குறுதி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்..

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** உண்மைக்குப் புறம்பான, sorry, மன்னிக்க வேண்டும். உண்மைக்குப் புறம்பான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தையைச் சொல்லியிருப்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** உண்மைக்குப் புறம்பான எனத் திருத்திக்கொள்ளவும்.

**திரு. டி. ஜெயக்குமார்:** திருக்குறளிலே வருவதால் சொல்லலாம் என்று முதலமைச்சர் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. எஸ்.வி. சண்முகம், பேச்சை முடியுங்கள். 28 நிமிடங்கள் ஆகின்றன. அரை மணி நேரம் ஆகிவிட்டது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உறுப்பினர் அவர்கள் திருக்குறளைப் பற்றிச் சொன்னார். தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் 2001 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே எந்தவிதமான தவறான வாக்குறுதியும் தரவில்லை என்று சொல்கிறார். குடும்பத்திற்கு ஒரு வீடு கட்டித் தரப்படும் என்று சொன்னீர்களே, அது என்ன ஆயிற்று? கூட்டுறவுத் தேர்தல் உடனடியாக நடத்தப்படும் என்று சொன்னீர்களே, அவையெல்லாம், என்ன ஆனது? அ.தி.மு.க.–வினுடைய தேர்தல் அறிக்கையிலே சொன்னது எதையும், 100–க்கு 90 பங்கு, கடந்த 5 ஆண்டு காலத்திலே நிறைவேற்றவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எங்களுடைய தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்ட அத்தனையையும் கலைஞர் நிறைவேற்றுவார். அதுவும் பதவி ஏற்றுக்கொள்ளுகின்ற நேரத்திலேயே கிலோ அரிசி 2 ரூபாய். ஜூன் 3 ஆம் தேதி வழங்கப்போகிறோம். காமராஜர் பிறந்த தினத்திலே வாரத்திற்கு 2 முட்டை வழங்கப்போகிறோம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளிலே கலர் டெலிவிஷன் வழங்கப்போகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இங்கே வேலை செய்து கொண்டிருக்கின்ற அரசாங்க ஊழியர்களுக்கு Time Scale கிடையாது. எல்லாம் கான்ட்ராக்ட் லேபரர்ஸ். கவர்னர் உரையிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் Time Scale–லிலே நியமிக்கப்படுவார்கள், நிரந்தரச் சம்பளம் அவர்களுக்குக் கிடைக்குமென்று சொல்லியிருக்கிறார். ஆக, எதையெதைச் சொன்னாரோ, அதை இந்த 5 ஆண்டு காலத்திலே செய்யாமல் தி.மு.க. இந்த ஆட்சியை விட்டு இறங்காது. (குறுக்கீடு)

(முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உறுப்பினர் நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிக் கடன்களைக் கட்டச் செய்வதிலே இருக்கின்ற சிக்கல்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இன்னும் சிக்கலிலேயே இருக்கிறார் அவர். அதற்காக அதைத் தீர்க்க நான் விரும்புகிறேன். கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதாக பத்திரிகையிலே வந்ததே தவிர, உடனடியாக அவர் எனக்குத் தொலைபேசிமூலமாகத்



தெரிவித்தார். நான் சொல்லாதது பத்திரிகையிலே வந்திருக்கிறது என்று என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார். காரணம், அவருடைய வீட்டில் அவருடைய துணைவியாருக்கு மிக ஆபத்தான கட்டத்திலே உடல் நிலைமை ஏற்பட்ட அந்தச் சூழ்நிலையில், நிருபர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு கேட்டபோது, இதைப்பற்றி சில விமர்சனங்களைச் செய்து இருக்கிறார். இது முடியாது என்றோ, சட்டச் சிக்கல் இருப்பதால் இது இயலாது என்றோ அவர் சொல்லவில்லை. வங்கிக் கடன்களைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். வங்கிக் கடன் வேறு விஷயம், கூட்டுறவுக் கடன்தான் நாங்கள் சொல்லியிருக்கிறோம் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். பத்திரிகையிலே வந்ததை எல்லாம் ஆதாரமாகக் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று இதே அவையில் ஏற்கெனவே இருந்த அவையினுடைய தலைவர்கள் தீர்ப்பு அளித்திருக்கின்றார்கள். பத்திரிகைச் செய்திகள் மாத்திரம் ஆதாரங்களாக ஆகிவிட முடியாது. சட்டச் சிக்கல் இருப்பதாக அவர் சொல்லவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். நான் இப்போது மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்கின்றேன். எந்தச் சிக்கலும் இல்லை, இதைத் தீர்த்துவிடப் போகிறார்களே என்று சிலபேருக்கு ஏற்பட்டிருக்கின்ற சிக்கலே தவிர, வேறு எந்தச் சிக்கலும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தெளிவான விளக்கம் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள். முதல்வர் அவர்களே சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், நீங்கள் பேசுங்கள். சண்முகம், விளக்கம் சொன்னதற்கு அப்புறம் (குறுக்கீடு) சொல்கிறேன். கேளுங்கள், உட்காருங்கள். சண்முகம், பேசுங்கள், இல்லையென்றால் அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லப் போகிறேன் நான்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அப்படிச் சொல்லவேயில்லை என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டதால், நான் கூட்டுறவுக் கடனிலிருந்து முட்டைக்கு வந்து விடுகிறேன். வாரம் 2 முறை முட்டை வழங்குவதாக அறிவித்திருக்கிறீர்கள். இது எங்கள் புரட்சித் தலைவர், இதயமெல்லாம் நிறைந்த தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் கண்ட திட்டத்திற்கு கிடைத்த வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 11–35–க்கு பேச்சை முடித்து விடுங்கள். சீக்கிரம் முடியுங்கள்.

[2006 மே 26

**திரு. எஸ்.வி. சண்முகம்:** கொஞ்சம் பேச வேண்டும். நான் பேச வேண்டும். இந்தச் சத்துணவுத் திட்டம் அறிவிக்கப்பட்டபோது, ஆளும் தரப்பினர் எப்படியெல்லாம் விமர்சனம் செய்தார்கள் என்பது நாட்டுக்குத் தெரியும். பிச்சைக்காரர் திட்டம் என்று சொன்னார்கள். அதுமாத்திரமா? பள்ளிக்கூடங்களுக்கு..

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** யார் சொன்னர்கள்? ஆதாரம் இருக்கிறதா? கையில் வைத்துக் கொண்டு பேசுகிறாரா? ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது, இல்லையா? யார் சொன்னது, சொல்லுங்கள்? நாங்கள் பிச்சைக்காரர் திட்டம் என்று எப்போது சொன்னோம்? (குறுக்கீடு) எப்போது சொன்னோம்? யார் சொன்னார்கள், சொல்லுங்கள்? என்ன அடிப்படை, ஆதாரம் சொல்லுங்கள்?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, நாங்கள் அப்படி சொல்லியிருக்கிறோமா என்று கேட்டார். புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு அந்தத் திட்டத்தை அறிவிக்கிறபோது நிதி எப்படி இதற்கு என்று நீங்கள் கேட்டீர்கள். (குறுக்கீடு) சொல்லிவிடுகிறேன். ஒரே நிமிஷம். நான் துண்டு ஏந்தி பிச்சையெடுத்தாவது இந்தத் திட்டத்தை கொண்டு வருவேன் என்று சொன்னார். அதற்குப்பிறகு நீங்கள் பேசுகின்றபோது ஒன்றைச் சொன்னீர்கள். குழந்தைகள் எல்லாம் தட்டு ஏந்தி பிச்சையெடுக்கிற திட்டத்தையா கொண்டு வருகிறீர்கள் என்று பேசினீர்கள். அது அந்தப் பதிவேட்டிலே இருக்கிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் ஒன்றும் முன்னாள் முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது அல்ல. ஜஸ்டிஸ் கட்சிக் காலத்திலிருந்து வந்த திட்டம். ஆகையால், இதை யாரும் குறை சொல்லியிருக்கமுடியாது. அதனால்தான் இன்றைக்கும் அந்தத் திட்டத்திற்கு மதிப்பளித்து நம்முடைய முதல்வர் அவர்கள் அந்தத் திட்டத்தை...(குறுக்கீடு) அவர் என்ன பின்னாலே. (குறுக்கீடு) சொல்லவில்லை. (குறுக்கீடு) இதையெல்லாம்...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, they are all latest additions to that party, they don't know anything about the matter. It is long past, 20 years back...



2006 மே 26]

*முற்பகல் 11–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லப் போகிறேன். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டை வழங்குகிற திட்டம் குழப்பத்தோடுதான் வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கையெழுத்திட்டபோது, வெள்ளியும், செவ்வாயும் வழங்குவேன் என்று சொன்னார்கள். இப்போது ஆளுநர் உரையில் திங்கள், புதன் என்று பிராக்கெட்டிலே வந்திருக்கிறது. ஒரு திட்டம் மாற்றப்படும்போது அது ஏன் மாற்றப்படுகிறது என்பதைக்கூட பகிரங்கமாக அறிவிக்காத நிலை இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, திட்டத்தை மாற்றவில்லை, திட்டம் கலைஞர் சொல்வதுபோல்தான் நடைபெறுகிறது. நாட்கள் மாற்றுவதற்கு எல்லாம் காரணம் சொல்லவேண்டுமானால் ஆட்சியே நடத்தமுடியாது. இப்போது திங்கட்கிழமை, புதன்கிழமை. முட்டையே இல்லை என்று மாற்றினவர்கள் நீங்கள். இப்போது வந்து கேட்பது என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. சண்முகம்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிழமை மாற்றியதைப் பற்றி உங்களால் பகிரங்கமாகச் சொல்லமுடியாது. அதிலே ஆத்திகமும், நாத்திகமும் அடங்கியிருக்கிறது. பகிரங்கமாகச் சொல்லமுடியாது உங்களாலே, ஏன் மாற்றினோம் என்று.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்திகருடைய குரலுக்கும் மதிப்பு கொடுக்கிற முதல்வர் இருக்கிறார் என்பதை ஏற்றுக் கொண்டிருப்பதற்கு நன்றி. இதிலே எங்களுக்கு ஒன்றும் வெட்கப்பட வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** அப்படியென்றால் பகிரங்கமாக கிழமை மாற்றியதற்கு என்ன காரணம் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன காரணம் என்று கேட்கிறார். நாட்டிலே இருக்கக்கூடிய சில நல்லவர்கள் இந்தத் திட்டத்தை வெள்ளிக்கிழமை வேண்டாம் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சியை மதிக்கின்ற தலைவர் கலைஞர். எதிர்க்கட்சி என்ன சொல்வது, நாங்கள் என்ன மதிப்பது

என்று ஜனநாயகத்திலே ஆணவத்தோடு இருக்கக்கூடியவர் அல்ல. உமாபாரதி அவர்கள், மாண்புமிகு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஒரு கட்சியினுடைய தலைவருமாக இருக்கக்கூடிய உமாபாரதி அவர்கள் ஒரு வேண்டுகோள் வைத்தார். அது வெள்ளிக்கிழமை வேண்டாம், வேறு நாளுக்கு மாற்றிக் கொள்ளுங்கள் என்று சொன்னார். எங்களுடைய தலைவர் அகில இந்திய அளவிலேயிருந்து வேண்டுகோள் வந்தாலும்கூட, அதில் இருக்கக்கூடிய உண்மையை உணர்ந்து உடனடியாக மாற்றி திங்கள், புதன் என்று உத்தரவிட்டிருக்கிறார். முட்டை போடுகிறாரா இல்லையா என்றுதான் பார்க்க வேண்டுமேதவிர, அது எந்தக் கிழமையிலே போடுகிறார் என்பது அல்ல பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், இரண்டே நிமிடம்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்தை ஏற்று, கிழமையிலிருந்து முட்டைக்கு வந்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முட்டை போடுவதைப் பற்றிய விவாதம் நடக்கிறது. இந்த நாட்கள் மாற்றியதால் மாணவர்கள் யாரும் சாப்பிட மறுக்கிறார்களா என்பதை உறுப்பினர் தெளிவுபடுத்துவாரா என அறிய விரும்புகிறேன்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது எதிர்க்கட்சியாக இருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முட்டை போடுவதைப் பற்றிப் பேசுகிறார்கள். இவர்கள் ஏழைக் குழந்தைகளுக்கு முட்டையே போடமாட்டேன் என்று மறுத்தவர்கள். இதைப்பற்றிப் பேசுவது நியாயமா? இதை நீங்கள்...(குறுக்கீடு) பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிறகுதான், மக்கள் சூடு போட்ட பிறகுதான், மீண்டும் முட்டை வழங்கினார்கள் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிந்து கொள்வார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எஸ்.வி. சண்முகம், சீக்கிரம் பேசி முடியுங்கள்.





**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முட்டை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அடுத்த உறுப்பினரை அழைக்கப்போகிறேன்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் சுட்டிக்காட்டுவதற்குத்தான் இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் போல ** நாங்கள் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்குறிப்பிலிருந்து ** என்ற வார்த்தை நீக்கி உத்தரவிடப்படுகிறது.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** 1996 முதல் 2001 வரையில் அன்றைக்கு ஆளும் தரப்பிலே இருந்த அரசாங்கம் முட்டை போட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் பற்றிச் சொல்லி இருக்கிறா அவர் பதில் சொல்வதற்கு அருள்கூர்ந்து தாங்கள் நேரம் ஒதுக்க வேண்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு சிவபுண்ணியம்.

முற்பகல் 11–

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்க சொல்கிறார். ** வந்திருக்கிற கூட்டத்திலே அவர் ஒருத்தர். (மேசையை தட்டும் ஒலி) பொதுவுடைமைக் கட்சி யாருக்கும் ** பழக்கமே எங்களுக்கு கிடையாது. எந்தவொரு நல்ல கருத்து இருந்தாலும் ஆதரிப்போம்; தீ கருத்து இருந்தால் அதை எதிர்ப்போம் என்பதுதான் எங்களுடை கொள்கை. ** என்பது அவர்களுடைய கொள்கை. 5 ஆண்டு காலத்தி

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்ற

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 மே 26

இந்த மேசையைத் தட்டியே இங்கேயிருக்கிற bolt எல்லாம் கழன்று போய்விட்டது என்பது நாடறிந்த உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மேசையை எல்லாம் பாருங்கள். 5 ஆண்டு காலத்திலே வேறு என்ன நடந்தது? 5 ஆண்டு காலத்தில், 365 நாட்களும் மேசையைத் தட்டி, அந்த bolt–களைக் கழற்றியதுதான் வேலை. அவர் இல்லை, அவர் முன்னால் ஒரு தடவை கழற்றியிருக்கிறார், அதனாலே சொல்கிறார். ஆகவே, அவர் சொன்ன அந்த வார்த்தையை அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** வார்த்தையை அவைக்குறிப்பிலிருந்து நீக்குவதற்கு உத்தரவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் கூறிய ** என்ற வார்த்தையையும் அவைக்குறிப்பிலேயிருந்து நீக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தையை நீக்கச் சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13–வது சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற உங்கள் ஒவ்வொருவரையும் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே மனப்பூர்வமாக வரவேற்று, வாழ்த்தி என்னுடைய உரையினைத் தொடங்குகின்றேன். (குறுக்கீடுகள்) ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த மன்றத்திலே பேசுவதற்கான வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 40 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) 40 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன், அதற்குப் பிறகும் முடிக்கவில்லை என்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடு) ஒரு நிமிடம், சீக்கிரம் முடியுங்கள். ஒரே நிமிடம், சீக்கிரம் முடியுங்கள்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 மே 26]

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு ஆட்சியில் இருந்தபோது, இன்றைய ஆட்சியாளர்கள் ஒரு முட்டை வழங்கினார்கள். (குறுக்கீடுகள்) அந்த முட்டையை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர், நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** அந்த முட்டையை வழங்குவதிலேயே முறைகேடுகள் இருந்ததாக, பாதி முட்டைகூட போய்ச் சேரவில்லை என்றெல்லாம் பத்திரிகைகள் கட்டுரைகள் எழுதின. இப்போது இரண்டில் ஒன்றாவது போய்ச் சேருமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், போதும், உட்காருங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்ப விஷயத்தைப் பேசவிடாமல் பண்ணிவிட்டீர்கள். அவர்களுக்கே நேரத்தைக் கொடுத்துவிட்டீர்கள். ஆளுநர் அறிக்கையில் முல்லைப் பெரியாறு அணையை உயர்த்துவோம் என்று கூறியுள்ளீர்கள். பாலாற்றின் குறுக்கே கட்டப்படவிருக்கின்ற அணையைத் தடுப்போம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த இரண்டு பெரிய விஷயங்களின்மீது உங்களுக்கு இப்போதாவது கவனம் வந்ததே என்பதை நினைத்து சந்தோஷப்படுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** எங்கள் அம்மா அவர்கள் இதற்காக எல்லாம் போராடியபோது, வாய் பொத்தி இருந்தீர்கள். இன்றைக்கு அறிக்கையாகத் தந்திருக்கிறீர்கள். செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம்...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு அணையைப் பற்றி என்ன சொல்கிறீர்கள்? அந்த அணையிலே 152 அடி வரை தண்ணீர் இருந்தது. யாரோ இரண்டு பேர் வந்து அணை weak-ஆக இருக்கிறது என்று சொன்னவுடனே, 1979–ல் கேரளாவைச் சேர்ந்த தாமஸ் என்பவர் அன்றைக்கு Central Water Commission–லே இருந்தார். அன்றைக்கு இங்கே எம்.ஜி.ஆருடைய ஆட்சி; திருவனந்தபுரத்திலே பேச்சுவார்த்தை. அது weak-ஆக இருக்கிறது என்று ஒத்துக்கொண்டு, 136 அடி வரையிலே நாங்கள் தண்ணீரை நிறுத்துகிறோம் என்று

குறைத்துக்கொண்டு வந்து செய்ததெல்லாம் பழைய கதை, கிளறாதீர்கள். ஏனென்றால், இரு மாநில பிரச்சினைகள் அது. இன்றைக்கு என்ன நிலைமை என்று கேட்டீர்கள் என்றால், கேரளத்திலேயிருக்கிற சில பேர், அந்த உயர் நீதிமன்றத்திலே வழக்கு போட்டார்கள், அதிலே மறுபடியும் 152 அடி தண்ணீர் நிறுத்தவேண்டும் என்று. நம்முடைய மாநிலத்துக்காரர்கள் இந்த ஹைகோர்ட்டிலே போட்டார்கள். இரண்டும் ஒரே சப்ஜெக்ட், இரண்டு மாநில ஹைகோர்ட்டிலே இருக்கக்கூடாது என்று அன்றைக்கு ஆட்சியிலே இருந்த நாங்கள் சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு பெட்டிஷன் போட்டு, இரண்டு மனுக்களையும் சுப்ரீம் கோர்ட் விசாரிக்கவேண்டும் என்று சொல்லி, அதை சுப்ரீம் கோர்ட்டுக்குக் கொண்டுபோய், அப்போதுதான் சுப்பிரமணிய சுவாமி அவர்கள், எங்களோடு சுப்ரீம் கோர்ட்டிலே அவரும் இணைந்து, பிறகு, அதனுடைய தீர்ப்பின் அடிப்படையிலேதான் இன்றைக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். Supreme Court-

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியாகிவிட்டது. சீக்கிரம் நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படியோ பொதுப் பணித் துறை அமைச்சர் சொன்னதுமாதிரி முல்லைப் பெரியாறு அணை உயர்த்தப்பட்டு, பாலாற்றின் குறுக்கே அணை கட்டப்படுவது தடுக்கப்பட்டால் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைவோம். ஆனால், அது ரொம்ப கஷ்டம். ஏனென்றால், கேரளாவிலே ஆளுகின்ற...

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன், நன்றி சொல்லி சீக்கிரம் முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுவதிலே எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. இவரே அதைக் கஷ்டம் என்று சொன்னால் *(குறுக்கீடு)* ஏதோ கேரள அரசாங்கத்தையும், மற்ற அரசாங்கத்தையும் தூண்டிவிடுவதுபோல இருக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் ஒரே வார்த்தையிலே முடியுங்கள். ஒரு வரியில் சீக்கிரம் முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்திலே அப்படிப்பட்ட ஒரு கருத்து இடம் பெறுவது நல்லதல்ல. நம்முடைய தமிழ்நாட்டிற்குத்தான், நாம் தேவைகளைப் பெற வேண்டுமேதவிர மற்ற மாநிலங்களுக்காக நாம் வாதாடுவது முறையல்ல. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரே வார்த்தையிலே முடியுங்கள் சார். முடியுங்கள், முடியுங்கள். உறுப்பினர் முடியுங்கள் *(குறுக்கீடுகள்)* சரி, மகிழ்ச்சி. உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13-வது சட்டப் பேரவையினுடைய முதல் ஆளுநர் உரையின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக, இந்த விவாதத்திலே பங்களிக்க அனுமதி தந்துள்ள உங்களுக்கு என்னுடைய மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வரலாற்றுப் புகழ்மிக்க ஒரு தேர்தல், அற்புதமான முடிவுகளைத் தந்திருக்கிறது. விவாதத்திலே கலந்துகொள்வதற்கு முன்னால், இந்த அவையிலே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நண்பர், மாண்புமிகு உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள், இந்த அவையிலே பதிவு செய்துள்ள கருத்திற்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில விளக்கங்களைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திய வரலாற்றில் இந்தத் தேர்தல் ஒரு விபத்து என்று குறிப்பிட்டார். ஒரு சிறுபான்மை அரசு பதவியேற்று இருப்பதாகக் குறிப்பிட்டார். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருக்கு வாய்ப்புக் கொடுத்தாகிவிட்டது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் உட்காருங்கள். நான் முடிக்கச்சொல்லி எவ்வளவு நேரம் ஆகிவிட்டது.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே ஒரு சட்டமன்ற பயங்கரவாதம்– Legislature terrorism நடந்துகொண்டிருக்கிறது. விவாதத்திலே பங்கேற்கின்ற உறுப்பினர்கள் இந்த அவையின் விதிகளுக்குட்பட்டு எதைப்பற்றி பேச வேண்டுமானாலும் பேசுவதற்கான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

அந்தச் சுதந்திரத்தை, ஒவ்வொரு முறையும் குறுக்கிட்டு, பேசுகின்ற உறுப்பினருடைய சிந்தனை ஓட்டத்தைத் தடை செய்து, அற்புதமான அரசியல் கருத்துகள் விவாதத்திற்கு வரவேண்டிய இந்த மேடையை, கொச்சையாக்கி, தமிழக மக்களை, வாக்களித்த மக்களை கேலிக்கூத்தாக்குகிற ஒரு ஜனநாயகக் கொடுமையினை நாங்கள் அனுமதிக்கமாட்டோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* கருத்துக்குக் கருத்து மோதுவோம், விவாதத்துக்கு விவாதம் மோதுவோம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நண்பர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, I am not yielding, Sir, I am not yielding, I am not yielding. No, (Interruptions) I am not yielding to you. (Interruptions) I am not yielding. (Interruptions) I am not yielding, Sir. (Interruptions)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** I am not yielding, Sir. *(குறுக்கீடுகள்)* I am not yielding, Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உட்காருங்கள் *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். Your Member has already been given so many chances. They have already spoken in the House. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** Non-sense என்று பேரவைத் தலைவர் சொல்லுகிறார். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். Non-sense என்று சொல்லவில்லை. *(குறுக்கீடுகள்)* No, no. Your Member has been given so many chances *(குறுக்கீடுகள்)* chances, chances. உறுப்பினருக்கு chances *(குறுக்கீடுகள்)* Your Member has been given so many chances *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், உட்காருங்கள். Chances என்றுதான் சொன்னேன். உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உங்கள் உறுப்பினருக்கு நிறைய Chances கொடுத்து இருக்கிறேன். உட்காருங்கள். 47 நிமிடம் கொடுத்து





இருக்கிறேன் உங்கள் உறுப்பினருக்கு. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், உட்காருங்கள். உங்கள் உறுப்பினர் பேசுவதற்கு 47 நிமிடங்கள் கொடுத்து இருக்கிறேன்.

*முற்பகல் 11–50*

**திரு. டி. ஜெயக்குமார்:** ஆரோக்கியமான விவாதம் என்றால் எதிர்க்கட்சிக்கு வாய்ப்புக் கொடுக்கவேண்டும். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர் பேசுவதற்கு 47 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் தலைவருக்கு *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் தலைவருக்கு, *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் தலைவருக்கு *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் தலைவருக்கு பலமுறை வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. டி. ஜெயக்குமார்:** நான் Subject-ல் பேசுகிறேன். *(குறுக்கீடுகள்)* நான் subject-ல்தானே பேசுகிறேன். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு நான் சொல்கிறேன், நான் chances என்று சொன்னதை நீங்கள் non-sense என்று சொல்கிறீர்கள், என்ன இது? உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* சரி, மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி எதிர்க்கட்சி மீது குற்றச்சாட்டுகள் சுமத்தும்போது, எதிர்க்கட்சிக்கு அந்தக் குற்றச்சாட்டுகளை மறுப்பதற்கு நியாயமான அந்த வாய்ப்புகள் தரப்படவேண்டும். இதுதான் ஜனநாயக மரபு. *(குறுக்கீடுகள்)* ஆனால், பல குற்றச்சாட்டுகள் காலையிலேயிருந்து ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது, இந்த அவையிலே தவறான குற்றச்சாட்டுகள் எழுப்பப்படும்போது, முன்வரிசையிலே உள்ள எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர், கொறடா என்கின்ற அடிப்படையில் நானும் பல்வேறு உறுப்பினர்களும் அதை மறுக்கின்ற அந்த வாய்ப்பு கேட்டபோது, பலமுறை மறுத்திருக்கின்றீர்கள். ஆனால், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஜனநாயகக் கடமைபற்றி சொல்கின்றார்கள். ஜனநாயகக் கடமை என்பது என்ன? ஓர் ஆரோக்கியமான intellectual debate என்று சொன்னால்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** ஓர் ஆரோக்கியமான debate என்று சொன்னால், ஒரு intellectual debate என்று சொன்னால், எந்தக் குற்றச்சாட்டு வேண்டுமானாலும் கூறிவிடலாம். அதைமட்டுமே பதிவு செய்துவிட்டு, எதிர்க்கட்சிகள் கூறுவதைப் பதிவு செய்யாமல் இருப்பது, அது மரபு அல்ல. எனவே, அவர்கள் கூறும்போது, உடனடியாக எங்களுடைய உறுப்பினர்கள் கையைத் தூக்கும்போது, அந்த உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கொடுப்பதுதான் ஜனநாயக மரபு. அப்போதுதான் விவாதம் என்பது ஓர் ஆரோக்கியமானதாக இருக்கும்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு நம்முடைய நண்பர் கொறடா ஜெயக்குமார் அவர்கள் குறிப்பிட்டதைத் தாங்கள் குறித்து வைத்துக்கொண்டு, கடந்த காலத்திலே பேரவைத் தலைவர் என்னுடைய அருமை நண்பர் காளிமுத்து அவர்கள் எப்படி இந்த அவையை நடத்தினாரோ, அதைப் பின்பற்றி இந்த அவையைத் தாங்கள் நடத்த வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ், உரையாற்றுங்கள். *(குறுக்கீடுகள்)* உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள், திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சண்முகம் அவர்கள் பேசுகின்றபோது, இந்திய நாட்டில் நடந்த ஒரு தேர்தல் விபத்தில் ஏற்பட்ட சிறுபான்மை அரசு என்று சொன்னார். நான் அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசை யாராவது சிறுபான்மை அரசு என்று சொன்னால், அவர்கள் இந்திய அரசியல் சாசன சட்டத்தின் அடிப்படை தெரியாதவர்கள் என்று பொருள். *(மேசையைத் தட்டும் ஒலி)* வாழ்கின்றபோதே வரலாறாக வாழ்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலே *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழகத்திலே தேர்தலுக்கு முன்பே ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டணி அவருடைய தலைமையை ஒத்துக்கொண்டு, அவர்கள் தலைமையிலே ஒரு நல்லாட்சி அமைய வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி





மக்கள் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் போன்ற அரசியல் அமைப்புகள் அவர்களுடைய தலைமையிலே நல்லாட்சி ஏற்பட வேண்டுமென்று வாக்குக் கேட்டு, மூன்றில் இரண்டு பங்கு இடங்களைப் பெற்று இந்த அவைக்கு வந்திருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* எனவே, இதை ஒரு சிறுபான்மை அரசு என்று சொல்வது it is Constitutionally wrong, it is ethically wrong and also politically wrong. இந்த அரசு இன்று இருக்கிறது என்று சொன்னால், இந்த அமைச்சரவை இன்று இருக்கிறது என்று சொன்னால், ஜனநாயக முற்போக்குக் கூட்டணி என்கிற அஸ்திவாரத்தின்மேல் எழுந்து நிற்கிற அரசு இந்த அரசு. *(மேசையைத் தட்டும் ஒலி)* அமைச்சர்கள் வேண்டுமானால் அவர்கள் இருக்கலாம். ஆனால், இந்த ஆட்சி எங்களுடைய ஆட்சி. *(மேசையைத் தட்டும் ஒலி)* அஸ்திவாரத்திற்குக் கட்டடத்திலே பங்கில்லை என்று நீங்கள் எப்படிச் சொல்ல முடியும்? எனவே, இந்த ஆட்சி செயலாற்றுவதை, இந்த ஆட்சி சிந்திப்பதை, இந்த ஆட்சி நடப்பதை, இந்த ஆட்சிக்குப் பாதுகாவலாக, பக்கபலமாக, அரணாக நின்று பார்க்கின்ற உரிமையை மக்கள் எங்களுக்குத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே சிறுபான்மை அரசு என்று, இந்த அரசுக்கு இல்லாத, இருக்கமுடியாத ஒரு ஸ்திரமற்ற தன்மையைக் *(குறுக்கீடுகள்)* கொண்டு வருவதற்காக... *(குறுக்கீடு)*

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** அரசியல் நோக்கத்துடன் சொல்லப்படுகின்ற இந்த வார்த்தைகளைப் பற்றி பொது மக்கள் கவனமாக இருக்க வேண்டும் என்பதற்காக நான் இந்த அவையிலே பதிவு செய்கிறேன்.

இன்று, தமிழகத்து வாக்காளப் பெருமக்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலும் குறிப்பாக, கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்கள், இந்திய ஜனநாயகத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள். ஏறக்குறைய சரிக்குச் சரி, இஸ்லாமிய மக்களும் இந்து மக்களும் உள்ள அந்தத் தொகுதியிலே கிருத்துவ மதத்தை ஏற்றுக் கொண்டிருக்கின்ற நான், வெற்றி பெற்று இங்கே வரமுடிகிறது என்று சொன்னால், அன்னை சோனியா காந்தி, டாக்டர் கலைஞர் *(மேசையைத் தட்டும் ஒலி)* இவர்கள் தந்த, அந்த அற்புதமான தேர்தல்

அறிக்கை. அதுதான் வெற்றி பெற்றிருக்கிறது. இந்திய ஜனநாயகத்தின் நடமாடுகின்ற வெளிப்பாடாக, உதாரணமாக நான் இந்த அவையிலே நிற்கிறேன். ஓர் அற்புதமான ஆளுநர் உரை. வழக்கமாக ஆளுநர் உரை என்பது எப்படி இருக்கும் என்று சொன்னால்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. சண்முகம், நீங்கள் உட்காருங்கள். உங்களுக்கான வாய்ப்பெல்லாம் முடிந்துவிட்டது. உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ஆளுநர் உரை, வழக்கமாக இந்த சட்டமன்றத்தினுடைய நீண்ட, நெடிய வரலாறுகளை நீங்கள் பார்த்தால், ஆளுநர் உரை எப்படி இருக்குமென்று சொன்னால், ஒவ்வொரு முறையும் அரசு என்ன செய்ய இருக்கிறது என்கிற எண்ண ஓட்டத்தைச் சொல்கின்ற உரையாக இருக்கும் அல்லது அரசு போடுகின்ற திட்டங்கள், என்ன திட்டங்களை நாங்கள் செய்யப்போகிறோம் என்று சொல்கின்ற உரையாக இருக்கும். ஆனால், டாக்டர் கலைஞர் அவர்கள், எப்பொழுதுமே, எதையுமே மாறுபாடாகச் சிந்திக்கின்றவர்கள். Shiv Khera என்கிற ஆங்கில அறிஞன் அற்புதமாகச் சொல்வான், "Winners don't do different things, they do things differently" என்று. "வெற்றியாளர்கள் புதிதாக எதையும் செய்வதில்லை. ஆனால், தாங்கள் செய்வதைப் புதிதாகச் செய்கிறார்கள்" என்று சொன்னார். அதைப்போல, ஆளுநர் உரைக்குக்கூட, ஒரு வடிவம் கொடுத்திருக்கிறார். அது கருத்துகளைச் சொல்கின்ற உரையல்ல. பத்து நாட்களில் செய்த சாதனைகளினுடைய பட்டியலாகவே இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் வரிசைப்படுத்திச் சொல்வேன்.

தேர்தலிலே இந்திய ஜனநாயகத்தைப் பார்க்கின்றபோது, இந்த இந்திய ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாகச் சொல்வார்கள். "ஒவ்வொரு தேர்தலிலும் வாக்காளர்களின் விரலில் வைக்கின்ற கறுப்பு மையின் கால அளவுகூட, வாக்குறுதிகளின் ஆயுட்காலம் இருப்பதில்லை. விட்டில் பூச்சிகளைவிடவும் வேகமாகச் செத்து விழுகின்றன. அரசியல்வாதிகள் தரும் தேர்தல் அறிக்கைகளும், வாக்குறுதிகளும், ஓட்டு வாங்கிச் செல்லும் அரசியல்வாதிகளும், அடுத்த தேர்தல்வரை காணாமல் போகிறார்கள்."

"காரு போட்டு ஓடி வந்து, கையடித்து, சலாம் போட்டு,
அக்கான்னு, தங்கச்சின்னு, அன்புச் சகோதரின்னு,
அவசரமா உறவு சொல்லி, ஓட்டுக் கேட்க வந்தாங்களே செல்லாத்தா,
இப்ப ஒருவரையும் காணோமே என்னாத்தா"



ன்று கேட்ட நாள் மாறி, ஓட்டுப்போட்ட மை காய்வதற்கு முன்னாலே, டிப்போன அரசியல்வாதிகள் வாழ்ந்த காலம்போய், பதவிப் பிரமாணம் எடுத்த மை காய்வதற்கு முன்னாலே தேர்தல் அறிக்கையை நிறைவேற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதையெல்லாம் பாராட்ட வேண்டும்.

தமிழகத்தினுடைய அரசியலுக்கு இன்று ஒரு மிகப்பெரிய பொற்காலம். இப்படிப்பட்ட பொற்காலம், இந்த நாட்டில் தமிழகத்தில் வருவதற்கு மீண்டும் 100 ஆண்டுகள் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏன் சொல்கிறேன்? இன்று சொன்னார்களே, மத்திய அரசு, அந்த மத்திய அரசினுடைய தலைவரையோ அல்லது பிரதமரையோ, இல்லை. அந்த மத்திய அரசுக்கு உந்துகின்ற சக்தியாக, தலைமைத் தலைவியாக இருக்கின்ற தியாகப் பெருந்தகை அன்னை சோனியா காந்தியையோ, ஒரு தொலைபேசியிலே பேசி அழைத்தால்போதும், டாக்டர் கலைஞர் அவர்கள் செய்வார்கள் என்று சொன்னாரே. (மேசையைத் தட்டும் ஒலி) அது நூற்றுக்கு நூறு உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், மூன்று தினங்களுக்கு முன்பு, சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரும், நானும் இந்த தேசத்தினுடைய பிரதமரைச் சந்தித்தோம். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவியாக இருக்கின்ற அன்னை சோனியா காந்தியைச் சந்தித்தோம். பார்க்கின்றபோது, இரண்டுபேரும் நெகிழ்ந்து போனார்கள். டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், தமிழகத்திற்கும் நன்றியால் நிரம்பியிருக்கிறார்கள். ஒவ்வொரு தேர்தல் உரையிலும் சொன்னார்கள், இந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, டெல்லியிலே இருக்கிறது என்று சொன்னால், அது தமிழகம் தந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள். இந்த நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான், இன்று இந்தியத் திருநாட்டின் அரசை நிர்ணயிக்கின்ற வரலாற்றுப் புகழ்மிக்க பதவிகளிலே இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை இந்திய சரித்திரத்திலே தமிழகத்திலே நடந்திராத அற்புதமான அரசியல் நிகழ்வு. எந்த அமைச்சரையும் எடுத்துக்கொள்ளுங்கள். இந்த நாட்டின் நிதியமைச்சரா, தமிழகத்தைச் சார்ந்தவர். இந்த நாட்டின் சாலைப் போக்குவரத்து–கப்பல் துறை அமைச்சரா, தமிழகத்தைச் சார்ந்தவர். இந்த நாட்டினுடைய தகவல் தொழில்நுட்ப தொலைத் தொடர்பு சாதன அமைச்சரா, தமிழகத்தைச் சார்ந்தவர். இந்த நாட்டினுடைய திட்ட அமலாக்க அமைச்சரா, இந்தத் தமிழகத்தைச் சார்ந்தவர். இந்த நாட்டினுடைய சுகாதார அமைச்சரா, தமிழகத்தைச் சார்ந்தவர். எப்பொழுது நாட்டின் இரயில்வே அமைச்சரா, தமிழகத்தைச் சார்ந்தவர்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2006 மே 26

வரப்போகிறது இந்தக் காலம். இந்தக் காலத்தை, இரண்டு ஆண்டுகள் பயன்படுத்தாத தமிழகத்தை, இந்த நாட்டு மக்கள் மன்னிப்பார்களா? (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு வருடங்கள்...

*நண்பகல் 12–00*

**திரு. டி. ஜெயக்குமார்:** தலைவர் அவர்களே...

**திரு. சொ. கருப்பசாமி:** தலைவர் அவர்களே...

**திரு. கே. பாண்டுரங்கன்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். No Point of Order. குறைபாடு எதுவுமே இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No Point of Order. Please உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினரைப் பேச விடுங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினரைப் பேசவிடுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) No Point of Order. Please உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதையும் சட்டமன்ற மரபுகளுக்கு விரோதமாகவோ, தவறான தகவலையோ அல்லது சட்டமன்ற விதிகளில் புறக்கணிக்கப்பட்ட செய்திகளையோ இந்த அவையில் நான் பேசவில்லை. ஆகவே, என்னை குறுக்கீடு செய்வதற்கு நான் அனுமதிக்கவும் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Point of Order-க்கு அதிலே ஒன்றுமேயில்லை. (குறுக்கீடுகள்) Don't interfere. Please உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இரண்டு வருடம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் உட்காருங்கள். அவரைப் பேச விடுங்கள். (குறுக்கீடு) பேச விடுங்கள், time ஆகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.



2006 மே 26]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன Point of Order? உட்காருங்கள், உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களுடைய மேலான கவனத்தையும் இந்த அவையினுடைய கவனத்தையும் ஒரு செய்தியின்பால் ஈர்க்கிறேன். 24–5–2006 அன்று நம்முடைய மக்களவையிலே, இந்திய நாட்டினுடைய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஒரு வினாவிற்கு நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு பெல்லார்மின் அவர்கள் நாடாளுமன்றத்திலே எழுப்பிய வினாவிற்கு அவர் பதில் அளித்து இருக்கிறார். அந்த வினாவையும் அதனுடைய பதிலையும் உங்கள் மூலம் இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் என்ன நிலையில் உள்ளது என்றும், இந்தத் திட்டம் குறித்து முன்மொழிவுகள் ஏதும் தமிழக அரசிடமிருந்து வந்துள்ளதா என்றும், இதில் மத்திய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்றும், லோக்சபாவில் மார்க்சிஸ்ட் உறுப்பினர் பெல்லார்மின் கேள்வி எழுப்பினார். இக்கேள்வி நட்சத்திர கேள்வியாக எடுத்துக்கொள்ளப்பட்டு, மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கபில் சிபல் பதில் அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

"சென்னை நகரின் குடிநீர்த் தேவைகளைக் கணக்கில்கொண்டு, தினமும் ஒரு மில்லியன் லிட்டர் குடிநீரை உற்பத்தி செய்யும் வகையில், திட்டம் வடிவமைக்கப்பட்டு, சோதனை அடிப்படையில், 2006 ஆம் ஆண்டு மே மாதத்தில் மாதிரி ஆலை உருவாக்கப்பட்டுள்ளது.

இலட்சத் தீவில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் ஆலையில் ஒரு லிட்டர் குடிநீரைத் தயாரிப்பதற்கு 7 முதல் 9 காசுகள் செலவாகிறது. சென்னையில் ஒரு மில்லியன் லிட்டர் திட்டம் அமல்படுத்தப்பட்டால், ஒரு லிட்டர் குடிநீரினுடைய உற்பத்திச் செலவு 6 காசுகளாகக் குறையும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. லட்சத் தீவில் அமைக்கப்பட்டுள்ளது போல, தமிழகத்திலும் ஓர் ஆலை அமைக்க தமிழக அரசிடமிருந்து எந்த ஒரு முன்மொழிவும் இதுவரை வரவில்லை."

இது எந்தத் தேதி, 24–5–2006. இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டு எத்தனை ஆண்டுகள் ஆயின? இரண்டு ஆண்டுகள் ஆயின. ஆயிரம் கோடி ரூபாய். இந்திய நாட்டின் அரசியல் சரித்திரத்தில் பாராளுமன்ற

நிகழ்வுகளில் ஒரு மாநிலத்தினுடைய ஒரு தலைநகருக்கு ஒரு மத்திய அரசு ஆயிரம் கோடி ரூபாயை 'இந்தா பிடி' என்று கையிலே கொடுத்தால்கூட, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முன்மொழிவுகள்– தினமலர் 24–5–2006...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், அவர் அவைக்குறிப்பிலே உள்ளதை வாசிக்கிறார். He is speaking with the proof. Sit down. Please உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் அவைக்குறிப்பிலே உள்ளதைப் படிக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நீங்கள் எல்லாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு உறுப்பினர். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள். பாராளுமன்ற அவைக்குறிப்பிலே உள்ளதைத்தான் படிக்கிறார்.

*பிற்பகல் 12–05*

***மாண்புமிகு திரு. வி.பி. துரைசாமி** (பேரவைத் துணைத் தலைவர்): பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வியையும், அதற்கு அமைச்சர் அளித்த பதிலையும் படித்தார்கள். (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்ட கேள்வியையும், அதற்கான பதிலையும் படிக்கிறார். அது ஆதாரமற்றது என்று சொன்னால் நீங்கள் உரிமை மீறல் பிரச்சினை வேண்டுமென்றால் கொண்டு வரலாம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. அன்பழகனைப் பேசச் சொல்லுங்கள். முன்னாள் அமைச்சருக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள். அது அவர் சப்ஜெக்ட்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையனைப் பேசச் சொல்லியிருக்கிறேன். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். அவர் பேசவேண்டுமென்று கேட்கிறார். (குறுக்கீடுகள்) சரி, மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் பேசுங்கள். மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். 2004 ஆம் ஆண்டு சென்னை மாநகரத்திற்கு 1,000 கோடி ரூபாய் குடிநீருக்கு ஒதுக்குவதாக மத்திய நிதி அமைச்சர் அறிவித்தார்கள். இங்கே பேசுகின்ற நண்பர்கள் எல்லாம் யாரிடத்திலே கொடுத்தார்கள்; எப்படிக் கொடுத்தார்கள் என்பதைப்பற்றி கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். 1,000 கோடி ரூபாய் இருக்கிறது என்று சொன்னால் எடுத்து ஒருவரிடத்திலே கொடுத்துவிடமுடியாது. அதற்கான திட்டங்கள் (குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். அதற்கான திட்டங்கள் ஏதாவது மத்திய அரசுக்கு இவர்கள் கடிதம் மூலம் அனுப்பினார்களா? டெண்டர் கோரப்பட்டதா? டெண்டரிலே என்ன நடைமுறை செய்யப்பட்டது? (குறுக்கீடுகள்) அவற்றை எல்லாம் விவரமாக...(குறுக்கீடுகள்) நான் சொல்லிவிடுகிறேன். டெண்டர் கோரப்பட்டதா, அந்த டெண்டரிலே நடைபெற்ற முறைகள் என்ன, அதற்குப் பின்னாலே அந்த டெண்டர் முடிவு செய்யப்பட்டதா என்பதை எல்லாம் ஆதாரத்தோடு விளக்க வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001–லே ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல்—முன்பு மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் பேசுகின்றபோது—5 ஆண்டு காலத்திலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் இருங்கள் சொல்கிறேன், சொல்கிறேன் இருங்கள். சப்ஜெக்ட் இருக்கிறது, வருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1,000 கோடி ரூபாய் சம்பந்தமாக, அந்த சப்ஜெக்ட் பற்றித்தான் நீங்கள் பேசவேண்டும்.

**திரு. கே.பி. அன்பழகன்:** சொல்கிறேன், இருங்கள். சொல்கிறேன். என்னுடைய சப்ஜெக்ட் சம்பந்தப்பட்டதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த சப்ஜெக்ட் பற்றி மட்டும்தான் நீங்கள் பேசவேண்டும்.



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227071.

[2006 மே 26

**திரு. கே.பி. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்குறிப்பிலே ஏறாது. (குறுக்கீடுகள்) Mike–ஐ off பண்ணுங்கள். குடிதண்ணீர் சம்பந்தப்பட்டது பற்றி அவர் பேசினார். அது சம்பந்தமாக நீங்கள் பேசுங்கள். அதைவிட்டுவிட்டு, மற்றதை எல்லாம் நீங்கள் பேசுவது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் பற்றி அவர் பேசினார். அது சம்பந்தமாக நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) மாண்புமிகு மின் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கடல் நீரைக் குடிநீராக்குகின்ற திட்டத்தைப்பற்றி நாடாளுமன்றத்திலே எழுப்பப்பட்ட கேள்வியையும், அதற்கு அமைச்சர் சொன்ன பதிலையும் இங்கே தெரிவித்தார். அது குறித்துதான் விளக்கம் தரலாமே தவிர, 5 ஆண்டு காலத்திலே என்ன நடந்தது என்று அப்பாவு பேசியதற்கு பதில் சொல்ல ஆரம்பித்தால் இந்த அவையினுடைய நடவடிக்கைகள் எதுவும் இன்று முடியாது. (குறுக்கீடுகள்) அதற்கு உங்களிடத்திலே ஏதாவது ஆதாரம் இருந்தால், ஆயிரம் கோடி ரூபாய்க்கான திட்டத்திற்கு நாங்கள் இத்தனாம் தேதி மத்திய அமைச்சருக்கு கடிதம் எழுதினோம், திட்டம் தயாரித்து அனுப்பினோம், இத்தனை லிட்டர் தண்ணீர் வேண்டுமென்று அனுப்பினோம் என்ற விவரங்கள் இருந்தால், அதைச் சொல்லலாமே தவிர, அதை விட்டுவிட்டு, அப்பாவு அவர்களுக்கு இப்போது பதில் சொல்வது நியாயமல்ல. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கே.பி. அன்பழகன், அது சம்பந்தப்பட்டது பற்றி மட்டும்தான் நீங்கள் பேச வேண்டும்.

*பிற்பகல் 12–10*

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைப் பற்றி ஏற்கெனவே மத்திய அரசால் ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது என்று இந்த

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2006 மே 26] [திரு. கே.பி. அன்பழகன்]

அவையிலே பல முறை விவாதிக்கப்பட்டது. அப்படி விவாதிக்கப்பட்ட நேரத்தில் அறிவிப்பு மட்டும் ஆயிரம் கோடி ரூபாய் என்று அறிவித்தார்களேதவிர, அந்த பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டது வெறும் 5 கோடி ரூபாய்தான் என்பதைப்பற்றி பல முறை இந்த அவையிலே விவாதம் நடத்தப்பட்டிருக்கிறது. அதேநேரத்திலே தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னையிலே வாழ்கின்ற மக்களுக்கு குடிநீர் இல்லை என்ற– (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். உட்காருங்கள். உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.பி. அன்பழகன்:** அந்தக் காலக்கட்டத்திலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி செய்கின்ற அந்தக் காலக்கட்டத்திலே தமிழ்நாட்டில் இருக்கின்ற மக்களுக்கு எல்லாம் நல்ல குடிநீர் வழங்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, சென்னையிலே வாழ்கின்ற மக்கள் சென்னையைவிட்டு காலி செய்கின்ற அந்தச் சூழ்நிலையிலே, அவர்கள் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில் புதிய வீராணம் திட்டத்தை குறிப்பிட்ட நாட்களில் கொண்டுவந்து நிறைவேற்றியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோலதான் பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் (குறுக்கீடு) அதைப்பற்றி அல்ல. நீங்கள் கடல்நீரைச் சுத்தப்படுத்தி குடிநீராக்குவது பற்றி மாத்திரம்தான் பேச வேண்டுமேதவிர, வேறு சப்ஜெக்ட் பற்றிப் பேச உங்களுக்கு அனுமதி இல்லை. திரு. பீட்டர் அல்போன்ஸ் உரையாற்றுவார்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அமைச்சராக இருந்தவர். பொதுவாக இந்த அவையிலே ஒரு திட்டத்திற்குப் பணம் ஒதுக்கப்படுகிறது என்று சொன்னால், 60 கோடி ரூபாய் என்றால், 60 கோடி ரூபாயை அன்றைக்கே ஒதுக்கமாட்டார்கள். Token amount என்பார்கள். ஒரு ரூபாய்கூட ஒதுக்குவார்கள். ஆனால், அதற்குப் பிறகு, administrative sanction வந்து, அதற்கு அப்புறம் இந்த ஆண்டு எவ்வளவு, அடுத்த ஆண்டு எவ்வளவு என்று செலவிற்குத்தக்கபடிதான் பணத்தை ஒதுக்குவார்களே தவிர,

[திரு. துரைமுருகன்] [2006 மே 26

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆயிரம் கோடி ரூபாய் என்று சொல்லி, 5 கோடி ரூபாய்தான் ஒதுக்கினார்கள் என்று சொன்னால், இப்படிதான் நிர்வாகம் இருந்திருக்கிறது. ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். *(குறுக்கீடுகள்)* தெளிவான விளக்கம் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள், அனுமதி கொடுக்க முடியாது. உட்காருங்கள், உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பு முடிந்தது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பு முடிந்தது. உட்காருங்கள், உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நடப்பதைப் பார்த்தால் எனக்கு ஒரு மிகப்பெரிய ஜனநாயகக் கேலிக்கூத்தாகத் தெரிகிறது. *(குறுக்கீடுகள்)* நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், சில முன்னாள் அமைச்சர்கள், தங்களை இன்னும் அமைச்சர்களாகவே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* அவர்கள் இப்பொழுது கேள்வி கேட்கவேண்டிய இடத்திலே இருக்கிறார்களேயொழிய, பதில் சொல்லவேண்டிய இடத்தில் இல்லை. எனவே, நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நான் என்னுடைய உரையை முடித்த பிறகு...*(குறுக்கீடுகள்)*

*(திரு. கே.பி. அன்பழகன் பேரவைத் தலைவர் அவர்களின் இருக்கைக்கு அருகில் வந்து ஏதோ பேசினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன், உங்களுக்கு கொடுத்த வாய்ப்பு முடிந்தது, உங்கள் இருக்கைக்குப் போங்கள். *(குறுக்கீடு)* அதற்கு பதில் சொல்லியாகிவிட்டது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* நீங்கள் பேசுங்கள்.



2006 மே 26]

*(திரு. டி. ஜெயக்குமார், திரு. சி.வி. சண்முகம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. கே. பாண்டுரங்கன், திரு. வி.பி. கலைராஜன், திரு. பி.கே. சேகர்பாபு மற்றும் அக்கட்சி உறுப்பினர்கள் இருக்கையைவிட்டு எழுந்துநின்று திரு. கே.பி. அன்பழகன் பேச வாய்ப்பு அளிக்குமாறு கோஷமிட்டனர்.)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** என்னதான் விளக்கம் சொல்லப்போகிறார்? இப்போதுதான் சொல்லிவிட்டாரே? *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் இருக்கைக்குப் போங்கள். உட்காருங்கள். உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பு முடிந்தது. உட்காருங்கள். உட்காருங்கள், உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள். உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் எதற்காக இந்தக் கருத்தை இந்த மன்றத்திலே பதிவு செய்கிறேன் என்று சொன்னால், மத்திய அரசிடமிருந்து எவ்வளவு அதிகமாகப் பெற முடியுமோ, எவ்வளவு கூடுதலாகப் பெற முடியுமோ அதனைப் பொறுத்துதான் இந்த அரசினுடைய வெற்றி நிர்ணயிக்கப்படுகிறது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவி ஏற்ற முதல் ஆண்டு United Progressive Alliance..*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் எல்லோருக்கும் பேச நான் வாய்ப்புக் கொடுத்தேன். வாய்ப்புக் கொடுத்து, அவர் பதிலும் சொல்லியாகிவிட்டது. அதற்குப் பிறகு வேறு subject–க்குப் போகிறார் அவர். வேறு subject–ஐ எப்படி அனுமதிக்கமுடியும்? உட்காருங்கள். வேறு subject–க்குப் போக allow பண்ண முடியாது. உட்காருங்கள். நீங்கள் பேசுங்கள் சார்.

பிற்பகல் *12–15*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு, முதலாண்டு பதவியேற்றவுடனே மொத்தமாக 74 ஆயிரம் கோடி ரூபாய்... *(குறுக்கீடுகள்)* இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், மத்திய அரசு பொறுப்பேற்ற பிறகு, மத்திய அரசு மூலமாக மாநில அரசுகளுக்குக் கொடுக்கப்பட்ட மொத்த தொகை, முதலாவது ஆண்டு 74 ஆயிரம் கோடி ரூபாய். *(குறுக்கீடுகள்)* ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவியேற்ற ஆண்டு, மாநிலங்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்ட தொகை 74 ஆயிரம் கோடி ரூபாய். அதே தொகை அடுத்த ஆண்டு 94,400 கோடி

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2006 மே 26

ரூபாயாக, இந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு உயர்த்திக் கொடுத்தது. முதலாண்டு மாநிலங்களுக்குக் கொடுத்தது 74,400 கோடி ரூபாய், அதற்கு அடுத்த ஆண்டு கொடுத்தது 94,400 கோடி ரூபாய். (குறுக்கீடு) ஏன் சார், நான் எதையும் அவதூறாகப் பேசவில்லை.

*(திரு. டி. ஜெயக்குமார், திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களைப் பார்த்து ஏதோ பேசினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், உறுப்பினர் ஜெயக்குமார், இங்கே பார்த்துப் பேசுங்கள். அங்கே என்ன?

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு ஜெயக்குமார், you should mind your business. (Interruption) ஆமாம். You are nobody to interfere. (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும். அவைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் நேராகப் பார்த்துப் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அவைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள். உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். ஜெயக்குமார், நீங்கள் முன்னாள் அமைச்சர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் ஜெயக்குமார், உட்காருங்கள்.

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஜெயக்குமார், நீங்கள் அவைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள், அதை விட்டுவிட்டு உறுப்பினரைப் பார்த்துப் பேசக்கூடாது. (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். பேரவைத் தலைவரைப் பார்த்துப் பேசுங்கள், நீங்கள் உறுப்பினரைப் பார்த்துப் பேசாதீர்கள், உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சரி, உட்காருங்கள், உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார், நீங்கள் அவைத் தலைவரைப் பார்த்துத்தான் பேச வேண்டுமேதவிர, உறுப்பினரைப் பார்த்துப் பேசக்கூடாது. அது முறையல்ல. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) யாரும் உறுப்பினர்களைப் பார்த்து ஒருவருக்கொருவர் பேசக்கூடாது,



2006 மே 26] [பேரவைத் தலைவர்]

உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

*(திரு. வி.பி. கலைராஜன் இருக்கைமீது ஏறி நின்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்தார்.)*

*(திரு. கே. பாண்டுரங்கன், திரு. சி.வி. சண்முகம் மற்றும் சிலரும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் இருக்கையை நோக்கி விரைந்தனர்.)*

*(சில அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சிலரைத் தாக்கினர்.)*

அவைக் காவலர்கள் போங்கள். சார்ஜென்ட் போங்கள். எல்லோரையும் வெளியேற்றுங்கள், போங்கள். அவர்களை வெளியேற்றுங்கள், உடனடியாக உறுப்பினர்களை வெளியேற்றுங்கள். அவர்களை வெளியேற்றுங்கள். உடனே வெளியேற்றுங்கள். சார்ஜென்ட், அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள். அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள், வெளியேற்றுங்கள். போங்கள், வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவ்வளவு பேரையும் வெளியேற்றுங்கள், வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்)

*(திரு. கே. பாண்டுரங்கன் இருக்கைமீது ஏறி நின்று பேசிக்கொண்டிருந்தார்.)*

அவைக் காவலர்கள் என்ன பண்ணுகிறீர்கள்? போங்கள். உறுப்பினர் பாண்டுரங்கன், இருக்கையின் மேலே நிற்கிறார், பாண்டுரங்கன். (கூச்சல்–குழப்பம்)

பிற்பகல் 12–20

அவைக் காவலர்கள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள்? அவைக் காவலர்கள் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள்; (கூச்சல்–குழப்பம்) அவைக் காவலர்கள் என்ன செய்கிறார்கள்? அவைக் காவலர்கள், அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கின்றவர்களை முதலில் வெளியேற்றுங்கள். எல்லோரையும் வெளியேற்றுங்கள். அவைக் காவலர்கள் என்ன, பஞ்சாயத்து பேசிக் கொண்டிருக்கின்றார்களா? (கூச்சல்–குழப்பம்) அவைக் காவலர்கள்,

அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கின்றவர்களை முதலில் அவையை விட்டு வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) வெளியேற்றுங்கள். அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) அவைக் காவலர்கள் அங்கே என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? வந்து அவர்களை வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) அவைக் காவலர்கள் உடனே அவர்களை வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்)

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அவைக்குள்ளே கோஷம் போட்டுக் கொண்டிருந்தனர்.)*

*(கூச்சல்–குழப்பத்தின்போது மைக் ஒன்று உடைக்கப்பட்டு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அமர்ந்துள்ள பகுதியில் விழுந்தது.)*

அவைக் காவலர்கள் அங்கே என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? எல்லோரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) அவைக் காவலர்கள் அவர்களை முதலில் வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் உடனே அவையை விட்டு வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) அவைக் காவலர்கள், உடனே அவை நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்கின்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) அவ்வளவு பேரையும் தூக்கிக் கொண்டு போய் வெளியே விடுங்கள். (கூச்சல்–குழப்பம்) போங்கள், அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) அவைக் காவலர்கள் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) வெளியேற்றுங்கள், வெளியேற்றுங்கள். சீக்கிரம். (கூச்சல்–குழப்பம்) போங்கள், போங்கள். (கூச்சல்–குழப்பம்) காவலர்கள் சொன்ன வேலையைச் செய்யவில்லை. (கூச்சல்–குழப்பம்)

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*

*(வெளியேற்றப்பட்ட உறுப்பினர்கள் லாபியில் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*



## 4. அரசினர் தீர்மானம்

### அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்று தற்காலிகமாக நீக்கி வைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் காவலர்கள் அவர்களை வராண்டாவிலிருந்து வெளியேற்றுங்கள், வெளியேற்றுங்கள். (கூச்சல்–குழப்பம்) அவை மூன்று மணி நேரமாக நடக்கிறது. மூன்று பேர்கூட பேசி முடிக்கவில்லை. வேண்டுமென்றே, குழப்பம் செய்ய வேண்டுமென்றே, இவர்கள் வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order. *(உடைந்த மைக்கை காண்பித்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையிலுள்ள மைக்கை அ.தி.மு.க.–காரர்கள் உடைத்திருக்கிறார்கள்; காங்கிரஸ் உறுப்பினர்களைத் தாக்கியிருக்கிறார்கள். இந்த அவையிலே குழப்பம் பண்ண வேண்டுமென்று வந்திருக்கிறார்கள்; அதனாலே அவர்களை இந்த அவையிலிருந்து வெளியேற்றுவதற்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

*(திரு. பி.கே. சேகர்பாபு மீண்டும் அவைக்குள் நுழைந்து முதலமைச்சர் இருக்கையை நோக்கிச் சென்றார்.)*

*(மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அருகில் வந்து நின்றனர்.)*

*(திரு. பி.கே. சேகர்பாபு அவைக் காவலர்களால் மீண்டும் வெளியேற்றப்பட்டார்.)*

இந்தக் கூட்டத் தொடர் முடியும்வரை, அவர்கள் அவையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** என்னைப் பேச விடுங்கள் கொஞ்சம். Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவையின் அலுவல்களை நடைபெறாது இடைமறித்தும், பேரவையைத் தொடர்ந்து முறையற்று பயன்படுத்தியதாலும், சட்டமன்றப் பேரவை விதி 121, உள்விதி 2–ன்கீழ் இன்று (26–05–06) அவைக்கு வருகை தந்திருக்கும் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களை இக்கூட்டத் தொடர் முடியும்வரை பேரவைப் பணிகளிலிருந்து தற்காலிகமாக நீக்கம் செய்ய வேண்டும்"

என்னும் தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலையிலேயிருந்து சட்டமன்ற நடவடிக்கைகளை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம். 1991–லேயிருந்து 15 ஆண்டு காலம் இந்த அவையிலே தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். (உடைந்த மைக்கை மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் கொடுத்தார்) ஆனால், இன்றைக்கு நடந்ததுபோல ஒரு சட்டமன்ற நடவடிக்கையை வாழ்நாளிலே பார்த்தது இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்கு மிக கண்ணியக்குறைவாக, கேவலமான முறையிலே இன்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் இந்த அவையிலே, பொதுவாக நம்முடைய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய அப்பாவு அவர்கள் பேசியதிலிருந்து, அதேபோல எங்களுடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கொறடா திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசுகிறபோதெல்லாம் தொடர்ந்து குறுக்கிட்டு அவர்கள் இந்த அவைக்கு வருகிறபோதே ஒரு சதித்



திட்டத்தைத் தீட்டி, தினந்தோறும் இப்படி ஒரு கலாட்டாவைச் செய்து எப்படியாவது சட்டமன்றத்தை நடத்த விடக்கூடாது என்கிற உறுதிப்பாட்டோடு வந்ததுபோல இங்கே அவர்கள் செயல்பட்டுக் கொண்டு இருக்கக்கூடிய நிலையைப் பார்த்து உண்மையிலேயே நாங்கள் வேதனை அடைகிறோம்.

பிற்பகல் 12–30

அதைவிட மோசம், முன்பெல்லாம் எதிர்க்கட்சி வரிசையில் நாங்கள் இருக்கிறபோது பார்த்தோம் என்று சொன்னால், அவர்கள் ஒரு பிளாக் அல்லது இரண்டு பிளாக்கில்தான் இருப்பார்கள். இன்று நீங்கள் எங்களையும் எதிர்க்கட்சி வரிசையிலே இங்கே அமர வைத்து, பக்கத்தில், பக்கத்தில் அமர்ந்து கொண்டு இருக்கிறபோது எங்களுக்குப் பரிசாக, உடனடியாக ஒரு மைக்கை உடைத்து, அடிக்க வந்து, இங்கே காயம் எல்லாம் ஏற்பட்டிருக்கிறது.

இங்கே பூங்கா நகர் கலைராஜன், (குறுக்கீடு) தி. நகர், அதேபோல முன்னாள் அமைச்சர் சண்முகம், அதேபோல எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த பாண்டுரங்கன் இங்கே வந்து—பொதுவாக விதி என்னவென்று சொன்னால், அவருடைய இருப்பிடத்தை விட்டு இன்னொருவர் இருப்பிடத்திற்கு வரக்கூடாது என்பது விதி; ஆனால், அந்தக் கடைசியிலிருக்கிற பாண்டுரங்கன், அணைக்கட்டுத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் இங்கே வந்து—இங்கே ஏறி அமர்ந்து கொண்டு, அதேபோல இங்கே கலைராஜன், சின்னசாமி, சேகர்பாபு போன்ற நபர்களுடைய செயல்பாடுகள் உண்மையிலேயே வருத்தத்தை அளிக்கிறது. இப்படி இவர்கள் நடந்து கொள்வார்களேயானால் எங்களுடைய ஜனநாயகக் கடமையை இந்த அவையிலே ஆற்ற முடியாது. எனவே, இப்படிப்பட்ட ஒரு நிலையை தாங்கள் அனுமதிக்கக்கூடாது. கடுமையான விதிகள் ஏற்கெனவே இருக்கின்றன. நாடாளுமன்றத்தில் இருப்பதுபோல அவையை ஒத்தி வைக்க வேண்டும் என்பதல்ல. தமிழகத்தினுடைய வரலாற்றைப் பார்ப்போம் என்று சொன்னால், யார் ஓர் உறுப்பினர் பேசுகிறபோது இடையூறு செய்து எப்படியெல்லாம் மறிக்கிறார்களோ, தாக்குகிறார்களோ—இந்த மைக், அங்கிருக்கக்கூடிய மைக் உடைக்கப்பட்டு எங்கள் மீது வீசி எறியப்படுகிறது, காயப்படுத்தப்படுகிறோம் என்று சொன்னால், இது ஒரு கொலைக் களமாக மாறக்கூடிய ஒரு நிலையை அல்லவா உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பாதுகாப்பற்ற தன்மையை இந்த அவையிலே நாம் வைத்துக் கொண்டிருப்போம் என்று சொன்னால் இது உண்மையிலேயே நல்லதல்ல.

முன்பு அமைச்சர்களாக அங்கம் வகித்தவர்கள், மற்றவர்களுக்கு முன்னோடிகளாக இருக்க வேண்டியவர்கள், இன்று ஏதோ ரௌடி இராஜ்ஜியத்தை இங்கே நடத்துவதற்கு, அரங்கேற்றுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) வந்தது போல இங்கே நடைபெறும் என்று சொன்னால், இதை ஜனநாயகத்திலே நாம்—அதாவது இது புகழ்பெற்ற ஒரு மாமன்றம்; எத்தனையோ பெரிய பெரிய ஜாம்பவான்கள் இந்த இடத்திலே பேசி, உரையாற்றி நமக்கெல்லாம் வழிகாட்டிச் சென்ற இடம்— இந்த மன்றத்தில் இப்படிப்பட்ட ஒரு சதித் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய ஓர் அவையாக இதை மாற்றிவிடக் கூடாது என்பதற்காக போதிய பாதுகாப்பை நீங்கள் எங்களுக்குத் தரவேண்டும். இப்படிப்பட்ட உறுப்பினர்களுக்கு நீங்கள் கடைசியாக ஏதாவது ஓர் எச்சரிக்கைத் தந்து, எங்களுக்குப் பொதுவாக எங்களுடைய ஜனநாயகக் கடமையை நாங்கள் ஆற்றுவதற்கு உதவ வேண்டும். பக்கத்திலே பக்கத்திலே நாங்கள் உட்கார்ந்து கொண்டு இருக்கிறோம். இப்போது மைக் உடைக்கப்பட்டு இப்படி எங்கள் மீது வீசப்படுகிறது என்று சொன்னால், பிறகு எந்த நேரத்தில் என்னென்ன வருமோ எங்களுக்குத் தெரியவில்லை. ஆகவே, போதிய பாதுகாப்பை அவைத் தலைவர் என்ற முறையில் நீங்கள் எங்களுக்கு அளித்தாக வேண்டும். ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும். குறுக்கீடுகள் எது வந்தாலும் வாதத்திற்கு வாதம் வைப்பதற்கு நாங்கள் தயார். அவர்களைப் போல ஊழல் செய்தோ, மற்றவற்றைச் செய்தோ நாங்கள் எல்லாம் கெட்ட பெயர் எடுத்தவர்கள் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் தொடர்ந்து எங்களுடைய கடமையை ஆற்றி வந்து கொண்டிருக்கிறோம். ஊழல் பெருச்சாளிகள் இங்கே வந்து எதையெதையோ சொல்லி எங்களை திசை திருப்ப நினைத்தால் நிச்சயமாக நாங்களும் அனுமதிக்கமாட்டோம். நீங்களும் எங்களுக்குப் போதிய பாதுகாப்பைத் தந்து, இந்தத் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களும், நீங்களும் தொடர்ந்து எங்களுக்குப் பாதுகாப்பைத் தந்து, இந்த மைக் உடைத்தவர்கள், மற்றவர்களைப் பற்றியெல்லாம் நீங்கள் உடனடியாக கடுமையாக நடவடிக்கை எடுத்து, வழக்கும் பதிவு செய்து, நீங்கள் இப்படிப்பட்ட ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்குத் தடையாக இருந்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தமிழக முதல்வர் அவர்களும், எங்களுக்குப் போதிய பாதுகாப்பை—இங்கு மட்டுமல்ல, இப்படிப்பட்டவர்கள் எங்கும் தங்களுடைய நாடகத்தை அரங்கேற்றுவதற்கு முயல்வார்கள். ஆகவே, போதிய பாதுகாப்பை நீங்கள் எங்களுக்கு அளித்து உதவ வேண்டும் என்று கேட்டு அமைகிறேன். நன்றி. வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த *5* ஆண்டுகள் சட்டமன்றத்திலே நாங்கள் எல்லாம் பணியாற்றினோம். அன்றைய முதல்வராக இருந்த அண்ணா தி.மு.க.-வினுடைய பொதுச் செயலாளர் ஜெயலலிதா அவர்களும், அவருடைய அமைச்சர்களும் எங்களைப் பேசவிடாமலே வெளியேற்றிய காட்சி தினம் தினம் நடந்தது. நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சராக இருக்கிற பேராசிரியர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தார்கள். அவரையே பேச விடமாட்டார்கள். அதேபோன்று நம்முடைய தளபதி அவர்கள் பேசினாலும் அல்லது நம்முடைய இப்பொழுது இருக்கிற பொதுப் பணித் துறை அமைச்சரோ அல்லது நம்முடைய மாண்புமிகு அண்ணன் பொன்முடி அவர்களோ பேசினால் 'உட்காருடா' என்றுதான் எதிர் வரிசையிலேயிருந்து குரல் கொடுக்கிற அவலம் இருந்தது. அதை அப்படியே பொறுத்துக் கொண்டு எங்களுடைய எதிர்க்கட்சியின் கடமைகளை அன்று ஆற்றினோம். மறைந்த எம்.ஜி.ஆர். அவர்கள் முதல்வராக இருந்ததற்குப் பிறகு நடைபெற்ற ஓர் அமளி, அவர்கள் கட்சிக்குள்ளேயே நடைபெற்ற ஓர் அமளி இன்றைக்கு மீண்டும் அரங்கேறி இருக்கிறது. அதனாலேதான் இங்கே மைக் உடைக்கப்பட்டிருக்கிறது. அப்போது அவர்களுடைய கட்சியிலேயிருந்து அணி பிரிந்தபோது மைக்குகள் உடைக்கப்பட்டு, மைக்குகளை வெளியிலே எடுத்துச் சென்றார்கள், அடித்துக்கொண்டு போனார்கள். அதே நிலை இன்றைக்கு நம்முடைய கூட்டணிக் கட்சிகளைப் பார்த்து அடிக்கிற அவலநிலையை இங்கே மிகப் பெரிய ஒரு சதித் திட்டத்தைத் தீட்டித்தான் இங்கே வந்திருக்கிறார்கள் அண்ணா தி.மு.க.வினர்.

பிற்பகல் *12–35*

இதற்கு எங்களைப் போன்று பணியாற்றுகிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், குறிப்பாக, ஆளும் கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிற இடத்திலே நீங்கள் இருந்துகொண்டிருக்கிறீர்கள். நாங்கள் உண்மையிலேயே இங்கே இருப்பதற்கு பயந்து கொண்டிருந்தோம் கொஞ்ச நேரம். அவ்வளவு மோசமாக கடைக்கோடியிலே இருக்கிற முன்னாள் அமைச்சர்கள் எல்லாம் இங்கே வருகிறார்கள். ஒரு முன்னாள் அமைச்சர், திண்டிவனத்தைச் சேர்ந்த முன்னாள் கல்வி அமைச்சர் சி.வி. சண்முகம் அவர்கள், இங்கே நம்முடைய அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்களைப் பார்த்து

"உட்காருடா, நீ என்னடா பேசுற, மயிரு" என்று மிகக் கேவலமாகப் பேசுகிற ஓர் அவல நிலையை ஏற்படுத்தியிருக்கிறார். இங்கே இருக்கிறவர்களை, நம்முடைய காங்கிரஸ் கட்சிக்காரர்களைப் பார்த்து அடிக்கிறார்கள். இப்படி அவலங்களைப் பேசுகிற, இவ்வளவு கொலை வெறித் தாக்குதல் நடத்துகிற இவர்கள்மீது கடுமையான நடவடிக்கையும், அதே சமயத்திலே எங்களுக்கெல்லாம் ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்குப் பாதுகாப்பும் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரைக் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன் அவர்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் உரையாற்றிக்கொண்டிருக்கும்போது குறுக்கீடுகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வந்தன. அதையொட்டி பின் பகுதியிலேயிருந்த நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் பேசி ஒரு கைகலப்பு நேர்ந்து, இத்தகைய சம்பவம் நம்முடைய சட்டமன்ற வரலாற்றில் ஒரு களங்கத்தை ஏற்படுத்துகின்ற சம்பவமாக அமைந்திருக்கின்றது. (குறுக்கீடுகள்) சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள் இதையெல்லாம் கண்காணித்து தற்போது ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கின்றீர்கள். அந்தத் தீர்ப்பை நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இருங்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், நடந்த சம்பவங்களுக்கு நான் நியாயம் கற்பிக்க முன்வரவில்லை. நான் கேட்டுக்கொள்வது (குறுக்கீடுகள்) ஒரு பிரதான எதிர்க்கட்சி, அந்த எதிர்க்கட்சியை இந்தச் சபையினுடைய தொடர் முடியும் வரை இந்தச் சபைக்கு வரக் கூடாது என்று தாங்கள் அளித்த தீர்ப்பு—ஜனநாயகக் கடமையை ஆற்றுவதற்கு தொடர்ந்து அவர்களை அனுமதிக்க வேண்டும்—இன்றைய நடவடிக்கைக்கு இன்றையதினம் மட்டும் அவர்களை சபை நடவடிக்கைகளிலே கலந்துகொள்ளாமல் செய்து, நாளை மீண்டும் தொடர்ந்து நடைபெறுகின்ற இந்தத் தொடர் கூட்டம் முழுவதும் கண்ணியத்தோடு நடக்க வேண்டுமென்ற எச்சரிக்கையோடு நீங்கள் இந்தச் சபைக்கு அழைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்கள்.



**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற விவாதத் தொடக்க நாளிலேயே பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற அண்ணா தி.மு.க., இந்தச் சபையை கண்ணியத்தோடு, ஜனநாயக மரபுகளைப் பாதுகாக்கக்கூடிய வகையில் அவர்களுடைய நடவடிக்கைகள் அமையாதது வேதனைக்குரியது. மக்கள் அளித்திருக்கிற தீர்ப்பை மதிக்காமல், அவர்களுக்கு ஏற்கெனவே இருந்த அதிகாரத்தை இழந்ததைச் சகித்துக்கொள்ள முடியாமல், சட்ட சபைக்குள் ஏதாவது தொடர்ந்து பிரச்சினைகளை உருவாக்க வேண்டுமென்கிற உள்நோக்கத்தோடு ஆளுநர் உரையிலே தொடங்கி, இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற இந்த விவாதம் தொடங்குகிற இந்த நேரத்திலேயும் தொடர்ச்சியாக அவர்கள் மாறி மாறி பிரச்சினைகளைக் கிளப்புவது, தேவையற்ற வார்த்தைகளை ஒருமையில் பயன்படுத்துவது, தனிப்பட்ட முறையில் பேசக்கூடியவர்களை அச்சுறுத்துவது போன்ற நடவடிக்கைகள் இந்தச் சட்டமன்ற மரபுக்கு முற்றிலும் மாறானது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இதை வன்மையாகக் கண்டிக்கிறது.

கடந்த 1989 ஆம் ஆண்டு இதே அவையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்றைக்கு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய முற்பட்ட நேரத்தில் இந்த அவையில் நடந்த நிகழ்வுகள்தான் இன்றைக்கும் நினைவுக்கு வருகின்றன. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு தேவையற்ற அசம்பாவிதத்தை சபைக்குள்ளேயே நிகழ்த்துவதற்கு அவர்கள் திட்டமிட்டு பணியாற்றுகிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிற அடிப்படையில் அவர்களுடைய நடவடிக்கை அமைந்திருக்கிறது. ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சபைக் காவலர்களினுடைய நடவடிக்கைகள்கூட போதுமானதாக இல்லை என்பதை நான் இங்கே கவனப்படுத்துகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எதிர் வருகிற காலங்களில், இந்தச் சபையில் இதர உறுப்பினர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கின்ற வகையில், சபைக் காவலர்கள் விழிப்போடும், எச்சரிக்கையோடும் இருப்பதற்கு தாங்கள் உரிய ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இங்கே வெளியேற்றப் பட்டிருக்கிறவர்கள் உண்மையிலேயே நடந்த சம்பவத்திற்கு வருந்தி, உங்களிடத்திலே வருத்தம் தெரிவித்து, இனிமேல் இப்படிப்பட்ட நிகழ்வுகள் நடக்காது என்று உத்தரவாதம் அளிப்பார்களானால், நீங்கள் அளித்த இந்தத் தண்டனையை மறு பரிசீலனை செய்யலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[2006 மே 26

பிற்பகல் 12–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம் அவர்கள்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்களை இந்தக் கூட்டத் தொடர் முழுக்க உள்ளே வரவேண்டாம் என்று ஆணையிட்டு இருக்கிறீர்கள். ஏற்கெனவே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆளும் கட்சியை ஒரு கண்ணாகவும், எதிர்க்கட்சியை ஒரு கண்ணாகவும் பார்த்துக்கொண்டு இருக்கிறீர்கள். ஆக, கூட்டத் தொடர் முழுக்க அனுமதி மறுப்பு என்பது மிகப் பெரிய தண்டனையாகும். நீங்கள் அறிவுரை வழங்கி, நாளை முதல் அவர்களைக் கூட்டத் தொடருக்கு அழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சட்டமன்றம் மிகச் சிறந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டமன்றம் என்று பெயர் பெற்றது. இந்த மன்றத்தினுடைய மரபுகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதுதான் இங்கே இருக்கிற அனைவருடைய ஒத்த கருத்தாகும்.

ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளுக்குத் தலைமை ஏற்று இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேர்தலின்போது ஒரு செய்தியைச் சொன்னார்கள். நடைபெறுகிற தேர்தல் என்பது ஜனநாயகத்திற்கும், சர்வாதிகாரத்திற்குமான போராட்டம் ஆகும் என்று குறிப்பிட்டார்கள். அதை நாட்டு மக்கள், சரியான திசை வழியிலே சிந்தித்து, சர்வாதிகாரத்தை முறியடித்து, ஜனநாயகத்தை வென்றெடுப்பதற்கான அனைத்து ஆதரவையும் தெரிவித்து, இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைமையிலான இந்த ஆட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது. ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சி மகத்தான வெற்றி பெற்று இருக்கிறது. வெளியிலே மக்களிடம் வைக்கப்பட்ட கோரிக்கை—ஜனநாயகமா, சர்வாதிகாரமா—முடிவெடுக்க வேண்டுமென்ற கோரிக்கை வைத்தோம். இன்றைக்கு இந்த அவையிலே நடைபெற்று இருக்கிற சம்பவத்தின் மூலமாக இந்தச் சபையிலே ஜனநாயகமா, சர்வாதிகாரமா என்ற கேள்வி எழுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டு இருக்கிறது என்று நான் கருதுகிறேன். ஆகவே, இந்த அவையிலே



2006 மே 26] [திரு. வை. சிவபுண்ணியம்]

சர்வாதிகாரத்திற்கு இடமே இல்லை என்று முடிவெடுக்கவேண்டிய பொறுப்பு மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே, இந்த அவையினுடைய மரபுகள் பாதுகாக்கப்படவேண்டும்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களுடைய செயல் என்பது மிகுந்த வேதனையை அளிக்கிறது. குறிப்பாக, ஆளுநர் உரை ஆற்றுகிறபோதே, அவர்கள் எழுந்து மறுப்புத் தெரிவித்து வெளிநடப்புச் செய்தார்கள். அதிலேகூட எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், அவர்கள் சொன்ன செய்தி என்னவென்றால், ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரு வார காலத்திற்குள்ளாகவே ஏன் இன்ன காரியங்களை எல்லாம் நடைமுறைப்படுத்தவில்லை, செய்யவில்லை என்று கேள்வியை எழுப்பினார்கள். ஆகவே, அதிகாரத்திலே 5 ஆண்டு காலத்தில் அவர்கள் செய்ய முடியாத சாதனைகளை 7 நாட்களுக்குள்ளே ஏன் செய்யவில்லை என்று கேள்வி எழுப்புகிறபோதே, நான் குறிப்பிட்டு எங்களது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலான கருத்தாகச் சொன்னது, அவர்கள் அரசியல் ரீதியாகக் கருத்தைச் சொல்வதற்குப் பதிலாக, அரசியல் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துகிறார்கள் என்று நாங்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறோம். அதையேதான் இந்தச் சபையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அண்ணா தி.மு.க.–வினுடைய உறுப்பினர்கள் காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துவதற்குரிய சபையாக இதை நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்கிறார்கள். அதற்கு எந்தவகையிலும் அனுமதி அளிக்கக்கூடாது.

இந்தச் சபையிலே தாக்குதல் நடத்துவதற்கான முயற்சி என்பது, மிகுந்த வேதனை அளிக்கிறது. குறிப்பாக, ஒலிபெருக்கிகள் இங்கே சுழற்றி வீசப்படுகின்றன. பல ஒலிபெருக்கிகளைப் பிடுங்கி உடைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இதெல்லாம் நமது சட்டசபையிலே நடைபெறாத ஒரு சம்பவமாக இருக்கிறது. ஆகவே, இந்தச் சபையை முழுமையாக நடத்தவேண்டும். எனக்கு ஒரு சந்தேகம் இருக்கிறது. அ.தி.மு.க.–வினுடைய தலைவராக இருக்கிற முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஜனநாயகபூர்வமாக இந்தத் தீர்ப்பை ஏற்றுக்கொள்கிறேன் என்று முதல் நாள் சொன்னார். மறுநாள் சொன்னார், குரங்கு கையிலே அகப்பட்ட பூமாலையாக இந்த ஆட்சி சென்றிருக்கிறது என்று சொன்னார். ஆகவே, இரண்டு தினங்களுக்குள்ளாகவே ஒரு வித்தியாசத்தை அவர்களுடைய தலைவர் சொல்லிவிட்டு, திரும்பச் சொன்னார், இந்த ஆட்சி இடையிலே கவிழும் என்று சொன்னார். ஆகவே, இதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இந்தக் கருத்தை நிறைவேற்றச்

செய்வதற்குரிய களமாக இந்தச் சபையை மாற்றுவதற்குரிய முயற்சி நடைபெறுகிறதோ என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. ஆகவே, இந்தச் சந்தேகத்தை, இந்த அச்சத்தை, நாட்டு மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் சொல்கிறேன்.

*பிற்பகல் 12–45*

இந்தச் சபையினுடைய தீர்ப்பாக தாங்கள் அளித்திருக்கிறீர்கள். இது சபை முடியும் வரையிலும் என்ற இந்தத் தீர்ப்பு என்பது, இதுவரையிலும் பலமுறை அ.தி.மு.க. அரசால், அந்த நிர்வாகத்தால் நடைமுறைப் படுத்தப்பட்ட ஒன்று என்ற காரணத்தாலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மாதிரியான செயல்கள்மீது ஒரு நல்ல தீர்ப்பினை வழங்குவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதன் அடிப்படையிலே, அதற்குரிய தண்டனையை வழங்க வேண்டும். முழு தண்டனையாக என்ன வழங்குவது என்பதைப் பரிசீலிக்கலாம் என்பது என்னுடைய கருத்து. இதை நான் சொல்கிறபோது, ஏதோ இதை ஆதரவு கருத்தாக எடுத்துககொள்ளக்கூடாது. இதை ஜனநாயகபூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கிற கடமையாக நாம் நிறைவேற்றலாம். மீண்டும் இப்படிப்பட்ட செயல்கள் வருமானால், உரிய நடவடிக்கை எடுத்து, அதற்குரிய தண்டனையை நாம் வழங்குவதற்கு உரிய உத்தரவாதத்தை சபாநாயகர் அவர்களும், இந்தச் சபையும் முறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் அவர்கள்.

**திரு. போளூர் வரதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகள் நான்கூட இந்தச் சட்டமன்றத்தில் பணியாற்றியிருக்கிறேன். இது third time. சபை விதி என்று வருகின்றபோது, பல முன்னாள் அமைச்சர்கள் இங்கே இருக்கிறவர்கள். அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், ஏதோ அவர்கள் ஆட்சிதான் இன்னும் இங்கே நடந்து கொண்டிருக்கிறது என்று நினைக்கிறார்கள். மக்கள் மனதிலே மாற்றங்கள் ஏற்பட்டு, தமிழகத்திலே இன்று ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, 60 ஆண்டுகள் அரசியல் பின்னணி உள்ள ஒரு மூத்த அரசியல் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இங்கே வந்து, ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, மக்கள் கலைஞரிடத்திலே ஆட்சியை ஒப்படைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு மூத்த உறுப்பினர் ம.தி.மு.க. தலைவர், அண்ணன் கண்ணப்பன் அவர்கள் சொன்னார்கள். மறுபரிசீலனை என்று





சொல்கிறார். ஏதோ பின்னால் சில சலசலப்பு ஏற்பட்டது என்கிறார். இது சலசலப்பா, மைக்கை உடைத்திருப்பது? ஒரு இரும்புப் பைப், இரும்புப் பைப்பை ஒரு சாதாரண மனிதனால் உடைக்க முடியாது, ரௌடிகளால்தான் உடைக்க முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) என்னால் உடைக்க முடியாது சார், நான் ரௌடி இல்லை. உடைத்திருக்கிறார்கள். அடித்திருக்கிறார்கள் காங்கிரஸ்காரரை. இங்கே இருக்கிற காங்கிரஸ் உறுப்பினர்கள் ரௌடிகள் அல்ல. நீண்ட பாரம்பரியம் உள்ளவர்கள். பண்பாளர்கள். பண்பட்ட தலைவி அன்னை சோனியா காந்தியால், தலைவர் கலைஞரால் இங்கே வரப்பெற்றவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பலர் சொல்கிறார்கள் இன்றைக்கு மறுபரிசீலனை என்று. மறுபரிசீலனை என்றால், பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள், அடிபட்டவர்கள் நாங்கள். பீட்டர் அல்போன்ஸ் என்ன தவறாகப் பேசினார்? பாராளுமன்றத்தில் அமைச்சர் சொன்ன பதிலைத்தான் சொன்னாரே தவிர, அது அவருடைய கருத்து அல்ல. அதைக்கூட ஏற்றுக்கொள்ள முடியவில்லை. 10 நாட்களாகியும்கூட அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இன்றைக்கு வேண்டுமென்றால் 70 பேர் இருக்கிறார்கள் என்று குதிக்கலாம். சட்டத்தினுடைய ஆட்சி தமிழகத்தில் வரும். கலைஞர் பயந்தவர் அல்ல. பேசாமல் இருக்கிறார் என்றால் காரணம் இருக்கிறது. சட்டத்தின் ஆட்சி வந்தால் அந்த 70 பேரும் எங்கே இருப்பார்கள் என்று அவர்களுக்கே தெரியும். இருக்க வேண்டிய இடம் வேறு, சட்டமன்றம் அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுக்கும் தெரியும்.

இந்த ஆட்சியை வந்து அவர்கள் சொல்கிறார்கள் minority அரசு என்று. எப்படி? அண்ணன் கண்ணப்பன் சொல்லட்டும். ம.தி.மு.க. தலைவர் இப்போது request செய்கின்றார். இங்கே இருக்கிற அரசு minority சர்க்காரா? தேர்தலிலே இரண்டு அணிகள். எங்கள் அணி, தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் இருந்த அணி வெற்றி பெற்றிருக்கிறது. எப்படி minority? 163 பேர் இருக்கிறோம். எதை வைத்து minority என்று சொல்கிறீர்கள்? ஜனநாயக மரபு என்ன? இந்திய அரசமைப்புச் சட்டம் என்ன? சட்டத்தை மதிக்காதவர்கள் மைக்கை பிடுங்குகிறார்கள், அடிக்கிறார்கள். இதை ஏற்றுக்கொள்ளக் கூடாது. இதை ஒரு முறை நீங்கள் ஏற்றுக்கொண்டால் தொடர்ந்து அவர்கள் அதை செய்துகொண்டே இருப்பார்கள். நாங்கள் அடி வாங்கிக்கொண்டே இருக்க வேண்டுமா? எங்களுக்கும் அடிக்கத் தெரியும் சட்டத்தால். உடலில் இருக்கிற பலம் தேவையில்லை. அறிவு வேண்டும். அந்த அறிவு நிரம்பப்

பெற்றவர் கலைஞர், இங்கே இருக்கிறார். அவருடைய ஆலோசனை எங்களுக்குப் போதும். எங்களுக்குக்கூட வழிகாட்டத் தெரியும். அந்த வழியிலே நாங்கள் போவோம் என்று நினைத்தால் 70 பேர் இருக்கிற இடம் வேறு. அந்த இடத்திற்கு அவர்கள் போவதற்கு ஆசைப்படுகிறார்கள்போல் இருக்கிறது சீக்கிரத்தில். அதையெல்லாம் நீங்கள் கருத்தில் எடுத்து, எக்காரணம் கொண்டும் நீங்கள் அளித்த தீர்ப்பை திரும்பப் பெறக்கூடாது என்று கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நடைபெற்ற விரும்பத்தகாத நிகழ்வுகளுக்குப் பிறகு, வேறு வழியே இல்லாத ஒரு சூழலில் தாங்கள் அளித்துள்ள தீர்ப்பைப் பற்றி இங்கே பேசிய அ.தி.மு.க.–வினுடைய தோழமைக் கட்சிகளாக தேர்தலிலே ஈடுபட்ட சட்டமன்றத்தினுடைய ம.தி.மு.க. தலைவர் அவர்களும், விடுதலைச் சிறுத்தை இயக்கத்தைச் சேர்ந்த நண்பரும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளைத் தங்களுக்கு வைத்திருக்கிறார்கள். இதிலே நான் யோசனைதான் கூற முடியுமே தவிர, முடிவாக எதையும் அறிவிக்கக்கூடிய தகுதி படைத்தவன் அல்ல, இந்த அவையைப் பொறுத்தவரையில். ஆனால், இதுபோன்ற ஒரு நிலை தொடரக் கூடாது என்பதிலே என்னைப்போலவே இந்த அவையிலே வீற்றிருக்கின்ற அத்தனைபேரும், 'இதைப் பரிசீலிக்க வேண்டும்' என்று கூறிய தலைவர்கள் உட்பட, அத்தனைபேரும் உணர்வார்கள் என்றே நான் நம்புகின்றேன்.

முதலில், இது ஒரு சிறுபான்மை அரசு என்று சொல்லி ஆளுநர் உரையைப் புறக்கணிக்கும்பொழுதே அந்தக் கோஷத்தை எழுப்பி, முழக்கமிட்டு, அதன் தொடர்ச்சியாக இந்தச் சிறுபான்மை அரசு நிலைக்கக் கூடாது, கவிழ வேண்டும் என்ற ஒரு திட்டத்தை வகுத்துக்கொண்டு செயல்படுகிறார்கள் என்பது வெள்ளிடைமலை; யாரும் மறுக்க முடியாத உண்மை. அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள். விழுந்தாலும் விதைபோல வீழ்வோம் என்ற அந்த உறுதியோடுதான் இந்த அவையிலே வீற்றிருக்கின்ற தோழமைக் கட்சிகள் இருக்கின்றன. இதை, காங்கிரஸ் கட்சியைத் தூண்டிவிட்டு, பாட்டாளி மக்கள் கட்சியைத் தூண்டிவிட்டு, இந்திய கம்யூனிஸ்ட் அல்லது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளைத்



தூண்டிவிட்டு, இந்திய யூனியன் முஸ்லிம் லீகை தூண்டிவிட்டு, தலித் இயக்கங்களைத் தூண்டிவிட்டுக் கவிழ்த்துவிடலாம் என்று யாராவது கருதுவார்களேயானால், அவர்கள் கனவுலகத்திலே வாழ்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் உறுதிபடச் சொல்ல விரும்புகின்றேன்.

நேற்றும், இன்றும் என்ன நடைபெற்றது என்பதை நாடு கவனித்துக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவருடைய பேச்சிலும் குறுக்கிடுவது என்பது அனுமதிக்கக்கூடாத ஒன்று என்பதைக் கடந்தகால இந்த அவை நிகழ்ச்சிகள், அவைத் தலைவர்களுடைய தீர்ப்புகள் விளக்கிக் கொண்டிருக்கின்றன. பல நேரங்களில் இந்த அவையில் எப்படியெல்லாம் தீர்ப்பு வழங்கப்பட்டது என்பதை நான் எடுத்துச் சொன்னால், முன்னாள் பேரவைத் தலைவர்களை குறை கூறுகின்ற ஒரு தவற்றைச் செய்தவனாக ஆகிவிடுவேன். ஆகவே, நான் அவற்றுக்குள் போக விரும்பவில்லை. ஆளுங்கட்சியின் சார்பாகச் சொல்லப்பட்ட ஒரே வார்த்தையை, எதிர்க்கட்சியின் சார்பாகத் திருப்பிச் சொன்னால், ஆளுங்கட்சி சார்பாகச் சொல்லப்பட்ட வார்த்தை அவைக்குறிப்பிலே இடம் பெறுவதும், எதிர்க்கட்சியின் சார்பாகச் சொல்லப்பட்ட அதே வார்த்தை அவைக்குறிப்பிலே இடம் பெறாது என்று தடுத்து நிறுத்துவதும் இந்த அவையிலே ஒரு காலத்திலே, கடந்த காலத்திலே சந்தித்த நிகழ்வுகளாகும்.

இன்றைக்குக் காலையிலேயிருந்து என்ன நடைபெற்றது என்பதை நான் திரும்பச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. குறிப்பாக, ஓர் உறுப்பினர் பேசும்போது, முன்பெல்லாம், நான் இந்த அவைக்குக் கடந்த ஓர் ஐந்து ஆண்டுகாலம் தொடர்ந்து வராவிட்டாலும்கூட, அவை நிகழ்ச்சிகளை எதிர்க்கட்சித் தலைவரின் அறையிலே அமர்ந்து கவனித்துக் கொண்டு இருந்திருக்கிறேன். தாழ்வாரத்திலே அமர்ந்து கவனித்திருக்கின்றேன். கேள்விப்பட்டும் இருக்கின்றேன். ஓர் உறுப்பினர் பேசும்பொழுது, ஒரு தவறான தகவலை, எதிர்க்கட்சியில் இருப்பவர் சொல்லிவிட்டால், உடனே முதலமைச்சர் எழுந்து, அன்றைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் எழுந்து, ஒரு அரை மணி நேரமாவது அதற்கு விளக்கம் கொடுத்திருப்பார்கள். யாராவது அந்த விளக்கத்திற்கு இடையிலே இடைமறித்துப் பேசியிருப்பார்களா என்றால், இல்லை. அவர்களேதான் விளக்கம் தருவார்கள். அந்த விளக்கத்திற்குப் பிறகுதான், தொடர்ந்து பேச வேண்டும், முதலில் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர். சில நேரங்களில் விளக்கத்தின் காரணமாகவே, எதிர்க்கட்சி

உறுப்பினர் பேச வேண்டிய வாய்ப்பே பறிபோய்விடும். அவை எல்லாம்கூட இந்த அவையில் நடைபெற்றிருக்கின்றன. எனக்கு மிக நன்றாகத் தெரியும். அந்த அளவிற்கு ஆளுங்கட்சி 'தன்னடித்த மூப்பாக' என்று சொல்வார்களே, கிராமத்திலே மொழி, அதைப்போல, தானே எல்லாம் என்ற அளவிற்கு நடைபெற்று, மற்றவர்கள் மூச்சு விடக்கூட முடியாத திணறலில் இந்த அவையிலேயிருந்து, இப்பொழுது மக்கள் அளித்த சுதந்திரத்தால், மூச்சுவிட கற்றுக் கொண்டிருக்கிறோம்.

*பிற்பகல் 12–55*

இந்தச் சூழ்நிலையில், இன்றைக்கு நடைபெற்ற சம்பவங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கூறுகின்ற என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் கண்ணப்பன் அவர்களானாலும், விடுதலைச் சிறுத்தை இயக்கத்தைச் சேர்ந்தவர்களானாலும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கு அடையாளமாகத்தான் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அது ஒரு வகையிலே, ஒரு முறை போனால் போகிறது என்று பொறுத்தருள வேண்டும் என்ற அந்தப் பொருளிலே சொல்லப்பட்ட வாசகங்களாகவே நான் அதைக் கருதுகின்றேன். ஆனால், இது தொடரலாமா என்றால், தொடரக் கூடாது. ஏனென்றால், தாக்கப்பட்டவர்கள் இங்கே சில பேர் இருக்கின்றார்கள். இன்னும் ஒரு நொடியோ, இரண்டு நொடியோ ஆகியிருந்தால் நானும் அதற்கு ஆளாகியிருப்பேன். அந்த அளவிற்கு இங்கே இருந்த ஒலிபெருக்கி முறிக்கப்பட்டு, என்மீது தாவியவர்களை நம்முடைய கருப்பசாமி பாண்டியனும், நம்முடைய அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். போன்றவர்கள்தான் தடுத்து நிறுத்தினார்கள். இல்லாவிட்டால், முன்பு ஒருமுறை என்னுடைய மூக்குக் கண்ணாடி உடைந்தது போன்ற காட்சிகள் எல்லாம்கூட இங்கே அரங்கேறியிருக்கும்.

இருந்தாலும்கூட, இவைகளுக்கிடையிலே, நான் நம்முடைய நண்பர்கள் கண்ணப்பன் அவர்களும், செல்வம் அவர்களும் சொன்ன அந்த வார்த்தைகளுக்கு மதிப்பளித்தால்தான், நாம் எதிர்க்கட்சிக்கு உண்மையிலேயே மதிப்பு அளிக்கிறோம் என்ற அந்த நிலையை நம்முடைய நெஞ்சார ஏற்றுக் கொண்டோம் என்பதற்கு அடையாளமாக அது அமையும். அதேநேரத்தில், தாக்கப்பட்டவர்கள், அடிபட்டவர்கள், மைக்கை உடைத்து, அந்த மைக்காலேயே தாக்கப்பட்டவர்கள் எல்லாம் இங்கே இருக்கிறார்கள். எனவே, அவைத் தலைவராகிய தாங்கள், நாளைக்கு காலையிலோ அல்லது இன்று மாலையிலோ உங்களுக்கு வசதியான



நேரத்திலே அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி, கட்சித் தலைவர்களையெல்லாம் அழைத்து, யார் யார் மீது புகார் கூறப்பட்டிருக்கிறதோ, அந்த உறுப்பினர்களையும் அழைத்துப் பேசி, அவர்களுடைய வருத்தத்தை ஏற்றுக்கொண்டு, வருத்தம் தெரிவித்தால் ஏற்றுக்கொண்டு, நாளை முதல் இந்த அவையிலே கலந்துகொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கலாமா என்பதைப் பரிசீலிக்க வேண்டுமென்று தங்களை நான் கேட்டுக்கொண்டு, அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையில் நடந்த சம்பவம் குறித்து, தாக்குதலுக்குள்ளான உறுப்பினர்கள் புகார் கொடுக்க வேண்டும் என்றால், இங்கே பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 1–00*

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் உரையாற்றுவார்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இந்த வாதத்தைத் தொடங்குகின்றபோதே நான் குறிப்பிட்டேன். ஒரு சட்டமன்ற பயங்கரவாதம் இங்கே அரங்கேறிவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன் என்று குறிப்பிட்டேன். ஆனால், நடந்த சம்பவங்கள் சட்டமன்ற பயங்கரவாதம் *(மணியடிக்கப்பெற்றது)* இங்கே...

## 1. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேரவையில் நடந்துகொண்டவிதம் குறித்து முடிவெடுக்க அலுவல் ஆய்வுக் குழு கூடுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல நாளை சட்டமன்றப் பேரவையினுடைய தலைவருடைய அறையில் எதிர்க்கட்சித் தலைவர்கள் எல்லோரையும் அழைத்து அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி இதுசம்பந்தமாக கலந்து பேசி முடிவு எடுக்க வேண்டும் என்று உத்தரவிடுகிறேன்.

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** தேர்தல் முடிந்தவுடனே நம்முடைய மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் இந்தத் தேர்தலின் முடிவுகளைப் பற்றி கருத்து சொல்கின்றபோது, இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றவர்கள் காட்டுமிராண்டிகள், நச்சுப் பாம்புகள், குரங்கு கையில் கிடைத்த பூமாலை என்றெல்லாம் குறிப்பிட்டார். ஒருவேளை இதுகூட ஓர் உரிமைமீறல் பிரச்சினைக்கு வழிவகுக்குமோ என்று எண்ணினேன். ஆனால், ஜனநாயக மரபுகளைக் காக்க நினைத்த நாம் அதைக்கூட பெரிதாக நினைக்கவில்லை. ஆனால், இன்று இந்த அவையிலே நடக்கின்ற சம்பவங்களை நாம் பார்க்கின்றபோதுதான், இடம் விட்டு இடம் தாவக் கூடியவர்கள் அங்கேயிருந்துதான் வந்திருக்கிறார்கள். மைக்குகளை உடைத்து எறியக் கூடியவர்கள்அவர்கள் மத்தியிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள். 15 ஆண்டு காலம், 20 ஆண்டு காலம் இந்தச் சட்டமன்றத்தில் பணியாற்றி அனுபவம் பெற்ற மூத்த உறுப்பினர்களைக்கூட 'வா, போ, போடா, வாடா' என்று தகாத வார்த்தைகளைச் சொல்லி, அவர்கள் மொழியிலே சொல்லப்போனால் காட்டுமிராண்டித்தனமான பாஷையிலே பேசுகின்றவர்களும் அவர்கள் தரப்பிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறார்கள். இதையெல்லாம் தொலைநோக்குப் பார்வையில் தெரிந்துதான் அதை அவர்கள் காட்டுமிராண்டிகள், நச்சுப் பாம்புகள், குரங்குகள் என்று சொன்னாரோ என்று நான் நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விட்ட பகுதியிலிருந்து என்னுடைய வாதத்தைத் தொடர நான் ஆசைப்படுகிறேன். மிக முக்கியமான ஒரு பொருளாதாரப் பிரச்சினையைக் குறித்து நாம் வாதித்துக் கொண்டிருந்தோம். கடந்த 3 ஆண்டுகளாக மத்திய அரசு, மாநில அரசுகளுக்குக் கொடுத்துவந்த தொகை ஆண்டுதோறும், ஒவ்வோர் ஆண்டும் எவ்வளவு தொகைகளைக் கூட்டிக் கொடுத்திருக்கிறார்கள் என்கிற புள்ளிவிவரத்தைத்தான் நான் சொல்லிக்கொண்டு வந்தேன். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு பதவியேற்ற முதல் ஆண்டில் மாநிலங்களுக்கு மத்திய அரசு 74 ஆயிரம் கோடியை வழங்கியது. அதற்கு அடுத்த ஆண்டு 94 ஆயிரத்து 400 கோடியை வழங்கியிருக்கிறது. 2005–2006 ஆம் ஆண்டு முடிந்து, இந்த 2006–2007 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கப் போகிற தொகை 1 இலட்சத்து, 



13 ஆயிரத்து, 448 கோடி ரூபாய். இவ்வளவு பெரிய தொகையினை மத்திய அரசு வழங்குகின்றபோது, நம்முடைய மாநில அரசு உடனுக்குடனேயே அந்தத் தொகையினைப் பெற்று அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. இதைத்தான் நம்முடைய மத்திய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகின்றபோது மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார், 'The States are sitting on a cash surplus.' திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணத்தைச் செலவிடாமல் மாநில அரசுகள் அதன்மீது உட்கார்ந்து இருக்கின்றன என்று மத்திய அரசு இன்று குற்றஞ்சாட்டியிருக்கிறது. அதைத்தான் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இந்த நாட்டிலே வெள்ள நிவாரண நிதிக்காக ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு செலவழிக்கப்பட்டது, இன்னும் எவ்வளவு செலவழிக்கப்படவில்லை என்று சொன்னார்கள்.

இதைப்போல ஒவ்வொரு திட்டத்திலும்—அது ஊரக வளர்ச்சித் துறையாக இருந்தாலும் சரி, நகர்ப்புற வளர்ச்சித் துறையாக இருந்தாலும் சரி, கல்வி மேம்பாடாக இருந்தாலும் சரி, விவசாயத் துறையாக இருந்தாலும் சரி, மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட பணத்தினை பல்வேறு மாநில அரசுகள் செலவழிக்கவில்லை என்கிற குற்றச்சாட்டை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். இதைத்தான் நான், அவர்களுடைய வார்த்தையிலே இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். '...Finance Minister P. Chidambaram on Monday urged the State Governments to spend the funds allotted to them from the first day of the new fiscal year rather than to wait till the last few months and buildup huge unutilised funds. Replying to the discussion on the budget in the Rajya Sabha, the Minister pointed out that the States were sitting on a huge cash balance due to increased devolution of funds.' இது வரலாற்றிலே இல்லாத அளவுக்கு, சரித்திரத்திலே இல்லாத அளவுக்கு, மாநில அரசுகளுக்கு இலட்சக்கணக்கான கோடி ரூபாயை மத்திய அரசு கொடுக்கின்றபோது, இங்கே இருக்கின்ற மாநில அரசு அதைப் பெற்றுக்கொண்டு செலவழிக்கின்ற தகுதி படைத்த அரசாக இருக்கவேண்டும். அதை உதாசீனப்படுத்துகின்ற அரசாக இருக்கக்கூடாது. ஏதோ மத்திய அமைச்சர்களை வேண்டாதவர்களைப் போல பார்ப்பது; தனிப்பட்ட அரசியல் மனமாச்சரியங்களை வைத்து, தமிழக மக்களைப் பழிவாங்கிய இந்த இரண்டு ஆண்டு காலத்தை, தமிழக மக்கள் ஒருநாளும் மன்னிக்கமாட்டார்கள். இதனால் என்ன ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், கடந்த 2 ஆண்டுகளில் தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பு

இன்னும் 20 ஆண்டுகளுக்கு தமிழகத்தைப் பாதிக்கும் என்கிற உண்மையை நான் சொல்லவில்லை. பொருளாதார வல்லுநர்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

பிற்பகல் 1–05

இன்று எனக்கு மிக மன நிறைவாக இருக்கிறது. நேற்றையதினம் நம்முடைய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் சிறுசேரிக்குப் போகிறார். சிறுசேரியிலே போய், இந்தத் தகவல் தொழில்நுட்பத்திற்காக அமைக்கப்பட்டுள்ள அந்த நீண்ட பூங்காவைப் பார்த்து, அதிலே ஒரு கணக்குச் சொல்கிறார். ஒதுக்கப்பட்ட இந்த பூங்காவிலே இதுவரை தொடங்கப்பட்ட தொழில் நிலையங்கள் ஏறக்குறைய 10 விழுக்காடுகூட இல்லை. இன்று, இந்த ஆண்டு மட்டும், இந்த I.T. Sector என்று சொல்லப்படுகின்ற, இந்தத் தகவல் தொழில்நுட்பப் பிரிவு மூலம், இந்திய அரசினுடைய வெளிநாட்டு, அந்நியச் செலவாணி தொகுப்பு மட்டும், ஏறக்குறைய 40 பில்லியன் டாலர்கள். இந்த 40 பில்லியன் டாலர்களை வருவாயாகப் பெறக்கூடிய ஒரு பெரிய வாய்ப்பினைக் கொண்ட தகுதி பெற்ற மாநிலமாகத் தமிழகம் இருக்கிறது. இந்தத் தமிழ்நாட்டில்தான், அதற்குத் தகுதியான மாணவர்கள், இளைஞர்கள், இளம் பெண்கள், அந்தத் தொழில்நுட்பத்தைப் புரிந்துகொள்ளக் கூடியவர்கள் இருக்கிறார்கள். இன்று வெளிநாட்டிலே இருந்து வருபவர்கள் எதிர்பார்க்கின்ற வகையிலே, தங்களுடைய அறிவுத் திறத்தை உயர்த்தி, அதற்குத் தகுதியாகப் பணியாற்றக் கூடியவர்கள், இன்று உலகின் எந்த மூலையில் இருக்கிறார்கள் என்று சொன்னால், தமிழகத்தில்தான் இருக்கிறார்கள்.

இன்று Silicon Valley என்று சொல்லக்கூடிய கலிபோர்னியாவிலும் சரி, இன்று இந்தியாவிலே தொழில்நுட்பத்தினுடைய உச்சத்தைப் பிடித்துக் கொண்டிருக்கின்ற கர்நாடக மாநிலமானாலும் சரி, அவர்களை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கக்கூடிய, ஆந்திர மாநிலமாக இருந்தாலும் சரி, அங்கெல்லாம் பணியாற்றுகிறவர்கள் யார் என்று சொன்னால், அங்கெல்லாம் தொழில்நுட்ப அறிஞர்களாக யார் வேலை செய்கிறார்கள் என்று சொன்னால், தமிழ்நாட்டு மாணவர்கள், தமிழ்நாட்டு மாணவியர்கள். நான் இதைத்தான் சொல்கிறேன். இன்று அப்படிப்பட்ட வாய்ப்பை, தமிழகம் பெற்றிருக்கிறது. எனவேதான், நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். நீங்கள் 83 வயதிலும் கனவு காணக்கூடிய இளைஞர். எங்களுக்கெல்லாம் இப்போதே கனவுகள் வர மறுக்கின்றன. ஏனென்று சொன்னால், உங்களுடைய சிந்தனை



ஓட்டத்திற்கு முடிவே இல்லாமல், தொடர்ந்து சிந்திக்கக்கூடிய உங்களால்தான், இந்த வாக்காளர்களுடைய தேவைகளைப் புரிந்துகொள்ள முடிந்தது.

நீங்கள் கலர் டி.வி. என்று சொன்னீர்கள். தமிழகமே அதைக் கேட்டு ஆனந்தம் அடைந்தது. அப்போதுகூட சொன்னார்கள். கலர் டி.வி. கொடுத்து வாக்கு வாங்க நினைக்கிறார் என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன். இந்தத் தமிழ்நாட்'டிலே, இந்தியாவிலே, இன்று பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. அறிவியல் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளுக்குள் நாம் எதிர்பார்க்காத அளவிற்கு, பார்க்கின்றவர்கள் கையில் எல்லாம், செல் போன். வீடுகளில் எல்லாம் கலர் டி.வி. நாம் நினைத்துப் பார்க்க முடியாத பொருட்கள் எல்லாம் சென்னையிலே சந்தையிலே விற்கின்றன. ஒரு காலத்திலே சிங்கப்பூருக்குச் சென்று, ஹாங்காங்குக்குச் சென்று, ஜப்பானுக்குச் சென்று வாங்க வேண்டிய பொருட்கள் எல்லாம், இன்று சென்னை சந்தையிலே வந்து குவிந்து கிடக்கின்றன. ஆனால் வாங்குவது யார்? அதை வாங்கத் தகுதி படைத்தவர்கள் யார்? சமூகத்தின் மேல்தட்டிலே வாழ்ந்தவர்கள், கோடீஸ்வர குடும்பங்களிலே பிறந்தவர்கள், ஆதிக்க சக்திகளாக, அதிகார சக்திகளாக, ஆண்டாண்டு காலம் இருந்தவர்கள். அந்தக் குடும்பத்துப் பிள்ளைகள்தான், கலர் டி.வி. பார்த்திருப்பார்களேயொழிய, என் கடையநல்லூர் கிராமத்திலே, என் சட்டமன்றத் தொகுதியிலே, சொக்கம்பட்டியிலே, சாம்பவர் வடகரையிலே, ஆய்குடியிலே, ஓர் ஏழை விவசாயினுடைய வீட்டிலே, அந்தக் குழந்தை, என்று கலர் டி.வி. பார்க்கும் என்று அந்த ஏக்கத்தைப் புரிந்துகொண்ட, ஒரே தலைவராகத்தான் டாக்டர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தொழில்நுட்பத்தைத் திறந்து கொடுத்திருக்கிறார். எனவேதான் நான் சொல்கிறேன். நமக்கு ஒரு பார்வை. ஒரு vision.

இன்று பாரதத்தினுடைய பிரதமராகப் பொறுப்பேற்றிருக்கின்ற, மரியாதைக்குரிய பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள், Vision 2020, இந்தியாவினுடைய எதிர்காலம் 2020 ஆம் ஆண்டு எப்படி இருக்க வேண்டும் என்கிற வரைபடத்தினை வைத்திருக்கிறார். இந்தியச் சரித்திரத்திலே முதன்முறையாக, ஒவ்வோர் ஆண்டும், இந்த அரசு என்ன செய்கிறது என்கிற அறிக்கையைத் தரக்கூடிய, முதல் பிரதமரை இன்று காங்கிரஸ் கட்சி தந்திருக்கிறது – The Report to the people. இந்த ஆண்டு, இந்த அரசு என்ன செய்திருக்கிறது; இந்த ஆண்டு இந்த அரசு செய்து முடித்த சாதனைகள் என்ன, இந்த அரசு ஒதுக்கிய நிதிகள் என்ன,

எத்தனை ஏழைகள் பயன்பெற்றார்கள், எத்தனை மாணவர்கள் கல்விக் கடன் பெற்றார்கள், எத்தனை விவசாயிகளுக்கு மறுவாழ்வு கிடைத்தது என்பதைப் போன்ற ஓர் அறிக்கையைத் தந்து, அடுத்த ஆண்டு என்ன செய்யப் போகிறோம் என்றும் அறிக்கை தரக்கூடிய ஓர் அரசு அங்கேயிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட பிரதமர் இன்று உங்களுக்காகக் காத்திருக்கிறார்.

இந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை வடிவமைத்து, அதன் அரசியல் தளத்தை செம்மைப்படுத்தி, இந்த அரசை டெல்லியிலே உட்கார வைத்த மிகப் பெரிய பெருமை உங்களுக்கு உண்டு என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்லவில்லை. உங்களை சாட்சியாக வைத்துக்கொண்டு, 5 இலட்சம் மக்களை சாட்சியாக வைத்துக்கொண்டு, திருச்சியிலே தேர்தலுக்கு முன்னால் நடந்த திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிலே அன்னை சோனியா காந்தி அவர்கள் வாய் நிறையச் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணியை அமைத்துத் தந்த சிற்பி நீங்கள் என்று சொன்னார்கள். ஏனெனில், அதை நான்தான் மொழி பெயர்த்தேன். இன்று அதையெல்லாம் நினைத்துப் பார்க்கிறோம். இன்று இந்த ஆட்சி தொடர வேண்டும். இந்த ஆட்சியினுடைய நன்மைகள் தமிழக மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதிலே உங்களுக்கு இருக்கிற அக்கறையைவிட எங்களுக்கு அதிக அக்கறை. இந்த ஆட்சியைப் பார்த்து நாங்கள் இரசிக்கிறோம்.

*பிற்பகல் 1–10*

இங்கே நீங்கள் தந்திருக்கிற ஒரு மிகப்பெரிய வரலாற்றுப் புகழ்மிக்க அறிவிப்பு. அந்த அறிவிப்பினுடைய முழு பரிணாமத்தை தமிழகம் உணர்ந்து இருக்கிறதா இல்லையா என்று எங்களுக்குத் தெரியவில்லை. ஆலயங்களின் கதவுகளைத் திறந்து விட்டிருக்கின்றீர்கள். நான் காங்கிரஸ் கட்சியினுடைய அரசில் சமூக வாழ்க்கையினுடைய பாடங்களை, சரித்திர மாணாக்கனாகப் படித்தவன். 1930–களில் மதுரை மீனாட்சி அம்மன் கோயிலுக்குள், தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் போக முடியாது. அப்படி ஒருவர் போனார் என்பதற்காக அந்த ஆலயத்திற்குள்ளே கொலை செய்யப்பட்டார். அப்படி ஒரு பிற்படுத்தப்பட்டவர் அந்த ஆலயத்திற்குள் போனார் என்பதற்காக அன்னை மீனாட்சியே வெளியே போய் விட்டாள் என்று பத்திரிகையிலே செய்தி வெளியிட்டார்கள். அன்றையதினம் முதலமைச்சராக இருந்தார் அமரர் இராஜாஜி அவர்கள். அவர் உடனே அந்த ஆலயத்திற்கு



அனுப்பினார். யாரை அனுப்பினார்? மீனாட்சி இருக்கிறாளா என்று பார்ப்பதற்கு சத்தியமூர்த்தியை அனுப்பினார். சத்தியமூர்த்தி தன்னோடு 2 பேரை அழைத்துக் கொண்டு போனார். பெருந்தலைவர் காமராஜரையும், அமரர் கக்கனையும் அழைத்துக் கொண்டு போனார். ஆலயப் பிரவேசம் நடக்கக் கூடாது என்பதற்காக 5,000 பெண்டிர் அங்கே கருப்புச் சேலை அணிந்து கொண்டு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். அந்தப் பாதுகாப்புக்கு—பசும்பொன் தேவர் திருமகனார் அவர்கள் அதற்குப் பாதுகாப்புக்காக ஆள் அனுப்பினார்கள். உள்ளே போய் மீனாட்சியை தரிசித்தார்கள். இராஜாஜி சத்தியமூர்த்தியிடம் கேட்டார். சத்தியமூர்த்தி அவர்களே, மீனாட்சி இருக்கிறாளா என்று கேட்டார். சத்தியமூர்த்தி பதில் சொன்னார். மீனாட்சி உள்ளே இருக்கிறாள், தான் இதுவரை பார்த்திராத இரண்டு பிள்ளைகளைப் பார்த்த அதிகப் பரவசத்திலே இருக்கிறாள் என்று காமராஜரையும் கக்கனையும் சொன்னார். என் அன்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜரும், கக்கனும் தொடங்கி வைத்த காரியத்தை இன்று கலைஞர் முடித்து வைத்திருக்கிறார் என்பது வரலாற்றுப் புகழ்மிக்கது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் மரியாதையோடு சொல்கிறேன். ஆலயத்தின் உள்வரம்பிற்குள் அழைத்துச் சென்றார்கள். நீங்களோ இன்று கர்ப்பக்கிரகத்தின் கதவுகளைத் திறந்து திருமேனியைத் தழுவ விட்டிருக்கின்றீர்கள். இது ஒரு மிகப்பெரிய அரசியல் சமூக மாற்றம். நந்தனாருடைய, எனக்கு அது வாயெல்லாம் பெருமையாக இருக்கிறது. ஒருவேளை இப்படிப்பட்ட ஓர் ஆட்சி நடந்து ஓர் ஆணை வந்து இருக்குமென்று சொன்னால் தமிழ்நாட்டிலே மதமாற்றங்களே நடந்திருக்காதோ என்று நான் எண்ணுகிறேன். மதமாற்றங்களுக்குப் பின்னால் என்ன வரலாறு இருக்கிறது? ஆலயத்திலே ஆண்டவனைத் தீண்டவும், தொழவும், ஆண்டவனை நேருக்குநேராகத் தரிசிக்கவும் ஒருசில மக்களுக்கு அனுமதியில்லை என்கின்ற காரணத்தினால்தான் இந்த மண்ணிலே மதமாற்றங்கள் நடந்தது என்பதுதான் சமூக வரலாறு. ஆகவே, நீங்கள் இன்று எழுதி வைத்திருக்கிற சரித்திரம் இருக்கிறதே, நான் உங்களை நெஞ்சத்தின் நிறைவோடு வாழ்த்துகிறேன். காமராஜருடைய அற்புதமான தொண்டனாக வாழ்த்துகிறேன். கக்கனுடைய அன்பு சிஷ்யனாக வாழ்த்துகிறேன். எங்கள் தலைவர்கள் துவங்கி வைத்த அந்த மாபெரும் சரித்திரத்தினுடைய தொடர் ஓட்டத்தின் இறுதிக் கட்டத்தை நீங்கள் முடித்து அந்த வெற்றிக் கொடியை நாட்டியிருக்கிறீர்கள். உங்களை நான் இரண்டாவது நந்தனார் என்று ஏன் அழைக்கக்கூடாது என்று நான் நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நந்தனாருக்கும் உங்களுக்கும் என்ன வித்தியாசம்? நந்தனார் ஆண்டவனை வெளியே கொண்டு வந்தார். நீங்கள் பக்தனை உள்ளே கொண்டு போயிருக்கிறீர்கள். இந்தச் சரித்திர மாற்றத்திற்கு நீங்கள் சாட்சியம் இருந்திருக்கிறீர்கள்.

அற்புதமாக 19-5-2006 அன்று இந்து பத்திரிகை எழுதியிருக்கிறது, அந்தத் தலையங்கத்தை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். "The decision of the Tamil Nadu Government to allow all qualified persons irrespective of their caste to work as temple priests is an important victory in the continuing fight against the social curse, that is India's caste system." ஒரே ஆணையின்மூலம், ஒரே உத்தரவின்மூலம், இந்த நாட்டிலே 5000 ஆண்டுகளாக, 6000 ஆண்டுகளாக இருக்கின்ற ஜாதிய பூதத்தினுடைய முதுகெலும்பை நீங்கள் முறித்ததாக இந்து பத்திரிகை தலையங்கம் எழுதியிருக்கிறது. இது மிகப்பெரிய சமூக நீதி. இந்த சமூக நீதிதான் நம்முடைய இலட்சியப் பார்வை. ஓர் அற்புதமான துவக்கத்தை நாம் துவங்கியிருக்கிறோம். தமிழக மக்கள் நமக்கு மூன்றில் இரண்டு பங்கு இடங்களைத் தந்திருக்கிறார்கள். இந்த ஆட்சி தொடர்ந்து வாழ்ந்து, இந்த நாட்டு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய மிகப்பெரிய பொறுப்பை நாம் சுமந்திருக்கிறோம். எனவே, தமிழகத்தினுடைய முதலமைச்சருக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் ஓர் உறுதி சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த ஆட்சிக்கு எங்களுடைய முழு ஒத்துழைப்பு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆட்சியினுடைய ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு நேரத்திலும் நாங்கள் இருந்தோம். பெண் பார்க்கும்போது வந்தோம். பெண்ணை அலங்கரிக்கும்போதுகூட இருந்தோம். திருமணச் சாப்பாடு நடக்கின்றபோதுகூட இருந்தோம். நீங்கள் தாலி கட்டும்போதும்கூட இருந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது தாம்பத்தியம் செய்கிறீர்கள். சற்று தள்ளி நிற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) கதவை அடைத்துக் கொள்ளுங்கள். காவலுக்கு காத்திருப்போம். (மேசையைத் தட்டும் ஒலி) உடனே எங்களில் சிலர் கேட்கிறார்கள். மாப்பிள்ளைக்குத்தான் கல்யாணம், மாப்பிள்ளைத் தோழனுக்கு எப்போது கல்யாணம் என்று கேட்கிறார்கள். நான் சொன்னேன், எங்கள் குடும்பத்துப் பெரியவர்கள் அதை முடிவு செய்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் குடும்பத்துப் பெரியவர் என்று சொல்கின்ற போது டாக்டர் கலைஞர் அவர்களே, உங்களையும் நாங்கள் எங்கள் குடும்பத்துப் பெரியவர்தான் என்று நினைத்திருக்கிறோம். எனவே, இது தமிழகத்திற்கு ஓர் அற்புதமான காலம். தமிழகத்தினுடைய பொற்காலம். 83 வயதில் நீங்கள் உழைத்த உழைப்பு, உங்களுடைய சிந்தனைத் தெளிவு ஒவ்வொன்றையும் நேரே இருந்து பார்க்கக்கூடிய பரவசமான நாட்களை நான் பெற்றவன். தேர்தல் பிரச்சாரத்தின்போது, நீங்கள் தமிழகத்தினுடைய மூலைமுடுக்கெல்லாம் சுற்றி வந்தபோது, உங்களைப்



பார்க்க திரண்ட மக்கள் கூட்டம், அவர்கள் முகத்திலே தெரிந்த தெளிவு, அவர்கள் கண்களிலே தெரிந்த ஒளி, அவர்கள் உங்கள்மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு நான் சாட்சியாக நின்று பார்த்தவன். எனவே, இந்த நம்பிக்கையை, இந்தத் தெளிவை, இந்த அன்பை நாம் திரும்பக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படிப்பட்ட நாட்களுக்காக நான் காத்திருக்கிறேன்.

*பிற்பகல் 1-15*

இரண்டே இரண்டு கோரிக்கைகளை உங்கள் பக்கத்திலே நான் வைக்க ஆசைப்படுகிறேன். இன்றையதினம் அமரர் ராஜீவ் காந்தி அவர்கள், இந்தத் தமிழகத்து மண்ணிலே மறைந்த அந்த மாபெரும் இடம் ஒரு வரலாற்றுப் புகழ்மிக்க ஸ்தலமாக மாறி வருகிறது. அந்த ஸ்தலத்திலே வந்து நானும், நம்முடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்களும், அன்னை, அம்மையார் சோனியா காந்தி அவர்களைச் சந்தித்த போது, நாங்கள் ஒரு கோரிக்கையைச் சொன்னோம். அவர்கள் சார்பாக, உங்கள் மத்தியிலே வைக்கப் போவதாகச் சொல்கிறோம். மற்ற நாட்களில் அந்தப் பகுதி, ஊரின் எல்கையை விட்டுத் தள்ளி நிற்கின்ற காரணத்தினால், அநேக மக்கள் சென்று பார்ப்பதற்கு வழி இல்லாமல் இருக்கிறது. எனவே, அதைச் சுற்றி ஏதாவது நடவடிக்கைகள் வேண்டும் என்று கேட்டோம். நான் உங்களைக் கேட்கிறேன். அமரர் ராஜீவ் காந்தியின் பெயரிலே Rajiv Gandhi Institute of Aeronautical Science and Training of Pilots Academy. தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் ஒரு விமான ஓட்டியாக வாழ்க்கையைத் தொடங்கி, அதிலே மிகப் பெரிய நிறைவு கண்டு, அந்த விமான ஓட்டிக்கு உள்ள தைரியத்துடனும், தொழில்நுட்பத்துடனும் இந்த நாட்டை ஆண்ட சரித்திரத்தை யாரும் மறுக்க முடியாது. எங்கள் நெஞ்சில் நிறைந்த தலைவர், எங்கள் இனிய தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள். அவர்கள் நினைவாக இன்று விமானப் போக்குவரத்தும், விமானப் பயணமும் மிகவும் அதிகரித்திருக்கின்ற வேளையிலே தமிழகத்தைச் சார்ந்த மாணவர்கள் விமான ஓட்டிகளாக, இலவசமாகப் பயிற்சி எடுக்கின்ற வகையிலே ஒரு நல்ல விமான ஓட்டி பயிற்சிப் பள்ளியும், விமானங்களைப் பழுது பார்த்து அந்த விஞ்ஞானத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய ஒரு மிகப் பெரிய தொழிற்கல்வி நிறுவனமும் அந்த ஸ்ரீபெரும்புதூர் மண்ணிலே, அந்த இடத்தினுடைய அமைதிக்குப் பங்கம் விளைவிக்காத வகையிலே ஒரு நினைவுச் சின்னம் வேண்டும், அங்கே மாணவர்களும், மாணவிகளும் படிக்க வேண்டும், ராஜீவ் காந்தி அவர்களுடைய அந்த விஞ்ஞான அறிவும்,

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2006 மே 26

அவர்களுடைய தொழில்நுட்பப் பாசமும் அந்த மண் முழுவதும் நிறைய வேண்டும் என்பது எங்களது கோரிக்கை.

இரண்டாவது கோரிக்கை, இந்த நாட்டிலே தீண்டாமை ஒழிய வேண்டும் என்று சொன்னால், சாதி ஒழிய வேண்டும் என்று முதன்முதலிலே குரல் கொடுத்தவர் பாபா சாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். எப்படி காந்தியடிகளுடைய பிறந்த நாளை தீண்டாமை ஒழிப்பு நாளாகக் கொண்டாடுகிறோமோ, அதைப்போல பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள் பிறந்த நாளை சாதிய ஒழிப்பு நாளாக நீங்கள் அறிவிக்க வேண்டும் என்று நான் உங்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இது இந்தச் சமூகத்திற்கு—இந்த சாதி என்கிற பூதம் இன்று தமிழகத்தை மட்டுமல்ல இந்தியாவையே ஆட்டிப்படைத்து, ஒடுக்கப்பட்ட மக்களுடைய முன்னேற்றத்தைக்கூட சகித்துக்கொள்ள முடியாத ஒரு சாதிய வெறி இந்தியா முழுவதும் பற்றி எரிவதைப் பார்க்கிறோம். எனவே, சாதி ஒழிந்தால்தான், தீண்டாமை ஒழியும். சாதி ஒழிய வேண்டும் என்று முதன்முதலிலே இந்த மண்ணிலே குரல் கொடுத்தவர் பாபா சாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். எனவே, அவர்கள் பிறந்த நாளை சாதிய ஒழிப்பு நாளாக நீங்கள் இங்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன் அவர்கள்.

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்தாறுகள் ஓடிடும் சோழ வள நாட்டில் கண்டியூர் கிராமத்தில், விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் பெரும் குடும்பத்திலிருந்து போட்டியிட ஐந்து முறை வாய்ப்பளித்து, மூன்றாவது முறையாக இம்மாமன்றத்தில் உறுப்பினராகப் பணியாற்ற நல்ல வாய்ப்பை வழங்கிய தமிழினத்தின் தலைவர், வாழும் வள்ளுவர், எங்கள் அய்யன் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், திராவிட இனத்தின் குல விளக்கு, இளைஞர் அணியின் எழுஞாயிறு, எங்கள் தளபதி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தஞ்சை மாவட்டச் செயலாளர், பொன்னியின் செல்வன் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்தியப் பேரரசின் மாண்புமிகு நிதித் துறை இணை அமைச்சர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம் அவர்களுக்கும், தேர்தல் பணியாற்றிய ஜனநாயக



2006 மே 26] [திரு. துரை சந்திரசேகரன்]

முற்போக்குக் கூட்டணியின் தலைவர்கள் செயல் மறவர்களுக்கும், வாக்களித்து வெற்றி தேடித் தந்த திருவையாறு தொகுதி மக்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து திரு. மு. அப்பாவு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை வரவேற்கின்றேன். இந்திய சரித்திரத்தில் முதன்முறையாக ஓர் அரசியல் கட்சியின் தேர்தல் அறிக்கையை முதல் ஆளுநர் உரையாகக் கொடுத்த பெருமை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. எங்களை எப்பொழுதும் குறை கூறும் பத்திரிகைகூட ஆளுநர் உரையை சலுகை உரை என்றே குறிப்பிடுகிறது. ஏழையெளிய மக்களின் அடிப்படைத் தேவை எதுவோ, அதனைத் திட்டமிட்டு தெளிவான முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டு மக்களிடம் வைத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கை, இந்திய நாட்டின் அரசியல் தலைவர்களை வியப்புடன் திரும்பிப் பார்க்க வைத்தது. அரசியல் வரலாற்றில் தேர்தல் அறிக்கையே வேட்பாளராகப் போட்டியிடுகின்ற நிலை வந்தது.

*பிற்பகல் 1–20*

ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்குப் போடமுடியுமா? இது ஏமாற்று வேலை, முடியவே முடியாது என்றார்கள். விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய பயிர்க் கடன்கள், அசலுடன் வட்டியுடன் தள்ளுபடி என்றோம். இது சாத்தியமா, எப்படி முடியும் என்றார்கள். இலவசமாக கலர் டி.வி. வழங்கப்படும் என்றோம். கலர் டி.வி. விலை அதிகம், எல்லோருக்கும் வழங்குவார்களா. கலர் டி.வி. பார்த்தால் தமிழக இளைஞர்கள், பெண்கள் கெட்டுப் போவார்கள், சோம்பேறித்தனம் வரும் என்றார்கள். நிலமற்ற விவசாயிகளுக்கு அரசு நிலத்தை தலா இரண்டு ஏக்கர் இலவசமாக வழங்குவோம் என்றோம். இது எப்படி முடியும், நிலம் எங்கேயிருக்கிறது, நாகப்பட்டினத்திற்குக் கிழக்கேயா என்று கேட்டார்கள். தேர்தல் அறிக்கை வெளியிட்டபின், ஓய்வறியா சூரியன், கோபாலபுரத்திலிருந்து தேர்தல் சுற்றுப்பயணமாகப் புறப்பட்டவுடன் ஒவ்வொரு திட்டத்திற்கும் விளக்கம் தந்தார்கள். மக்கள் எழுச்சியுடன் தலைவர் கலைஞரை வரவேற்றார்கள்.

2001–2002 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்த அ.தி.மு.க. அரசு, தமிழகத்தில் 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலம் உள்ளதாக இந்த மாமன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறது.

20 இலட்சம் ஹெக்டேர் நிலம் அதாவது, 50 இலட்சம் ஏக்கர் நிலத்தை விவசாய நிலமாக மாற்றி, நிலமற்றவர்களுக்குத் தலா இரண்டு ஏக்கர் வழங்கப்படும் என்று நம்முடைய தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்பை எல்லா தரப்பு மக்களும் இன்றைக்குத் தமிழகத்தில் வரவேற்றிருக்கின்றார்கள்.

தலைவர் கலைஞர் அவர்களின் முத்தான கடந்த கால ஆட்சியில் நடைபெற்ற திட்டமான உழவர் சந்தைத் திட்டம் மிகச் சிறப்பாக தமிழகத்தில் நடைபெற்று வந்தது. அதேபோல, வரும் முன் காப்போம் திட்டம்மூலம் கிராமப்புற மக்களில், ஏழையெளிய மக்களுக்குப் புற்றுநோய், இதய நோய், இருதய நோய் இருக்கின்றது என்பதையெல்லாம் மருத்துவக் குழு கண்டுபிடித்து, அதன் மேல்முறையீடாக பெரிய மருத்துவமனைக்குப் பரிந்துரை செய்கின்ற அந்தச் சிறப்பான திட்டத்தை, கடந்த ஐந்தாண்டு காலமாக ஆட்சியில் இருந்தவர்கள் உதாசீனப்படுத்தி, அந்தத் திட்டத்தை முடக்கிப் போட்டார்கள்.

அதேபோல, ஏழையெளிய மக்கள் திருமண உதவித் திட்டமான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்மூலம், கடந்த 1996–2001–ல் கிட்டத்தட்ட 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களில் விளக்கேற்றி வைத்த பெருமை நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுக்கு உண்டு. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார் என்பதற்காக, கடந்த ஐந்தாண்டு காலத்தில் அந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டார்கள். கடந்த ஆட்சியில் அப்படி கிடப்பில் போடப்பட்டிருந்த அந்தத் திட்டங்களுக்கெல்லாம் புத்துயிர் வழங்குகின்ற வகையில், இந்த ஆளுநர் உரையில் குறிப்பிட்டதைத் தமிழ்நாட்டு மக்கள் வரவேற்றிருக்கிறார்கள்.

அதேபோல, கடந்த ஆட்சியில் ஏழை மாணவர்களுக்கு, பள்ளி மாணவர்களுக்கு இலவச சைக்கிள் வழங்குகின்ற திட்டத்தை, மத்திய அரசினுடைய நிதியிலிருந்து வழங்கப்பட்ட திட்டத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சியின்றி இந்த அரசும் வழங்கும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே அதை மாணவர்கள், ஏழையெளிய மக்கள் வரவேற்கின்றார்கள். அதேபோல, விவசாயிகளுக்குக் கடன் சுமையை நீக்கியதால், தஞ்சை மாவட்டத்து டெல்டா விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்து, ஒரு புதிய பரிணாமத்தை அவர்கள் இன்றையதினம் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.





இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும் என்கிற உத்தரவாதம் இந்த ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதேபோல, ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்கு நீர் திறந்து விடப்படும் என்ற இனிப்பான செய்தியை இந்த ஆளுநர் உரையில் வழங்கியிருக்கின்றார்கள். அதேபோல, மன்னர்கள் காலத்திற்குப் பின்பு, முதன்முறையாக 1997 ஆம் ஆண்டு முதல் காவிரி டெல்டா மாவட்டங்களில் பாசன வடிகால்கள், வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள் தூர்வாரப்பட்டு, முறையான பாசனமும், மழைக்காலங்களில் வெள்ள அபாயம் நீக்கப்பட்டு, மிகச் சிறப்பான முறையில் தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் நடைபெற்றது. கடந்த ஆட்சிக் காலத்தில் வாய்க்கால்களைத் தூர்வாருகின்ற பணி நடைபெற்றதாகக் குறிப்பிட்டார்களேயொழிய, பல இடங்களில் வெட்டப்படாத நிலையிருக்கின்றது. அப்படி வெட்டியதாக அவர்கள் கணக்கிலே இருக்கின்றது. அதையெல்லாம் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனமாகப் பரிசீலித்து, அதற்குரிய நடவடிக்கையை எதிர்காலத்தில் எடுக்கவேண்டும்.

அதேபோல, நீர்வள ஆதார மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் திட்டத்தின்மூலம் கடந்த தி.மு.க. ஆட்சியில் 800 கோடி ரூபாயில் 636 பணிகள் நிறைவேற்றப்பட்டன. ஆனால், கடந்த 5 ஆண்டு காலத்தில், அந்தத் திட்டங்கள் எல்லாம் முடக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, என்னுடைய திருவையாறு தொகுதியில், வாழவந்தான் கோட்டையில், பொய்கைகுடி ஏரியில் பை–பாஸ் திட்டம் கடந்த தி.மு.க. ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார் என்பதற்காக அந்தத் திட்டத்தை முடக்கியிருக்கிறார்கள். அதை மீண்டும் பொதுப் பணித் துறையின்மூலம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள், அதேபோல மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்கு வழங்கப்படுகின்ற அந்தத் திட்டம் உண்மையிலே மிக நீண்டகாலமாக எல்லா மக்களும் வேண்டி ஏற்றுக்கொண்டது. தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதை நமது ஆளுநர் உரையில் குறிப்பிட்டு, அதற்குரிய சட்டத் திருத்தத்தை முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தக் கிறிஸ்துவ மக்கள் இன்றையதினம் தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கின்றார்கள். அதேபோல, சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீட்டுச் சட்டம் கொண்டு வருவதை நான் வரவேற்கிறேன். அதை அனைத்துத் தரப்பு மக்களும் இன்றைக்கு தமிழகத்தில் வரவேற்றிருக்கிறார்கள்.

பிற்பகல் 1–25

இதையெல்லாம்விட பெருமையாக, நம்முடைய மறைந்த, நினைவில் வாழும் நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு, அவருடைய சிலையை கடற்கரைச் சாலையில் ஜூலை 21 ஆம் தேதி நிறுவுவதை, இன்றைக்கு திரை உலகமும், தமிழக மக்களும் பெரிதும் வரவேற்கிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் அவருக்கு மணிமண்டபம் கட்டுவதாகக் கூறி, இடம் ஒதுக்கப்படாமல், அந்த இடம் ஒதுக்குவதைக் காலதாமதப்படுத்தி, தொடர்ந்து அவர்கள் நடிகர் திலகத்தைப் புறக்கணித்திருக்கிறார்கள்.

அதேபோல், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்கள் பெயரிலிருந்த திரைப்பட நகர். அதில் அவருடைய பெயரை எடுத்திருக்கிறார்கள். அதையெல்லாம் மீண்டும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல சுற்றுலாப் பயணிகளுடைய அடிப்படை வசதிகளை மேம்படுத்த ஒட்டுமொத்த சுற்றுலா திட்டம் வருவதை வரவேற்கிறேன்.

அதேபோல், திருவையாறு தொகுதியில் கல்லணை சுற்றுலாத் தலமாக இருக்கிறது. இன்றைக்கு அங்கு பல சுற்றுலாப் பயணிகள் வருகின்ற நிலை இருக்கின்றது. அந்தக் கிராமத்தினுடைய தோகூர் கல்லணை கிராமங்களை, Global villages திட்டத்தில் எடுத்து, மத்திய அரசின் சுற்றுலாத் துறையின்மூலமாக வருகின்ற நிதியினைப் பெற்று, அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நுழைவுத் தேர்வை இரத்து செய்ததை, எழையெளிய மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் குறிப்பாக கிராமத்து மக்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் வரவேற்கிறார்கள்.

அதேபோல, கல்விக் கண் திறந்த கர்ம வீரர் காமராஜர் அவர்கள் பிறந்த நாள் விழாவில், முட்டை வழங்குகின்ற அந்தத் திட்டத்தை அறிவித்ததை அனைத்து மக்களும் இன்றைக்கு தமிழகத்தில் வரவேற்கிறார்கள்.

அருமை மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இன்றைக்கு அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஒரு புரட்சிகரமான கருத்தை, அந்த திராவிட சமுதாயமே உள்ள அனைவரும் இன்றைக்கு வரவேற்று இருக்கிறார்கள்.



தஞ்சாவூரில் ஜூலை 12–ல் திராவிடர் கழகத்தின் சார்பில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பாராட்டு தெரிவிக்க இருக்கின்றார்கள். உள்ளபடியே அது ஒரு சமூக மாற்றமாக, அவர்கள் குறிப்பிட்டதைப்போல அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர்கள் ஆகலாம் என்ற அரும்பணியை இயற்றிய நம்முடைய முதல்வர் அவர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள், ஒட்டுமொத்த மக்கள் நன்றி தெரிவித்துக்கொள்கிறார்கள்.

அதேபோல, மதமாற்றத் தடைச் சட்டம் முறைப்படி திரும்பப்பெறப்படும் என்று கூறியதை அனைத்து மக்களும் இன்றைக்கு வரவேற்கின்றார்கள்.

கிராம மக்களின் போக்குவரத்தைச் சிறப்பாக செயல்படுத்த, கடந்த நம்முடைய கலைஞர் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மினி பஸ் திட்டம், கடந்த ஆட்சியில் சிதைந்து, அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டிருப்பதை, மீண்டும் கொண்டுவருவதை வரவேற்கின்றார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் போக்குவரத்துக் கழகத்தில் ஏராளமான, அரசுப் போக்குவரத்திற்கு இடையூறாக தனியார் பேருந்துகளுக்கு அந்த வழித்தட நேரத்தை மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். அதனால் அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதைக் கவனத்தில் கொண்டு, எதிர்காலத்தில் தீர்க்கின்றவகையில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதைப்போல, தொடர்ந்து நம்முடைய அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவு பெற்ற ஆளுநர் உரையை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

## 1. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் பேரவையில் நடந்துகொண்டவிதம் குறித்து முடிவெடுக்க அலுவல் ஆய்வுக் குழு கூடுதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்த அவையில் நடைபெற்ற விரும்பத்தகாத நிகழ்ச்சிகளை உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், பார்வையாளர்கள் அனைவரும் நேரில் பார்த்தீர்கள். இதுகுறித்து தீர்மானம் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜனநாயக மரபுகளுக்கு மதிப்புக் கொடுத்து, இதுகுறித்து கட்சித் தலைவர்களைக் கலந்தாலோசித்து முடிவு எடுக்கும்படி,

தாராள மனதுடன் கோரியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, நாளை காலை 9–00 மணிக்கு எனது அறையில் அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் கூட்டப்பட்டு, இன்று நடைபெற்ற நிகழ்ச்சி குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்களின் கருத்துகளையும் கேட்டு முடிவு செய்யப்படும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அம்முடிவின் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27–5–2006) காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–28 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு விற்பனை செய்யப்படும் மீன்பிடி வலை, இழை மற்றும் நைலான் கயிறு, மீன்பிடி முறுக்குக் கயிறு, மீன்பிடி வலை, மிதவைகள் மற்றும் மீன்பிடி வலை, தூண்டில் பளுக்கள் ஆகியவற்றின் விற்பனைக்காக யாதொரு வணிகரால் செலுத்தத்தக்க விற்பனை வரியினை விலக்களித்தது குறித்து வணிக வரிகள் துறையின் 17–11–2005 ஆம் நாளிட்ட 116 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ், ஆங்கிலம்)

2. 2006 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

*****





## இணைப்பு

(.....ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

Hon'ble Members of the Legislative Assembly,

Vanakkam. It gives me immense pleasure to address you during the first session of the newly elected Thirteenth Legislative Assembly. I compliment and welcome all of you elected by the people of Tamil Nadu as Members of this august House which is the symbol of Democracy.

2. Politics is an integral part of every activity of the human society, like the invisible omnipresence of air, one of the Pancha Boothas comprising of water, fire, earth, sky and air which are essential for the living organisms and the world around. Although the style of politics can be democratic or dictatorial, similar to air, which can either be pure or impure, our nation has gloriously preserved its democratic polity instead of merely shunning the very term politics. In particular, the Uthiramerur stone edicts are a historical proof that the Tamils, through the Kudavolai system, followed the democratic principle of the rule of the people, even during the times of the Chola Kings. From the fact that guidelines had been prescribed even then as inscribed in those edicts that the elected Heads and Members of the local bodies are to be persons of integrity and probity and that only such qualified people could contest for public offices and serve in public life, the need for a much more exacting code of conduct for the democratic polity of our nation which had fully moved from the rule of kings to the rule of the people is self evident. With the trust that the Hon'ble Members have the maturity to fully adhere to this code of conduct and the hope that they would act accordingly, I present before you the vision document of the policies and programmes of this Government in the coming years.

3. Our ultimate goal is to achieve autonomy for the States and Federalism at the Centre through Constitutional means. For a State Government to perform effectively in ensuring the welfare of the people, it is imperative that a cordial relationship exists between the Union and the State Governments. Arignar

Anna, while assuming office had observed that a confrontationist attitude towards the Union Government should be avoided. This Government, following his footsteps, extending a hand of co-operation to the Union Government and at the same time voicing its rights, will adopt an approach which is beneficial to the State and will truthfully endeavour to secure its rights and obtain all necessary assistance.

4. It is vital that law and order is properly maintained for ensuring the overall development of the State and peaceful life. This Government will vigilantly maintain law and order to make Tamil Nadu a haven of peace. Also, this Government will provide an administration ensuring equity and equal justice to all sections of the society.

5. The economic growth rate of Tamil Nadu has been less than the national average. This Government is determined to reverse this trend and usher in an era of rapid growth.

6. The Union Government had released an advance assistance of Rs.1000 crores, a scale of relief which has not been provided to any other flood affected State, in order to provide immediate relief to the people severely affected by the floods that ravaged the State last year. This Government will execute permanent restoration of the damaged infrastructure like riverbanks, tanks and roads with the financial assistance from NABARD.

7. Due to the enormous misery caused by recurrent droughts and floods, the very future of the farmers of Tamil Nadu had become bleak and a question mark. The farmers of the State were groping in the dark without a sense of direction and purpose. Their debt burden hung like a sword over their heads. With a view to liberating the farmers from this great distress, this Government, as promised in the election manifesto, has completely waived the entire debt burden of farmers to the tune of Rs.7000 crores from the co-operative banks on the very day of this Government being sworn in and thereby has lit a light in the lives of farmers.

8. The Budget Speech of the previous Government in 2001-2002 had stated that there are 20 lakh hectares, that is, 50 lakh acres of wastelands in Tamil Nadu. As stated in the DMK election manifesto, expeditious action will be taken to reclaim these wastelands and distribute to landless farmers two acres each.





9. Steps will be taken to revive the "Uzhavar Sandhai" scheme, which benefited both the cultivators and the consumers with all the facilities which were previously available.

10. The scheme of free power supply to all farmers for agricultural operations implemented by the DMK Government in 1990, which had faced some obstacles in the past and is presently in vogue, will be continued.

11. In a situation where the talks for sharing of the waters of river Cauvery, commencing from 1968 when the present Chief Minister was the Minister for Public Works in the Council of Ministers headed by Arignar Anna, in which many Chief Ministers who assumed office in the States of Tamil Nadu, Karnataka, Kerala and Pondicherry have taken part in the presence of Union Ministers, have not come to a conclusion till now, the final award of the Cauvery Tribunal is expected this year after a wait of 38 years with the expectation that the award will be just and the day for its implementation would dawn very soon. In the meantime, this Government urges the Union Government to fully implement the interim award of the Tribunal. Necessary measures will be taken to implement the orders of the Hon'ble Supreme Court permitting the increase in the height of Mullai Periyar Dam. This Government will take necessary steps to prevent the attempts to construct a dam across the Palar river in Andhra Pradesh, which will have serious adverse impact on the farmers in the northern districts of the State.

12. This Government in its previous regime during 1996-2001 had successfully implemented the World Bank assisted Water Resources Consolidation Project earning all round appreciation. As a follow on project, this Government will impress upon the World Bank to accord early approval and provide necessary financial assistance for implementation of the Tamil Nadu Irrigated Agriculture Modernisation and Water Resource Management (IAMWARM) Project.

13. As the Peninsular Rivers Link Project is the only permanent solution for the water deficit State like Tamil Nadu, this Government will urge the Union Government for expeditious implementation of this project.

14. The clarion call given by the former Union Minister for Commerce, late Murasoli Maran during the Doha Round of Negotiations of the World Trade Organisation ensured that the interests of Indian farmers were protected. This Government, while recalling his historic contribution at this juncture, urges the

Union Government to ensure that the agricultural sector is not adversely affected by any Agreement that may be entered into under the World Trade Organization regime in future.

15. The Welfare Boards for the workers employed in the unorganized sector will be rejuvenated. The Palm Workers Welfare Board will be revived and the demands of those employed in Palm based vocations will be considered and necessary measures taken.

16. The provision of quality rice at an affordable price and ensuring food security to the people has always been a priority of this Government. With a view to implementing this objective, as stated in the election manifesto, it has been ordered that all families with rice cards will be provided quality rice at a price of Rs.2/- per kilogram under the Public Distribution System with effect from 3rd June, 2006.

17. This Government will take necessary action to provide Kerosene to the new family card holders also by obtaining additional allocation from the Union Government.

18. The Union Government under the able leadership of the Hon'ble Prime Minister Thiru Manmohan Singh with the valuable guidance of Thirumathi Sonia Gandhi and the constructive support of the Hon'ble Union Minister Thiru Arjun Singh has recognized and conferred the status of Classical Language to Tamil, thus realising the longstanding dream of Tamils. This Government would urge the Union Government to institute classical language awards in the name of Tholkappiar and Thiruvalluvar. Also, this Government will continue to impress upon the Union Government to implement the longstanding demand of making Tamil as one of the official languages of the Union. The ferry services to visit the statue of Saint Thiruvalluvar at Kanyakumari will be modernized. In addition, this Government will urge the Union Government to declare Thirukkural as a National Book. The works have commenced for reinstalling the statue of Kannagi, the cultural symbol of Tamils, on the evening of the 3rd June at the same site on the Beach road from where it was removed.

19. Overcoming all obstacles, this Government is determined to take early action in consultation with educationists to ensure that all students studying in schools in Tamil Nadu will compulsorily learn Tamil as one of the subjects from the ensuing academic year.



20. This Government has ordered that 15th July, the birth anniversary of the great leader Kamarajar, shall be celebrated as Educational Development Day in all schools and that egg will be provided twice a week (on Monday and Wednesday) along with nutritious meal from that day.

21. As promised in the DMK election manifesto, with a view to improving the quality of education, the teachers now employed under contract on consolidated pay in Government schools will be given time scale of pay hereafter. All vacant teaching posts in Government schools and Colleges will be filled up on regular time scale of pay. All Government schools will be provided with computers in a phased manner in the next three years.

22. The confusion that is prevailing now in the admissions to professional courses will be cleared and the admission procedure streamlined.

23. The Common Entrance Examination for admission to professional courses has become highly expensive and a source of unnecessary hardship for the students. With a view to ensuring a level playing field to students from rural areas and poor families and those from urban areas, this Government will constitute a Committee of educational experts to recommend suitable measures for abolition of Common Entrance Examination from the academic year 2007-2008.

24. The present self supporting courses in Government Colleges, which can be availed only by the affluent students, will be converted into regular courses and the fees will be fixed accordingly.

25. The fees to the Engineering and Medical courses in Government Colleges which were increased manifold by the previous Government, will be reduced.

26. In pursuance of the 93rd Constitutional Amendment Act, this Government will bring necessary legislation specifically providing for mandatory reservation for Scheduled Castes, Scheduled Tribes, Backward Classes, Most Backward Classes and other Denotified Communities in unaided non-minority self financing educational institutions.

27. A resolution to convey wholehearted support to the endeavour of the Union Government to introduce reservation for Other Backward Classes in higher

educational institutions like I.I.Ts and I.I.Ms under the control of the Union Government will be moved during the current session of this House.

28. This Government will continue the scheme of providing free bicycles to +2 students, implemented by the previous Government with the Central assistance of Rs.20 crores during 2001-2002 and Rs.6 crores during 2002-2003 and continued further from the State funds.

29. During the previous regime, The Tamil Nadu Prohibition of Forcible Conversion of Religion Act was brought into force and due to the strong demand that it should be withdrawn, an Ordinance was promulgated on 18.5.2004 repealing this Act. Since the Ordinance was not replaced by a Bill before the Legislature, the above Act for ban on conversions still stands unrepealed. In accordance with the stand taken recently by the Government of India that India is firm in ensuring the fundamental right to freedom of expression and the right to freedom of religion as provided in the Constitution, this Government will introduce a Bill in the current session of the Legislative Assembly to repeal the Tamil Nadu Prohibition of Forcible Conversion of Religion Act brought by the previous Government.

30. The egalitarian decision of this Government to issue orders providing for qualified and trained persons from all communities to be appointed as Archakas in Hindu temples, thus removing a thorn in the heart of Periyar, has been welcomed by all. Necessary training for this purpose will commence soon.

31. This Government will press the Union Government to bring an Act for the entire Country, identical to the Act legalizing self respect marriages in Tamil Nadu enacted during the Chief Ministership of Arignar Anna.

32. This Government will be easily accessible to investors, and function as their ally, providing all required facilities to them for establishing industries. In order to encourage the small scale sector which has tremendous employment generation potential the scheme of providing capital subsidy assistance to small scale industries established in industrially backward areas of the State will be revived by this Government.

33. Considering the growth and multiple dimensions of the Information Technology Sector, this Government will frame a new policy to encourage this sector to increase software production and exports and employment generation.





34. All vacancies in the Government hospitals will be filled up immediately on regular time scale of pay. The 'Varumun Kappom' Scheme of special medical camps conducted by specialist doctors in the villages will be implemented again.

35. This Government is determined to eradicate the abhorrent practice of manual scavenging in any form. Alternative vocations through self employment will be provided to these workers and their dependents.

36. This Government will accord high priority for the good upkeep of the road network in the State. While ensuring adequate maintenance, this Government will make the required investment in widening and upgrading the high-density road corridors in the State.

37. This Government will focus on upgrading the infrastructural facilities in rural areas. Main streets in villages will be paved with concrete roads in a phased manner. This Government will endeavour to provide link roads to all rural habitations with a population of 500 or above. Sodium vapour lamps will be fitted at central locations in villages where people normally gather.

38. A comprehensive infrastructure development plan for Chennai Metropolitan area will be implemented to fulfill the growing infrastructural needs of the City. As a part of this plan, satellite towns will be established near Chennai. Similar satellite towns will be established near other Municipal Corporation areas. The Perambur flyover project started by this Government, which had come to a standstill, will be expeditiously completed. With a view to managing the fast growing traffic in Chennai City, the Metro Rail Project, will be implemented on the lines of similar projects in Delhi and Kolkata. This Government will urge the Union Government to take expeditious action for the expansion plan of Chennai Airport having regard to the ever increasing air passenger traffic.

39. The seawater desalination plant for Chennai City will be established with the assistance already announced by the United Progressive Alliance Government at the Centre. In addition, underground sewerage schemes will be implemented in all municipal areas of the State in a phased manner.

40. This Government will ensure supply of electricity without power cuts throughout the State. As the demand for power has been increasing day by day, additional power generation units will be established in the North Chennai and Mettur thermal power plants of the Tamil Nadu Electricity Board.

[2006 மே 26

41. The priority always accorded by this Government for the efficient functioning of the public transport system used everyday by the common man will continue. The Mini Bus scheme, introduced during the previous tenure of this Government and widely welcomed by the people, will be revived.

42. This Government has always been concerned about the welfare of workers who are the backbone of the nation and will function as the guardian of the rights of the working class and their legal entitlements.

43. The schemes for the welfare of traders will be revived, removing the slackness that has crept in the functioning of the Traders Welfare Board established for the welfare of traders.

44. This Government has always cared for the welfare of the Government employees and teachers. This Government, fully realizing the importance of the role of the Government employees in delivering the schemes of the Government to the people, will continue to safeguard their interests. The interests of teachers, the architects of the future society, will be duly protected. The Tamil Nadu Essential Services Maintenance Act (TESMA), which is against the interests of the Government employees will be repealed. Immediate steps will be taken to fill up the existing vacancies in various departments of the Government. The upper age limit for entering into Government service will be relaxed by five years, to enable the unemployed youth affected by the ban order on recruitment, to apply for Government jobs.

45. Necessary steps will be taken to ensure that the concessions available to the Adi Dravidars are extended to Adi Dravidars who follow other religions.

46. Necessary Legislation for providing reservation for Christian and Muslim religious minorities in all educational institutions and employment opportunities will be introduced.

47. A Tourism Master Plan for the entire State will be formulated to improve the infrastructural facilities required by the rapidly growing tourist traffic to this State and to fully realise the employment generation potential of this sector.

48. A statue, in memory of the versatile actor late Sivaji Ganesan will be unveiled opposite to the office of the Director General of Police at Kamarajar Salai on his death anniversary on the coming 21st of July.



2006 மே 26]

49. As a recreational means for women and enabling them to acquire general knowledge, the scheme of distribution of free colour television sets will be launched this year on the eve of the triple celeberations marking the birth anniversaries of Arignar Anna and Thanthai Periyar and implemented in a phased manner.

50. This Government is determined to improve the quality of life of the weavers and increase the exports of yarn, cloth and garments from Tamil Nadu so that Tamil Nadu takes full advantage of the recent changes in the world textile trade.

51. The elections to the Co-operative institutions, will be conducted enabling them to function democratically. The State Government will reiterate its request to the Union Government to bring necessary legislative changes to remove the defects in the present three tier structure of rural local bodies.

52. This Government of the people of Tamil Nadu desires that the problem of Sri Lankan Tamils, which has been causing concern and has attracted the attention of the Tamils worldwide, should be resolved early through a process of peaceful dialogue.

53. Necessary measures will be undertaken to safeguard the traditional fishing rights of fishermen of Tamil Nadu to undertake fishing activities near Kachcha Theevu and to remove the difficulties faced by them. Fishing harbours and cold storage facilities needed by the fishermen will be established.

54. The longstanding dream of the people of Tamil Nadu, the Sethusamudram Canal Project is being implemented by the United Progressive Alliance Government at the Centre at a cost of Rs.2427 crores. This Government will render all co-operation to the Union Government to complete this scheme devoid of any obstacle within the targeted date.

55. The Moovalur Ramamirtham Ammaiyar Memorial Marriage Assistance scheme which provided marriage assistance for poor girls will be revived, as promised in DMK election manifesto. The financial assistance provided under this scheme will be enhanced from Rs.10,000/- to Rs.15,000/-.

56. The DMK Government had pioneered the formation of Women Self Help Groups in 1989 and has always acted as a catalyst for their effective functioning. This Government will make all-out efforts to nurture and strengthen

[2006 மே 26

the Self Help Group Movement which has spread all over the State. Necessary measures will be taken to revive the 'Poomaalai' Scheme, started by the DMK Government to provide marketing avenues for the products produced by the Self Help Groups. A scheme of Self Help Groups for unemployed youth will be started soon, on the lines of Women Self Help Groups.

57. This Government will undertake necessary action for enacting the necessary Constitutional amendment to revive the Legislative Council.

58. This Government is happy to announce that water for irrigation will be released from the Mettur Reservoir on the 12th of June, bringing joy to the farmers of Cauvery Delta as the water storage in the Mettur Reservoir is comfortable this year and prospects for a normal monsoon are bright. We have taken immediate action for expeditious desilting of rivers and channels to facilitate irrigation.

59. In an act never witnessed in Tamil Nadu, the Hon'ble Chief Minister Kalaignar M. Karunanidhi signed three files in the presence of thousands of people in the same auditorium where the new Council of Ministers was sworn in to mark the commencement of the implementation of the election promises. This novel deed, signifying a new chapter in the annals of democracy, will be etched in our memories forever.

60. I have the firm belief that Hon'ble Members of this august House will use this opportunity to serve Tamil Nadu and its people, adding to the strength of democracy in this State and alleviate the problems of people. I do not have even an iota of doubt that the Hon'ble Members would enlighten this House of high repute with their contribution and would definitely follow the great traditions of this House. I conclude this address with the assurance that this Government, which has assumed office with the vow of doing what has been promised and promising only what could be done, will fulfill its promises in the ensuing Budget and thereafter in a phased manner and will provide an effective and caring governance to the people and nurture the growth of the State across all sectors while ensuring that the fruits of this growth reach all sections of the society. Vanakkam. Jai Hind.



2006 மே 26]

*மாண்புமிகு சட்டப்பேரவை உறுப்பினர்களே,*

*வணக்கம். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்த பதின்மூன்றாவது சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடரில் உங்களிடையே உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஜனநாயகத்தின் அடையாளச் சின்னமான இப்பேரவையின் உறுப்பினர்களாக தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உங்கள் அனைவரையும் வரவேற்று வாழ்த்தி மகிழ்கிறேன்.*

*2. நீர், நெருப்பு, மண், விண், காற்று ஆகியவை உலகிற்கும், உயிரினங்களுக்கும் தேவைப்படும் பஞ்ச பூதங்களின் பட்டியலில் இருப்பினும் – இவற்றில் காற்று எப்படி கண்ணுக்குத் தெரியாமல் அனைத்திலும் கலந்திருக்கிறதோ; அவ்வாறு சமுதாயத்தின் ஒவ்வொரு அசைவிலும், அரசியலும் கலந்திருக்கிறது. அந்தக் காற்று தூய்மையானதாகவோ அல்லது தூய்மையற்றதாகவோ இருப்பது போல அரசியலும் ஜனநாயக மாண்புடையதாகவோ சர்வாதிகாரத் தன்மை கொண்டதாகவோ இருவகைப்படுமெனினும், அதற்காக அரசியல் என்ற சொல்லே கூடாது என அறவே வெறுத்து ஒதுக்கி விடாமல்; ஏற்றுக் கொள்ளத்தக்கதான ஜனநாயக அரசியலை இந்தியத் திருநாடு போற்றிப் பாதுகாத்து வருகிறது. அதிலும் குறிப்பாகவும், சிறப்பாகவும் மக்களாட்சித் தத்துவமெனும் ஜனநாயகக் கோட்பாட்டினை பழம்பெரும் சோழ மன்னர்கள் காலத்திலேயே குடவோலை முறையின் வாயிலாக தமிழ் மக்கள் கடைப்பிடித்தார்கள் என்பதற்கான வரலாற்றுச் சான்றாக 'உத்திரமேரூர்' கல்வெட்டுகள் இப்போதும் விளங்கிக் கொண்டிருக்கின்றன. ஊழலற்றவர்களாக, நாணயமும், ஒழுக்கமும் உள்ளவர்களாக அக்கால ஊராட்சி நிர்வாகத் தலைவர்களும், உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான வரைமுறைகள் வகுக்கப் பெற்று; அத்தகுதி பெற்றவர்களே போட்டியிடவும் – பொதுப்பணி ஆற்றிடவும் உரிமை பெற முடிந்தது என்பதை – தமிழகத்தின் பழைய கல்வெட்டுகள் – எடுத்துக் காட்டுவதிலிருந்து, முடியாட்சி முறையிலிருந்து முற்றிலும் குடியாட்சி முறைக்கு மாறி விட்ட நாட்டுக்கு எவ்வளவு தூய்மையானதும், துல்லியமானதுமான ஜனநாயக அரசியல் கோட்பாடு தேவைப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம். அந்தக் கோட்பாட்டை நூற்றுக்கு நூறு அப்படியே ஏற்றுக் கொள்ளும் மனப் பக்குவம் பெற்று அரசியல் பண்பாட்டின் வேர்களாகவும், விழுதுகளாகவும் திகழ்வோம் என்ற உறுதிப்பாட்டுடன் இந்த மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் செயல்பட வேண்டுமென்ற விழைவுடனும்; செயல்படுவீர்கள் என்ற*

நம்பிக்கையுடனும்; இந்த அரசின் எதிர்கால செயல் திட்டங்களுக்கான வழிகாட்டும் கொள்கைக் குறிப்பு ஏடாக இந்த உரையை உங்கள் முன் வைக்கிறேன்.

3. நமது முக்கிய குறிக்கோளான மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி (Autonomy for the States; Federalism at the Centre) என்ற நிலையை அரசியல் சட்ட மாற்றத்தின் மூலம் எய்திடும் வரையில் மக்கள் நலனைப் பாதுகாக்கும் வண்ணம் செயல்படுவதற்கு, மத்திய மாநில அரசுகளுக்கிடையே சுமுகமான உறவு நிலவிட வேண்டியது இன்றியமையாததாகும். மத்திய அரசுடன் மோதல் போக்கைத் தவிர்த்திட வேண்டும் என்று அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றபோது குறிப்பிட்டார்கள். அண்ணா வழியில் உறவுக்குக் கை கொடுத்து, உரிமைக்குக் குரல் கொடுக்கும் இவ்வரசு மாநிலத்திற்கு பயன் தரக்கூடிய அணுகுமுறையைப் பின்பற்றி, மத்திய அரசிடமிருந்து தேவையான திட்டங்களையும், உதவிகளையும், உரிமைகளையும் வாய்மையுடன் வாதாடிப் பெறும்.

4. மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அமைதியான வாழ்க்கைக்கும் சட்டம் ஒழுங்கு முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும். தமிழ்நாடு அமைதி நிறைந்த ஜனநாயக பூந்தோட்டமாகத் திகழும் வகையில், இவ்வரசு சட்டம் ஒழுங்கை விழிப்போடு பேணிப் பாதுகாத்திடும். அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமத்துவமும் சமநீதியும் கிடைத்திடும் நிர்வாகத்தை வழங்கிடும்.

5. நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதத்தை விட, தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி விகிதம் சரிந்து வீழ்ந்துள்ளது. இதனை மீட்டெடுத்து வளர்ச்சிப்பாதையில் இட்டுச் செல்ல இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

6. தமிழகத்தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பாதிப்பின்போது மக்களுக்கு உடனடியாக உதவிடும் வகையில், வேறு எந்தவொரு மாநிலத்திற்கும் தரப்படாத அளவிற்கு ரூபாய் 1000 கோடியை மத்திய அரசு முன் பணமாக வழங்கியது. ஆறுகள், ஏரிகள், சாலைகள் போன்ற பொதுக் கட்டமைப்பு வசதிகளுக்கு ஏற்பட்ட சேதங்களை நிரந்தரமாகச் சீரமைக்கும் பணிகளை நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் இந்த அரசு மேற்கொள்ளும்.

7. வெள்ளம் பாதித்தும் – வறட்சி வாட்டியும் – மாறி மாறி விளைந்த வேதனைகளால் விவசாயப் பெருங்குடி மக்களின் எதிர்





காலம் வினாக்குறியானதுடன்; இருண்ட காட்டுக்குள் திசையறியாமல் திக்குமுக்காடித் தவித்திட; அவர்கள் பட்ட கடன்களும் தலைக்கு மேல் தொங்கும் கொடுவாளாகப் பயமுறுத்திக் கொண்டிருக்க; அக்கொடுமையிலிருந்து அந்த விவசாயிகளை விடுவித்திட இந்த அரசு தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு ஏறத்தாழ ஏழாயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் சுமையை பதவியேற்ற நாளிலேயே அறவே ரத்து செய்து உழவர் தம் வாழ்வில் ஒளி விளக்கை ஏற்றி வைத்துள்ளது.

8. கடந்த ஆட்சியின் 2001–2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி தமிழகத்தில் உள்ள 20 இலட்சம் ஹெக்டேர் அதாவது 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்களை; தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டவாறு விவசாயத்துக்குப் பயன்படும் அளவுக்கு மேம்படுத்தி நிலமற்ற விவசாயிகளுக்கு தலா இரண்டு ஏக்கர் வழங்கிட முறையான ஏற்பாடுகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.

9. விளைவிப்போருக்கும், வாங்கி நுகர்வோருக்கும் மகிழ்ச்சியூட்டிடக் கூடிய வகையில் பயனளித்துக் கொண்டிருந்த 'உழவர் சந்தை' திட்டம்; முன்பிருந்த வாய்ப்பு வசதிகளுடன் மீண்டும் தொடர்வதற்கு இந்த அரசில் வழி வகை காணப்படும்.

10. தி.மு.க. ஆட்சியில் 1990 ஆம் ஆண்டு அனைத்து விவசாயிகளுக்கும் வழங்கப்பட்ட, விவசாயத்திற்கான இலவச மின்சாரத் திட்டம் – இடையே சில தடைகளைக் கடந்து இப்போது நடைமுறையில் இருப்பது; தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

11. அறிஞர் அண்ணா அவர்களின் அமைச்சரவையில் இன்றைய முதலமைச்சர், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது 1968 ஆம் ஆண்டு தொடங்கிய காவிரி நதி நீர்ப் பங்கீடு பேச்சுவார்த்தை; இடையில் தமிழ்நாட்டிலும் மற்றும் கர்நாடகம், கேரளம், புதுவை மாநிலங்களிலும் பல முதலமைச்சர்கள் பொறுப்புக்கு வந்து மத்திய அரசின் அமைச்சர்களின் முன்னால் பேச்சுவார்த்தை நடத்தியும் இதுவரையில் முழுமையாக நிறைவு பெறாத நிலையில் 38 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த ஆண்டு நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை எதிர்பார்த்தும் – அந்தத் தீர்ப்பு நல்ல தீர்ப்பாக அமைந்து அதனை நடைமுறைப்படுத்தும் காலம் கனிந்திடும் என்ற எதிர்பார்ப்புடனும்; அதற்குள்ளாக நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு முழுமையாக செயல்படுத்தப்படவும் மத்திய அரசு முனைப்பு காட்ட வேண்டுமென்றும் இவ்வரசு வலியுறுத்துகிறது. முல்லைப் பெரியாறு அணையின் உயரத்தை

அதிகரிக்க அனுமதித்துள்ள உச்ச நீதிமன்றத்தின் ஆணையினை நடைமுறைப்படுத்த ஆவன செய்யப்படும். மாநிலத்தின் வட மாவட்ட விவசாயிகளைப் பெரும் பாதிப்பிற்குள்ளாக்கும் வகையில் ஆந்திர மாநிலத்தில் பாலாற்றின் குறுக்கே மேற்கொள்ளப்பட்டு வரும் அணை கட்டும் பணியைத் தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

*12.* கடந்த *1996–2001* ஆம் ஆண்டு ஆட்சிக் காலத்தின்போது, உலக வங்கி உதவியுடன்கூடிய நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டம் அனைவரும் பாராட்டும் வண்ணம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக நீர்ப்பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல் மற்றும் நீர்வள மேலாண்மைத் திட்டத்தை (Irrigated Agriculture Modernisation and Water Resource Management) விரைவில் செயல்படுத்தத் தேவையான நிதி உதவியும், அனுமதியும் விரைவில் வழங்கிட உலக வங்கியை அணுகி இவ்வரசு உரிய முயற்சிகளை மேற்கொள்ளும்.

*13.* நீர்வளப் பற்றாக்குறை மாநிலமான தமிழகத்திற்கு, தென்னக நதிகளை இணைக்கும் திட்டம் ஒன்றே முதன்மையானத் தீர்வாக இருப்பதால், அதனை விரைந்து செயல்படுத்துமாறு இவ்வரசு மத்திய அரசை வலியுறுத்தும்.

*14.* உலக வர்த்தக அமைப்பின் டோகா (Doha) மாநாட்டுச் சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது, மத்திய அரசின் முன்னாள் வர்த்தகத் துறை அமைச்சர் மறைந்த முரசொலி மாறன் அவர்கள் விடுத்த அறைகூவல்தான், இந்திய விவசாயிகளின் நலனைப் பாதுகாத்தது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இவ்வரும் பணியை இத்தருணத்தில் நினைவுகூர்ந்து, எதிர்காலத்தில் உலக வர்த்தக அமைப்பின் கீழான எந்த ஒரு ஒப்பந்தத்தினாலும் வேளாண் தொழில் பாதிக்கப்படாமல் பாதுகாக்குமாறு மத்திய அரசை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும்.

*15.* அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டோருக்கான வாரியங்களைச் செம்மையாகச் செயல்படுத்துவதுடன், மேலும் பனை சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் நலனுக்காக பனைத் தொழிலாளர் நல வாரியம் மீண்டும் அமைத்து அவர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு ஆவன செய்யப்படும்.

*16.* தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவாறு; மக்கள் அனைவருக்கும் குறைந்த விலையில் தரமான அரிசி வழங்கப்பட வேண்டும் என்பதும்





மக்களுக்கு உணவுப் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்பதும், இவ்வரசின் குறிக்கோளாக இருந்து வருவதை செயல்படுத்திடும் வகையில், அரிசிக்கான குடும்ப அட்டை பெற்றுள்ள அனைத்துக் குடும்பத்தினருக்கும் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2/– என்ற விலையில் தரமான அரிசி பொது விநியோகத் திட்டத்தின்கீழ் ஜூன் மாதம் *3* ஆம் தேதி முதல் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

*17.* புதிதாகக் குடும்ப அட்டை பெற்றுள்ளவர்களுக்கும் மண்ணெண்ணெய் வழங்க மத்திய அரசிடமிருந்து கூடுதல் ஒதுக்கீடு பெற்றிட இவ்வரசு ஆவன செய்யும்.

*18.* தமிழர்களின் நீண்டகாலக் கனவை நனவாக்கும் வண்ணம், திருமதி சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலுடன், மாண்புமிகு மன்மோகன் சிங் அவர்களின் தலைமையில் அமைந்துள்ள மத்திய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கடந்த ஆண்டில் மத்திய அமைச்சர் மாண்புமிகு அர்ஜூன் சிங் அவர்களின் ஆக்கப்பூர்வ ஆதரவுடன் தமிழ் மொழியைச் செம்மொழியாக அங்கீகரித்துப் பெருமைப்படுத்தியுள்ளது. தொல்காப்பியர், திருவள்ளுவர் பெயர்களால் செம்மொழி விருதுகள் வழங்கப்படுவதற்கான இவ்வரசின் கோரிக்கை வலியுறுத்தப்படும். மேலும் தமிழ் மொழியை மத்திய அரசின் ஆட்சி மொழிகளுள் ஒன்றாக அறிவிக்க வேண்டுமென்ற நீண்டகாலக் கோரிக்கையை இவ்வரசு தொடர்ந்து வலியுறுத்தும். குமரிமுனையிலுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையை அருகில் சென்று காண்பதற்கான படகுப் போக்குவரத்து நவீனப்படுத்தப்படும். மேலும் திருக்குறளை தேசிய நூலாக அறிவிக்குமாறு மத்திய அரசை தொடர்ந்து இவ்வரசு வலியுறுத்தும். தமிழர்களுடைய பண்பாட்டுச் சின்னமான கண்ணகியின் சிலை மீண்டும் அதே இடத்தில் கடற்கரை சாலையில் வரும் ஜூன் திங்கள் மூன்றாம் நாள் மாலையில் நிறுவப்படப் பணிகள் தொடங்கப்பெற்றுள்ளன.

*19.* பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் அனைவரும் வரும் கல்வி ஆண்டு முதல் கட்டாயமாக தமிழை ஒரு பாடமாகப் பயின்றிட எதிர்ப்படும் இடையூறுகளைக் களைந்து, விரைவில் கல்வியாளர்களைக் கலந்து பேசி ஆணை பிறப்பிக்க இவ்வரசு உறுதி அளிக்கிறது.

*20.* பெருந்தலைவர் காமராசர் பிறந்த ஜூலை 15–ஐ கல்வி வளர்ச்சி நாளாக பள்ளிகளில் விழா எடுத்துக் கொண்டாடுவதென்ற இவ்வரசின் ஆணையையொட்டி, அந்நாள் முதல் சத்துணவுடன் வாரம் இரண்டு முறை (திங்கள், புதன்கிழமைகளில்) முட்டை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

21. தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையில் உறுதி அளித்தவாறு கல்வியின் தரத்தை உயர்த்தும் வகையில் அரசுப் பள்ளிகளில் தற்போது ஒப்பந்த முறையில் தொகுப்பூதியம் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இனி அந்த முறை மாற்றப்பட்டு, கால முறை ஊதியம் வழங்கப்படும். அரசுப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் உள்ள அனைத்துக் காலியிடங்களும் காலமுறை ஊதிய அடிப்படையில் நிரப்பப்படும். வரும் மூன்றாண்டுகளில் படிப்படியாக அனைத்து பள்ளிகளுக்கும் கணினி வழங்கப்படும்.

22. தொழிற்கல்விக்கான அனுமதி முறையில் தற்போது நிலவிவரும் குழப்பங்களை அகற்றி மாணவர்களைச் சேர்க்கும் முறை விரைவில் நெறிமுறைப்படுத்தப்படும்.

23. தொழிற்கல்விப் படிப்புகளுக்கான பொது நுழைவுத் தேர்வு மாணவர்களுக்கு தேவையற்ற ஒரு சுமையாகவும், செலவுமிக்கதாகவும் உள்ளது. எனவே, நகர்ப்புற மாணவர்களுக்கும் – கிராமப்புற மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் சமவாய்ப்பை அளிக்கும் பொருட்டு நுழைவுத் தேர்வை வரும் கல்வியாண்டான 2007–2008 முதல் உறுதியாக அகற்றிட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வது பற்றிப் பரிந்துரைக்கக் கல்வியாளர்கள் கொண்ட குழு ஒன்றை இவ்வரசு அமைத்திடும்.

24. தற்போது அரசுக் கல்லூரிகளில் வசதியுள்ள மாணவர்கள் மட்டுமே படிப்பதற்கு வாய்ப்பாக உள்ள 'சுயநிதிப் பாடப் பிரிவுகள்' பொதுவகையாக மாற்றப்பட்டு – மற்றப் பாடப் பிரிவுகளைப் போலவே கட்டணமும் நிர்ணயிக்கப்படும்.

25. அரசுக் கல்லூரிகளில் மருத்துவம், பொறியியல் ஆகிய படிப்புகளுக்கு கடந்த ஆட்சியில் பல மடங்காக உயர்த்தப்பட்ட கட்டணத் தொகை குறைக்கப்படும்.

26. அரசியல் சட்டத்தின் 93–வது திருத்தச் சட்டத்தைத் தொடர்ந்து, சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் நீங்கலாக மற்ற அரசு உதவி பெறாத அனைத்து தனியார் சுயநிதிக் கல்வி நிறுவனங்களில், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு ஊன்றுகோலாக விளங்கிடும் இட ஒதுக்கீட்டிற்கு வழிவகை செய்ய மிக விரைவில் சட்டம் இயற்றப்படும்.



27. மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு மேற்கொண்டுள்ள முயற்சியை வரவேற்று ஊக்கமளித்திடும் வகையில் இந்தக் கூட்டத் தொடரிலேயே உரிய தீர்மானம் கொண்டு வரப்படும்.

28. ப்ளஸ் 2 மாணவர்களுக்கு இலவச மிதி வண்டி வழங்கும் திட்டத்திற்காக 2001–2002 ஆம் ஆண்டில் ரூபாய் 20 கோடியும், 2002–2003 ஆம் ஆண்டில் ரூபாய் 6 கோடியும் மத்திய அரசிடம் இருந்து நிதி உதவி பெற்று, அதன் பின்னர் கடந்த ஆட்சியில் மாநில அரசின் நிதியிலிருந்து தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வந்த இலவச மிதி வண்டி வழங்கும் அத்திட்டத்தை இந்த அரசும் தொடர்ந்து நிறைவேற்றும்.

29. கடந்த ஆட்சியில் மத மாற்றத் தடைச் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டு; அதைத் திரும்பப் பெற வேண்டுமென்ற கோரிக்கை வலுப்பெற்று அதன் காரணமாக 18–5–2004 அன்று ஓர் அவசரச் சட்டத்தின்மூலம் அந்தச் சட்டம் திரும்பப் பெறப்பட்டாலும்; அதற்கான ஒப்புதலை சட்டப் பேரவையில் வைத்துப் பெற்றிடாத காரணத்தால்; அந்த மத மாற்றத் தடைச் சட்டம் இன்னமும் ரத்து ஆகாத நிலையில் உள்ளது. அண்மையில் இந்திய அரசு ஒரு நேர்வில்; "அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள சுதந்திரமாக சிந்தித்தல் – யாரும் எம்மதத்தையும் பின்பற்றி வழிபடுதல் – ஆகிய அடிப்படை உரிமைகளை அனைவருக்கும் வழங்குவதில் இந்தியா உறுதியாக இருக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளதற்கேற்ப; இந்த அரசு, கடந்த கால அரசினால் கொண்டு வரப்பட்ட மத மாற்றத் தடைச் சட்டத்தை முறைப்படி திரும்பப் பெறும் சட்டமுன்வடிவை இந்தக் கூட்டத் தொடரில் கொண்டு வரும்.

30. தந்தை பெரியார் அவர்களின் நெஞ்சிலுள்ள முள்ளை அகற்றிடும் வகையில் – உரிய பயிற்சியும் தகுதிகளும் உள்ள அனைத்துச் சாதியினரும் இந்து சமயத் திருக்கோவில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற சமத்துவக் கொள்கைக்கு இவ்வரசு செயல்வடிவம் கொடுத்திட முடிவு செய்து ஆணை பிறப்பித்துள்ள அருஞ்செயல் அனைவராலும் பாராட்டி வரவேற்கத்தக்க ஒன்றாகும். இந்த ஆணையை செயல்படுத்திட பயிற்சியும் முயற்சியும் விரைவில் தொடங்கப் பெறும்.

31. அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த போது சட்ட அங்கீகாரம் தந்து, தற்போது தமிழ்நாட்டில் நடைமுறையிலுள்ள சுயமரியாதைத் திருமணச் சீர்திருத்த சட்டத்தைத் தேசிய அளவில்

செயல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசிடம் இவ்வரசு வலியுறுத்தும்.

32. முதலீட்டாளர்கள் எளிதில் அணுகக்கூடிய வகையில் அவர்தம் நண்பனாக இவ்வரசு செயல்பட்டு, அவர்கள் தொழில் தொடங்குவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கும். அதிக வேலைவாய்ப்புகளை உருவாக்கவல்ல சிறுதொழில்களை ஊக்குவிக்கும் வகையில், மாநிலத்தில் தொழில்வளத்தில் பின்தங்கியுள்ள பகுதிகளில் ஏற்படுத்தப்படும் அனைத்து சிறு தொழில்களுக்கும் முன்னர் அளிக்கப்பட்டு வந்த முதலீட்டு மானிய நிதியுதவித் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

33. தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியையும் பன்முகப் பரிமாணங்களையும் கருத்தில் கொண்டு – அதற்கேற்பப் புதிய கொள்கை ஒன்றை வகுத்து – அத்துறைக்கு ஊக்கமளித்து மென்பொருள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியையும் வேலைவாய்ப்பையும் பெருக்கிட இவ்வரசு பாடுபடும்.

34. அரசு மருத்துவமனைகளிலுள்ள காலியிடங்கள் அனைத்தும் காலமுறை ஊதிய அடிப்படையில் உடனடியாக நிரப்பப்படும். கிராமங்களுக்கு நேரில் சென்று மருத்துவ வல்லுநர் குழுக்களால் நடத்தப்பட்டுவந்த 'வருமுன் காப்போம் திட்டம்' மீண்டும் நடைமுறைக்கு வரும்.

35. மனிதக் கழிவை மனிதனே துப்புரவு செய்து அகற்றும் இழிந்த வழக்கத்திற்கு முடிவு கட்ட இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. எனவே, துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்கும் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும்.

36. மாநிலத்தில் உள்ள சாலைகளைச் சிறந்த முறையில் பராமரிப்பதற்கு இவ்வரசு உயர் முக்கியத்துவம் அளிக்கும். சாலைகளைப் பராமரிப்பதுடன், அதிகப் போக்குவரத்து உள்ள சாலை வழித்தடங்களை அகலப்படுத்தவும், நிலை உயர்த்தவும் தேவைப்படும் முதலீடுகளை இவ்வரசு செய்யும்.

37. இவ்வரசு, ஊரகப் பகுதிகளில் உள்ள கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் தேவையான கவனம் செலுத்தும். கிராமங்களில் உள்ள முக்கியத் தெருக்கள் படிப்படியாகக் கான்கிரீட் சாலைகளாக மாற்றப்படும். ஐநூறுக்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஊரகப்



பகுதிகளுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும். கிராமங்களில் மக்கள் பொதுவாகக் கூடும் மையப் பகுதிகளில் சோடியம் ஆவி விளக்குகள் பொருத்தப்படும்.

38. வளர்ந்து வரும் சென்னை மாநகரத்தின் பல்வேறு தேவைகளை முழுவதும் நிறைவு செய்யும் வகையில் இப்பெருநகருக்கான ஒருங்கிணைந்த கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். அத்திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னைக்கு அருகில் புதிய புறநகரங்கள் (Satellite towns) அமைக்கப்படும். இதுபோன்றே மற்ற மாநகராட்சிப் பகுதிகளுக்கு அருகிலும் புற நகரங்கள் அமைக்கப்படும். இவ்வரசால் தொடங்கப்பட்டு பின்னர் பாதியில் நின்றுவிட்ட பெரம்பூர் மேம்பாலத்திட்டம் விரைவில் நிறைவு செய்யப்படும். சென்னை மாநகரத்தில் வளர்ந்து வரும் போக்குவரத்தைக் கையாள டெல்லி, கொல்கத்தா போன்ற பெரு நகரங்களில் அமைந்துள்ளவாறு மெட்ரோ ரயில் திட்டம் செயல்படுத்தப்படும். தொடர்ந்து பெருகிவரும் விமானப் பயணியர்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, சென்னை விமான நிலையத்தின் விரிவாக்கப் பணிகளுக்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ளுமாறு இவ்வரசு மத்திய அரசைக் கோரும்.

39. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு அறிவித்திருந்த நிதி உதவியைப் பெற்று கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் சென்னையில் விரைவில் செயல்படுத்தப்படும். மேலும் மாநிலத்திலுள்ள அனைத்து நகராட்சிகளிலும் கழிவுநீர் அகற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டம் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

40. மாநிலமெங்கும் மின்வெட்டின்றித் தொடர்ந்து மின்சாரம் வழங்கப்படுவதை இவ்வரசு உறுதி செய்யும். மின்சாரத்திற்கான தேவை நாளுக்குநாள் உயர்ந்து வருவதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வடசென்னை மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்களில் கூடுதல் மின் உற்பத்தி அலகுகள் நிறுவப்படும்.

41. பொதுமக்கள் தினந்தோறும் பெருமளவில் பயன்படுத்தும் பொதுத் துறை போக்குவரத்து நிறுவனங்கள் திறம்படச் செயல்படுவதற்கு இவ்வரசு எப்போதுமே அளித்து வந்துள்ள முன்னுரிமை தொடரும். இவ்வரசால் முன்பு அறிமுகப்படுத்தப்பட்டு, மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற 'மினி பஸ்' திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும்.

[2006 மே *26*

*42.* இவ்வரசு, நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் தொழிலாளர்களின் நலனில் எப்போதும் மிகுந்த அக்கறை கொண்டு உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளையும், அவர்களுக்குச் சட்டப்படி கிடைக்க வேண்டிய சலுகைகளையும் பாதுகாக்கும் காவலனாகத் திகழும்.

*43.* வணிகர் நலன் மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட வணிகர் நல வாரியத்தின் பணிகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவைக் களைந்து, வணிகர் நலத்திட்டங்கள் மீண்டும் முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

*44.* அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களின் நலனில் இவ்வரசு எப்போதுமே மிகுந்த அக்கறை காட்டி வந்துள்ளது. அரசின் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் பணியிலும் அரசு அலுவலர்களின் இன்றியமையாமையை நன்கு உணர்ந்துள்ள இவ்வரசு, அரசு அலுவலர்களின் நலனைத் தொடர்ந்து பாதுகாக்கும். எதிர்காலச் சமுதாயத்தைச் சீராகச் செதுக்கிடும் இன்றைய சிற்பிகளாம் ஆசிரியர்களின் நலனை உரிய முறையில் பாதுகாக்க முனைந்திடும். அரசு அலுவலர்களுக்கு எதிரான 'டெஸ்மா' சட்டம் முற்றிலும் நீக்கப்படும். அரசின் பல்வேறு துறைகளில் உள்ள காலியிடங்களை நிரப்ப உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வேலை நியமனத் தடை ஆணையினால் பாதிப்புக்குள்ளான இளைஞர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, இவ்வரசு, அரசுப் பணிக்கு விண்ணப்பிப்பதற்கான அதிகபட்ச வயது வரம்பை மேலும் ஐந்தாண்டுகள் வரை நீட்டிக்கும்.

*45.* ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்து மதங்களிலும் இருக்கின்ற ஆதி திராவிடர்களுக்கும் கிடைத்திட வழி வகை செய்யப்படும்.

*46.* சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த இஸ்லாமியர் மற்றும் கிறித்தவர்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு ஏற்படுத்துவதற்குத் தேவையான சட்டத் திருத்தம் கொண்டு வரப்படும்.

*47.* தமிழ்நாட்டில் நாள்தோறும் அதிக அளவில் வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், அதன்மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும் ஒட்டுமொத்தச் சுற்றுலாத் திட்டம் ஒன்று வகுக்கப்படும்.

*48.* நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நினைவு நாளான ஜூலை 21 அன்று – சென்னையில், கடற்கரை காமராஜர் சாலையில், காவல் துறை தலைமை அலுவலகத்திற்கு முன்பாக அவரது திருவுருவச் சிலை அமைக்கப்படும்.



2006 மே *26*]

*49.* மகளிருக்குப் பொழுது போக்காகவும், அவர்கள் பொது அறிவு பெற்றிடவும் வீடு தோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம், அறிஞர் அண்ணா பிறந்த, தந்தை பெரியார் பிறந்த முப்பெரும் விழாக்களையொட்டி இவ்வாண்டே தொடங்கப்பட்டு படிப்படியாக நிறைவேற்றப்படும்.

*50.* ஜவுளி வர்த்தகத் துறையில் உலகில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் முழுப்பயனையும் தமிழகம் பெற்றிடும் வகையில் தமிழ்நாட்டின் நூல், துணி மற்றும் ஆயத்த ஆடைகளின் ஏற்றுமதியைப் பெருக்கவும், நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இவ்வரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

*51.* கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்பட்டு, இச்சங்கங்கள் ஜனநாயக முறைப்படி செயல்பட வழிவகை செய்யப்படும். தற்போதுள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மூன்று அடுக்கு முறையினால் நிருவாகத்தில் ஏற்படும் குறைபாடுகளை அகற்றத் தேவையான சட்டத் திருத்தம் கொண்டு வர மத்திய அரசை இவ்வரசு வலியுறுத்தும்.

*52.* உலகத் தமிழர்களின் கவனத்தை ஈர்த்துள்ளதும், தொடர்ந்து கவலை அளித்துக் கொண்டிருப்பதுமான இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை அமைதி பேச்சுவார்த்தையின்மூலம் விரைவில் தீர்க்கப்பட வேண்டுமென்று தமிழ்நாட்டு மக்களின் இந்த அரசு விரும்புகிறது.

*53.* கச்சத்தீவு அருகில் மீன்பிடிக்கும் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடிப்பு உரிமைகளை நிலைநாட்டவும் தமிழக மீனவர்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் களையவும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மீனவர்களுக்குத் தேவையான மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் குளிர் பதன நிலையங்கள் உருவாக்கப்படும்.

*54.* தமிழக மக்களின் நீண்ட காலக் கனவான சேது சமுத்திரத் திட்டம், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசால் ரூபாய் *2,427* கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் நிறைவு பெறுவதற்கு தங்குதடையின்றி அனைத்து ஒத்துழைப்பையும் இவ்வரசு மத்திய அரசுக்கு வழங்கும்.

*55.* தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையில் அறிவித்தவாறு, ஏழைப் பெண்களின் திருமணத்திற்கான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது.

[2006 மே 26

மீண்டும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் நிதியுதவி ரூபாய் 10,000/–லிருந்து ரூபாய் 15,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

56. 1989 ஆம் ஆண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களை அமைத்து முன்னோடியாகவும், அவை திறம்பட செயல்படுவதற்கு ஒரு தூண்டுகோலாகவும் தி.மு.க. அரசு இருந்து வந்துள்ளது. ஆல்போல் பரந்து இருக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் இம்மாநிலத்தில் மேலும் வளர்ந்திடவும், வலுப்பெறவும் தேவையான அனைத்து முயற்சிகளையும் இவ்வரசு மேற்கொள்ளும். மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்க தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட ‘பூமாலை’ திட்டம் மீண்டும் சிறந்த முறையில் இயங்கிட வழிவகை செய்யப்படும். தற்போதுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களைப் போலவே வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு சுய உதவிக் குழுக்கள் திட்டம் விரைவில் துவங்கப்படும்.

57. சட்டமன்ற மேலவையைக் கொண்டு வரத் தேவையான அரசியல் சட்டத் திருத்தம் செய்ய இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

58. இந்த ஆண்டு மேட்டூர் நீர்த்தேக்கத்தில் போதிய அளவு நீர் இருப்பதாலும், பருவ மழை தொடர்கின்ற நல்ல அறிகுறி தென்படுவதாலும், காவிரிப் பாசனப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் மகிழத்தக்க வகையில், ஜூன் 12 ஆம் தேதி பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது என்பதைத் தெரிவிப்பதில் இவ்வரசு மகிழ்ச்சியடைகிறது. எனினும், பாசனத்திற்கு வசதியாக ஆறுகள், வாய்க்கால்களில் தூர்வாரும் வேலையைத் தொடங்கி துரிதப்படுத்தும் பணியை விரைந்து மேற்கொண்டுள்ளோம்.

59. தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத புதுமையாக – புதிய அமைச்சரவை பதவி ஏற்றுக்கொண்ட உடனேயே – அதே அரங்கத்தில், கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களுக்கிடையே, தி.மு. கழகத் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதன் அடையாளமாக – மூன்று கோப்புகளில் முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் கையெழுத்திட்டு, மக்களாட்சி வரலாற்றில் மாபெரும் அத்தியாயத்தைத் தொடங்கி வைத்திருப்பது என்றென்றும் நமது நினைவை விட்டகலாத நிகழ்ச்சியாகும்.



2006 மே 26]

60. தமிழ்நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் நற்பணி புரிந்திட மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கிடைத்துள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டின் ஜனநாயகத்திற்கு வலுவூட்டி, மக்களின் துயர் துடைத்து அவர்தம் நல்வாழ்வுக்குப் பாடுபடுவீர்கள் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது. போற்றிப் பாதுகாத்திட வேண்டிய புகழ்மிக்க மரபுகளைக் கொண்டுள்ள இந்தப் பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒளியூட்டக் கூடிய உயர்ந்த கருத்துக்களை வெளிப்படுத்தி மன்றத்தின் மாண்புகளை நிச்சயமாக பின்பற்றுவீர் என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயப்பாடு இல்லை. “சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்” என்று சூளுரைத்துப் பொறுப்பேற்றுள்ள இந்த அரசு, மேலும் வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிதிநிலை அறிக்கையிலும், அதனைத் தொடர்ந்து படிப்படியாகவும் நிறைவேற்றுவதுடன் மாநிலம் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடைவதற்கும், அவ்வளர்ச்சியின் பயன்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடைவதற்கும் திறன் மிக்க, அக்கறை கொண்ட நிர்வாகத்தை, தமிழக மக்களுக்குத் தரும் என்ற உறுதிமொழியோடு இந்த உரையை நிறைவு செய்கிறேன். வணக்கம். ஜெய்ஹிந்த்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227071
சென்னை-600 008

N.T.P. SUPPLIED BY THE DEPARTMENT
PRINTED AT GOVERNMENT CENTRAL PRESS, CHENNAI-600 079

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**110, Anna Salai,**
**Chennai-600 002.**

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.